19 வது வருடத்தில்
# விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm
மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338
416 .724 .7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton
சந்திப்புக்கு அருகாமையில்

நதி 19 | பாலம் 05 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MARCH 01, 2009

# இலங்கை மனித அவல நெருக்கடியில் ஐ.நா. தலையிடுமா?

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலமை தொடர்பாக அமெரிக்காவின் வெளிவிவகாரங்களுக்கு பொறுப்பான செனட் சபை நேற்று முன்நாள் செவ்வாய்கிழமை கூடி ஆராய்ந்துள்ளது. இக்குழுவே வெளிநாட்டுகளுக்கான உதவி நிதி ஒதுக்கீடுகளை மேற்பார்வை செய்வதுண்டு.

இந்த விவாதத்தின் போது மனித உரிமைகள் கண்காணிப்பகத்தைச் சேர்ந்த மூத்த ஆய்வாளர் அன்னா நெஸ்ராற் தனது உரையில் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் கடந்த 25 வருடங்களாக நடைபெற்று வரும் போரில் இரு தரப்பினரும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகின்றனர். வன்னியில் சிறிலங்கா அரசு பாதுகாப்பு பிரதேசங்களை பிரகடனப்படுத்தி உள்ளது. ஆனால், அந்த பாதுகாப்பு பிரதேசத்திற்குள் சிறி லங்கா படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களால் டசின் கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக அந்த பிரதேசத்தில் அடைக்கலம் புகுந்திருந்த மக்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக நாம் பல முறைப்பாடுகளை பெற்றுள்ளோம்.

தமது கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து மக்களை வெளியேறவிடாது விடுதலைப் புலிகள் தடுத்து வருகின்றனர். இலங்கையில் தோன்றியுள்ள மனிதாபிமான நெருக்கடிகள் தொடர்பான சிறப்பு விவாதம் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

சிறிலங்காவுக்கான முன்னாள் அமெரிக்க தூதுவர் ஜெப்.ஃ.ரி லுன்ஸ்ராட் தெரிவித்துள்ளதாவது:
பல தமிழ் மக்கள் கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளனர். ஆனால் இந்த தாக்குதல்கள் அரச குழுக்களினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன என்பது துன்பகரமானது. இந்த சம்பவங்கள் தொடர்பாக யாரும் தண்டிக்கப்படவில்லை. ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. விடுதலைப் புலிகள் மீது அரசு முழு அளவிலான போரை தொடங்கியதில் இருந்து மூத்த ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர், தாக்கப்பட்டுள்ளனர், மிரட்டப்பட்டுள்ளனர், துன்புறுத்தப்பட்டுள்ளனர். இந்த தாக்குதலின் பின்னணியில் அரசே இருப்பதாக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊடகத்துறை, இராஜதந்திர வட்டாரங்கள் போன்றவற்றை சேர்ந்த பலர் நம்புகின்றனர்.



இலங்கையின் எதிர்காலத்தை ஒழுங்கமைப்பதற்கு அனைத்துலக சமூகம் முக்கிய பங்கு வகிக்க வேண்டும். சிறிலங்காவுக்கான பொருளாதார உதவிகளை வழங்கும் அனைத்துலக கொடையாளிகள் நிபந்தனைகளை ஏற்படுத்த வேண்டும். இதில் சிறிலங்காவின் மனித உரிமை மேம்பாடுகள், இடம்பெயர்ந்த மக்களின் மீளக்குடியேற்றம், அதிகாரப்பரவலாக்கம் தொடர்பான நிபந்தனைகளும் இருத்தல் வேண்டும் என தெரிவித்துள்ளார்.

பென்சில்வேனியா மாநில செனட்டரும், தென்னாசிய மற்றும் மத்திய கிழக்கு பிராந்திய செனற் வெளிவிவகாரத் துணைக் குழுவின் தலைவருமான பெப் கேசி தெரிவித்துள்ளதாவது: மோதல்களில் ஈடுபடும் இரு தரப்பும் அரசியல் தீர்வைக்காண முன்வரவேண்டும். போர் நிறைவுபெற்றாலும் சிறிலங்கா அரசின் தொடர்ச்சியான இனப்பாகுபாடான நடவடிக்கைகளுக்கு பெரும்பாலான தமிழ் சமூகம் முகம்கொடுக்க வேண்டி இருக்கும். அதனால் மீண்டும் விடுதலைப் புலிகள் தோற்றம் பெறுவார்கள். எனவே அரசியல் தீர்வு அவசரமானது என தெரிவித்துள்ளார்.

இதேசமயம் உதயன், மற்றும் சுடரொளி பத்திரிகையாசிரியர் வித்தியாதரன் வெள்ளை வான் ஒன்றில் வந்த ஆயுததாரிகளால் வலுக்கட்டாயமாக கடத்தல் பாணியில் கூட்டிச்செல்லப்பட்டார்.

கொழும்பு கல்கிசைப் பகுதியில் தமது உறவினர் ஒருவரின் மரணச் சடங்கில் அவர் கலந்து கொண்டிருந்தவேளை, வெள்ளை வான் ஒன்றில் பொலிஸ் சீருடையிலும், சிவில் உடையிலும் ஆயுதங்களுடன் வந்த ஏழுபேர் கொண்ட குழு ஒன்றே அவரை வலுக்கட்டாயமாக வானில் ஏற்றிச் சென்றது.

பொலிஸ் சீருடையில் இருந்த மூவர், முதலில் வானிலிருந்து ஆயுதங்களுடன் இறங்கிவந்து வித்தியாதரனை வலுக்கட்டாயமாக கையில் பிடித்து இழுத்துச் செல்ல முயன்றனர். எனினும் அங்கு நின்ற 'உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகைகளின் நிர்வாக இயக்குநர் ஈ. சரவணபவன் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.

"எங்கே கொண்டுசெல்கிறீர்கள்?" என்று அவர் பொலிஸாரிடம் கேட்டார். அதற்கு பொலிஸார் "பொலிஸ் நிலையத்திற்கு" என்று கூறிவிட்டு மீண்டும் வித்தியாதரனை இழுத்தனர். அந்தவேளையில் குறித்த வெள்ளை வானில் இருந்து இறங்கிய, சிவில் உடை தரித்த நால்வர் உரத்துச் சத்தமிட்டு அங்கிருந்தோரை பயமுறுத்தியவாறு, அவ்விடத்துக்கு வந்து வித்தியாதரனை தரதரவென இழுத்துச் சென்று வானில் தூக்கிப் போட்டனர். அவர்களின் பலாத்காரத்துக்கு எதிர்ப்புத்தெரிவித்து குறுக்கே நின்றவர்களை அவர்கள் கீழே தள்ளி விழுத்தி விட்டு வானில் வேகமாகச் சென்றுவிட்டனர். இதன்போது நிர்வாக இயக்குநரும் வேறுசிலரும் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர்.

'வெள்ளை வான் கடத்தல்' பாணியில், பலாத்காரமாக மேற்கொள்ளப்பட்ட இந்தச் சம்பவம் குறித்து அரசியல்

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

**துரித பணமாற்றுச் சேவை**
- 50 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
- கனடாவில் தொடர்ந்து 17 வருடங்கள் ஒரே இடத்தில் சேவை
- தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
416.267.8221

REALTY EXECUTIVES
Sri Jayasiri
Broker of Record/President
Direct: 416-939-4343
Office: 905-209-7500
Fax: 905-209-7501
Realty Executives GTA Ltd. Brokerage
Executive Mortgage Inc.
HSBC Tower, Liberty Square
3601 Highway 7 East, Suite 1005
Markham ON L3R 0M3
Each office is independently owned and operated.

STANDARD MORTGAGES INC
ANANDA, M.Com, CA
Mortgage Specialist / Financial Consultant
Direct: 416-319-2520
Reliance
Financial & Investment Co Inc
MORTGAGES
▸Residential ▸Commercial ▸Line of Credit ▸Low Interest ▸40 Lenders ▸Pre-approval ▸Re-finance ▸Debt Consolidation ▸Bad or No Credit OK ▸Self-employed OK ▸New Immigrant OK ▸Private Funds also OK
We GET YOU MORTGAGE even if Banks say 'No'
INSURANCE
▸All Insurance Companies ▸Life ▸Critical illness ▸Disability ▸Health & Dental ▸Travel ▸Visitors ▸Mortgage
RESP ▸Govt. grants ▸Highest scholarships paid ▸Flexible
RRSP ▸Excellent growth ▸Reduced taxes ▸Investment loans
Don't miss our FREE SEMINAR on RRSP & REDUCING TAXES
Email: reliancefico@ymail.com, Fax: 647-342-2399

SATHYA SAIRAM DRIVING SCHOOL
- உங்களுக்கு பாஷை ஒரு பிரச்சினையா?
- பரீட்சை கேள்விகள் விளங்காததனால் வாகன எழுத்து பரீட்சையில் அல்லது வீதிப்பரீட்சையில் சித்தியடைய முடியவில்லையா? கவலை வேண்டாம்.
- உங்கள் வாகனம் சம்பந்தப்பட்ட எந்த பரீட்சையிலும் சித்தி அடைய வேண்டுமா?

அழையுங்கள் - 416-831-5217

அடமானக் கடன் செய்து கொடுப்பதே! என் பணி
Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com
CENTUM
Veedu Mortgages Inc.

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
1711 McCowan Rd. Suite #206 Scarborough, ON M1S 2Y3
*Independently Owned and Operated

கதிர்
GTA Square
SOLD OUT !
Last 7 Units Available
Middlefield & Finch
24hr. 416.856.6900
Office: 416.321.6969
Email: kathirs@rogers.com
Call me for a change
Don't Miss Out
Kathir S. Kathirkamanathan P.Eng.
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage
1711 McCowan Rd., #206, Toronto
Independently owned & operated

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife / Today Realty Ltd., Brokerage.
31 Progress Ave. Suite 210, Toronto
Independently owned and operated

VLAMBARAM, GTA SQUARE, 5215 FINCH AVENUE EAST, #201, TORONTO, ON M1S 0C2, CANADA TEL: 416-282-8059, FAX: 416-282-4978, e-mail: vlambaram@sympatico.ca, Web: www.Vlambaram.com

# பேரண்டக் கதை

## கெப்பினர்

சென்ற தடவையில் கெப்பினரின் கோள்களின் இயக்கங்களுக்கான மூன்று விதிகளையும் பார்த்தோம். இவற்றினை ரைக்கோவிடம் இருந்து பெற்ற தரவுகளை வைத்தே கெப்பினர் கண்டுபிடிக்கக் கூடியதாக, நிறுவக் கூடியதாக இருந்தது. கெப்பினருக்கு வானவியலில் பெரும் ஆர்வம் இருந்தது. ஆனால் சிறுவயதில் அம்மை நோயினால் பீடிக்கப்பட்டிருந்த படியால் அவரது பார்வை நன்றாக இருக்கவில்லை. ஆனாலும் பல விடயங்களின் முடிவுகளை ஒன்றாகத் தொகுத்து சிக்கல்களை தீர்ப்பதில் வல்லவராக இருந்தார் கெப்பினர். இந்தத் திறமையானது பொதுவாக எல்லோரிடமும், அதிலும் குறிப்பாக விஞ்ஞானிகளிடம் இருந்தாலும் கெப்பினரிடம் அது கொஞ்சம் கூடுதலாகவே இருந்தது தெரிகின்றது. இன்னொருவர், அயன்ஸ்ரைன். அயன்ஸ்ரைனுடைய மூளையின் வலுவான தொழிற்பாட்டினால் தான் பல முடிவுகளை ஒன்றாகக் கோர்த்து சார்புத் தத்துவங்களை அவரால் தரமுடிந்தது. அவர் போலவேதான் கெப்பினரும் தர்க்கரீதியிலான விஞ்ஞானி ஆவார்.

நல்ல சோதிடராக, வானவியலாளராக இருந்த கெப்பினர் நல்லதொரு பௌதீக விஞ்ஞானியாகவும் இருந்தார். பௌதீகவியலில் கூட அவரது பங்களிப்பு பெருமளவில் இருந்தது. கலிலியோ கலிலியைப் போல, கலிலியோவின் காலத்திலேயே வாழ்ந்த கெப்பினர், கலிலியோ தொலைக்காட்டி ஒன்றினை நிர்மானித்து, அத்தொலைக்காட்டியின் ஊடாக சனியின் சந்திரன்களை, செவ்வாயை, பார்த்ததை கெப்பினர் அறிந்து கொண்டார். தொலைக் காட்டிகள் அக்காலத்தில் தான் புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்டு இருந்தன. கலிலியோவினால் ஆக்கப்பட்ட, அல்லது அந்த உத்தியின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட தொலைக் காட்டிகள் எல்லாம் வலுகுறைந்தனவாக இருந்தன. ‘கலிலியோவின் தொலைக்காட்டியின் அமைப்பினைப்பார்த்த, கண்டறிந்து கொண்ட கெப்பினர், கலிலியோவின் தொலைக்காட்டியின் வலுவினையும் விடக் கூடியதானதும், பெரியதான பார்வைப் புலத்தினைக் கொண்டதுமான, இன்னொரு தொலைக்காட்டியை வடிவமைத்தார். அதனை ‘வானியல் தொலைக்காட்டி’ என அழைக்கின்றார். இந்த வானியல் தொலைக்காட்டியே பின்னர் அதிக அளவில் வான்பொருட்களை பார்ப்பதற்குப் பாவிக்கப்பட்டது. இன்றும் கூட இவ்விரு தொலைக்காட்டிகளும் (கூடவே நியூட்டனின் தொலைக்காட்டியும்) பௌதீகப் பாடத்தில் உயர் வகுப்புகளில் கற்பிக்கப்படுகின்றன.

ரைக்கோவினைப் போலவே கெப்பினரும் வானிலே ஒரு புதிய வெளிச்சத்தினைக் கண்டார். 1604ஆம் ஆண்டில் தோன்றிய அந்த பிரகாசமான வான்பொருளை ஓர் புதிய விண்மீன் என்றே கெப்பினர் நம்பினார். சோதிடரான கெப்பினர் இவ்விதம் புதிய விண்மீன்கள் ஒவ்வொரு 800 ஆண்டுகளுக்கும் ஒரு தடவை தோன்றுகின்றன எனக் கூறினார். உலகின் சோதிடநிலையில் ஆன சுழற்சிக்காலம் 800 ஆண்டுகள் எனக்கூறிய கெப்பினர், இதற்கு முன்னதாக 800 ஆண்டுகளின் முன்பும், அதற்கு முன்னதான 800 ஆண்டுகளின் முன்பும் இந்த வெள்ளிகள் (விண்மீன்கள்) தோன்றின என்பதைக் கூறினார். தமது காலத்திற்கு 1600



## பிரபஞ்சம் - 35

வருடங்களின் முன்னதாகக் தோன்றிய விண்மீன்தான் தேவபாலன் இயேசுவின் பிறப்பை அறிவித்த ‘பெத்தலகேம் வெள்ளி’ எனக்கூறினார். இது சரியானது போலத் தோன்றினாலும் இந்நாட்களில் வானவியலாளர்களின் ஆய்வின்படியே கெப்பினர் கண்டது சுப்பநோவா வெடிப்பு என்பதனை உறுதிப்படுத்தி இருக்கின்றார்கள். இன்னமும் விரிவடைந்து கொண்டு இருக்கும் அந்த சுப்ப நோவாவின் தூசுகளைக் குறிப்பதற்கு அதனை ‘கெப்பினர் சுப்பநோவா’ என அழைக்கின்றனர்.

கெப்பினர் எந்தவொரு மதச் சிக்கல் களுக்குள்ளும் சிக்காமல் இருந்ததினால் அவரால் இயல்பாகவே தமது முடிவுகளைத் தைரியமாகச் கூறமுடிந்தது எனக் கூறினேன் அல்லவா. ஆனால் அதுவே அவரது முடிவுக்கும் வழிகோலியது எனலாம். கெப்பினர் எந்தவொரு மதத்துடனும் ஒட்டுதல் இல்லாது இருந்ததினால் பிற்காலத்தில் வாழ்க்கை ஓட்டத்திற்கான வருமானம் கிடைக்கவில்லை. பெரும் பணச் சிக்கலுக்குள் அவதிப்பட வேண்டிவந்தது. அக்காலத்தில் சூனியக்காரிகளை ஒழிக்கும் இயக்கம் ஒன்று (அரச அனுசரணையுடன்) கெப்பினரின் தாயாரையும் சூனியக்காரி எனப் பிடித்துக் கொள்ள, பெருமளவு பணத்தைச் செலவு செய்து, தனது தாயாரை கெப்பினர் அச்சிக்கலில் இருந்து விடுவித்துக் கொண்டதினால் அவர் ஏறக்குறைய வெறும் கையினர் ஆகியிருந்தார். இந்நிலையில் தான் சுகவீனமுற்ற கெப்பினர் மருத்துவச் செலவிற்குப் பணவசதி இன்மையினால் தமது 56வது வயதில் இறந்தார். அவர் இன்னமும் சிறிது காலத்திற்கு இருந்திருக்கலாம். இருந்திருந்தால் அது உலகிற்கு பெரும் நல்வாய்ப்பாக இருந்திருக்கும் என்பது எனது எண்ணம்.

ஜேர்மனியருக்கும், நெதர்லாந்தினருக்கும் ஏற்பட்டிருந்த பெரும் நீண்டபோரின் விளைவாக, கெப்பினரின் கல்லறை கூட அழிக்கப்பட்டு விட்டது. கெப்பினரின் அரிய புத்தகங்கள் மட்டுமே இன்று வானவியலாளர்களினால், அவரது அடையாளமாக உள்ளன. இந்த மாபெரும் விஞ்ஞானி, வானவியலாளர் கெப்பினரின் விபரங் களை அறிய ஆர்வமுள்ளவர்கள் நூலகங்களில் இவர் பற்றிய புத்தகங்களில் இருந்து அறியலாம். இணையத்தளத்திலும் கெப்பினரின் விபரங்கள் தெளிவாக தரப்பட்டுள்ளன.

இத்துடன் கெப்பினர் பற்றிய விபரங்களை பேரண்டக்கதையின் வளர்ச்சியில் முடித்துக் கொண்டு அடுத்த தடவையில் இருந்து அடுத்த நாயகனான கலிலியோ கலிலியைப்பற்றிப் பார்ப்போம். கலிலியோ பற்றி நான் அதிகம் கூறத் தேவையில்லை. உலகறிந்த பெரும் விஞ்ஞானியல்லவா!



**- கனி -**

# கம்பியூட்டர் உலகம்



பயனுடைய தகவல்களை சேமித்து வைக்கவும், சுயமாகவும், விரைவாகவும் அவற்றை அலசி ஆராயவும் பயன்படும் சாதனம் கணினி ஆகும். கணினியில் பல நிரல்கள் செயல்படுத்தலாம். இதனால் கணினியில் பலவிதத் தகவல்களையும் கையாளலாம். எண்கணித செயல்பாடுகள், சொற்கள் சீராக்கம் போன்று பல செயல்களையும் செய்யலாம். இந்த அரிய குணத்தினால் கணினி மனிதன் கையில் ஒரு திறன் மிக்க கருவியாகத் திகழ்கிறது. இது மனிதனின் வாழ்க்கையை பல வழிகளில் எளியதாக்கிறது. மிகவும் சிக்கலான கணக்கு வழக்குகளை தீர்வுகாண்பதில் அவன் தன் கவனத்தை செலுத்த முடிகிறது. வழக்கமாக செய்யும் செயல்பாடுகளை கணினியிடம் விட்டுவிடலாம். இதன் மூலம் தனி நபர்கள், நிறுவனங்கள், நாடுகள் மற்றும் உலகிற்கே நன்மை தரும் செயல்களை செய்யலாம்.

கணினியால் சுயமாக எதுவும் செய்யமுடியாது. கணினியைக் கொண்டு பல சிக்கல்களுக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பதை நாம் தான் புரிந்து கொண்டு செயலாற்ற வேண்டும். இதற்கு கணினியின் செயல்பாட்டின் அடிப்படைக் கருத்துகளைத் தெரிந்து கொள்வது அவசியமாகும். நாம் பல பகுதிகளாக பிரிக்க பெற்ற கணினி ஆற்றல் மற்றும் செயல்திறனை இப்பொழுது ஆராயப்போகிறோம்.

**- Bala -**

1. வன்பொருள் (Hardware), மென்பொருள் (Software) போன்ற அடிப்படை பகுதிகள்.

2. கணினி எண்களை எவ்வாறு கையாள்கிறது.

3. கணினியின் கட்டுமாணத்தில் நுண்ணிய பகுதிகளின் அடிப்படை கூறுகள்.

4. மின்னஞ்சல், இணையம் போன்ற புதிய தொழில்நுட்ப தகவல்கள் மற்றும் அதன் பரிணாம வளர்ச்சிகளின் தொகுப்பு.

ஆகிய தகவல்களை நாம் தொடர்ந்து படிக்கப் போகிறோம். அடுத்து நாம் பார்க்க இருப்பது கணிப்பொறியின் கால வரலாறு.

தொடரும்.....

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**Vlambaram, GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, Toronto, ON M1S 0C2, Canada**
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED

HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969
145 Traders Blvd # 28, Mississauga -905.712.2666

# பனிக்கட்டியில் சறுக்கி விழுந்த பெண்ணுக்கு நகர சபை நட்டஈடு வழங்க வேண்டும் என நீதிமன்ற தீர்ப்பு!

## பனிக்கட்டியினுள் சறுக்கி விழுந்த பெண்ணுக்கு $33,949.39 சதம் நகர சபை வழங்க வேண்டும் என நீதிமன்ற தீர்ப்பு.

கொட்டும் பனிப்பொழிவில் வீதிகள், பாதையோரங்கள் எங்கும் ஆங்காங்கே இருக்கும் பனிகட்டிகள் யாவும் துப்பரவாக்காது இருந்து, இதில் மூன்றாவது நபர் எவராவது விழுந்து உடல்காயமுற்றால், இவ் வீதியினையோ அல்லது பாதையோரங் களையோ, வீட்டு முன் பகுதிகளையோ, துப்பரவாக்காது விட்ட தவறுக்கு எவர் பொறுப்பாக இருப்பாரோ, அவரே பாதிக்கப்பட்டவரின் நிலைமைக்கு பொறுப்பு எடுத்து நட்டஈடு வழங்க வேண்டும் என்று கனடாவில் உள்ள சட்டங்களின் அடிப்படையில் கடந்தமாதம் ரொறொன்ரோ நீதி மன்றத்தின் தீர்ப்பு ஒன்று அமைந்திருந்தது.


சிவ. பஞ்சலிங்கம் B.Com.,

(Licensed Insurance Broker)

காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:

416.321.0999


(பொதுவாக துப்புரவாக்காத பொறுப்புக்கு உரியவருக்கு காப்புறுதிகள் இருந்தால் தப்பித்து கொள்ளலாம். இல்லையென்றால் சொந்த பணத்திலேயே செலுத்தி தீர்க்க வேண்டும் என கனடாவின் சட்டங்களும், நீதி துறையும் துரத்துவதில் இருந்து தப்பவே முடியாது.)

இப்படி ஒரு சம்பவம் ஒன்பது வருடங்களுக்கு முன்னர் நடந்து ஒன்பது வருடங்களாக நிலுவையில் இருந்த இந்நட்ட ஈடு கோரிய வழக்கில் கடந்த மாதமே ரொறொன்ரோவின் நீதிமன்றால் தீர்ப்பு வழங்கப்பட்டது. ரொறொன்ரோ நகரில் கிறீன்வூட் பாதாள ரயில் நிலையத்திற்கு வெளியே வரும் (Greenwood subway exit) சிறு ஒழுங்கையில் ஒன்பது வருடங்களுக்கு முன்பு நடந்து வந்த பெண் ஒருவர் சறுக்கி விழுந்ததில் அவரது கை மூட்டு (Her wrist) எலும்பு உடைந்து, நிலத்துடன் தலை அடிபட்டு விழுந்ததில் தலையிலும் சிறு காயம் ஏற்பட்டது. இதுதான் நடந்த சம்பவம் ஆகும்.

தற்போது மருத்துவ தாதியாக இருக்கும், பல வருடங்களுக்கு முன்பு சறுக்கி விழுந்து காயமடைந்த இவ் 42 வயதான பெண்ணுக்கு, எற்பட்ட காயம், பாதிப்புகளின் மதிப்பீடுகளை வைத்து $33,948.39 சதம் மொத்தமாக ரொறொன்ரோ நகரசபை நட்டஈடாக வழங்க வேண்டும் என ஒன்ராரியோ உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. அல்பிரட் ஜே. ஸ்ரோங் (Alfred J. Stong) கடந்த மாதம் தீர்ப்பு வழங்கினார்.

ஒன்பது வருடங்களுக்கு முன்பு இவர் சறுக்கி விழுந்த ஒழுங்கை நடைபாதைப் பகுதி துப்பரவாக்க வேண்டிய பொறுப்பு ரொறொன்ரோ நகர சபைக்கே உரியது. பாதாள ரயில் பிரயாணிகள், அருகில் உள்ள டன்வோர்த் கொலிஜியேட் அன்ட் ரெக்னிக்கல் இன்ஸ்ரியூட் மாணவர்கள் என பலரும் நடந்து போகும் சிறு ஒழுங்கை ஆகும். இச்சிறு நடை-பாதை ஒழுங்கையை இச்சம்பவம் நடந்த பின்னும் பல நாட்கள் துப்பரவாக்காது நகர-சபை விட்டது இங்கு நீதிமன்றத்தில் ஆதாரங்களுடன் முன்வைக்கப்பட்டது.

உடல் காயமடைந்த இப்பெண், அந்த சம்பவம் நடந்த வருடம் தமது கல்விக்காக யோர்க் பல்கலைக்கழகத்திற்கு செலுத்திய பணம் 4000 டொலரும், இப்பாதிப்பினால் கல்வியினை தொடர முடியாது போன காரணமும் முன் வைக்கப்பட்டபோது அப்பணமும் இந்நட்ட ஈட்டு தொகையினுள் உள்ளடக்கப்படுகின்றது.

ரொறொன்ரோவில் உள்ள நடைபாதைகளை துப்பரவாக்குவதற்கும், பனிக்கட்டிகளை உருக்கும் இரசாயன உப்புகளை வீசுவதற்கும் என நகரசபை சுமார் 12 மில்லியன் டொலரை ஒவ்வொரு வருடமும் தங்களின் பட்ஜட்டில் செலவழிகின்றது. ஆனால் இத்தகைய பாதிப்புக்களினால் மொத்தமாக 2005ஆம் ஆண்டு புள்ளவிபரப்படி ரொறொன்ரோவில் 2040 நட்ட ஈடு கோரிய வழக்கு தாக்குதல் செய்யப்பட்டுள்ளது என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஆனால் சறுக்கி விழுந்து பாதிக்கப்பட்ட ஒருவர் ஆதாரபூர்வமாக தமது நட்டஈடு கோரலை முன் எடுக்கும்போது இத்தகைய சிவில் நட்டஈடு கோரும் வழக்கில் தீர்ப்பு வழங்க பல வருட காலம் எடுத்தாலும் ஏதோ ஒருவகையில் வெற்றியினை பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும்.

1. விழுந்த இடத்தினை உறுதிப்படுத்தும் வகையில், விழுந்த இடத்திலிருந்து வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட தனை நிரூபிக்கும் அம்புலன்ஸ் சேவையினரின் ஆதார பூர்வமான அறிக்கைகள்.

2. குறிப்பிட்ட பகுதியில் பனிக்கட்டிகள் துப்பரவாக்கப்படவில்லை என்பதனை திகதியுடன் விழும் கமராக்களினால் படம் பிடித்து, அப்படங்களின் மூலம் நிரூபித்தல்.

3. குறிப்பிட்ட இவ்இடத்தில் சறுக்கி விழுந்தது என்பதையும் அந்த நேரம் சறுக்கி விழும் ஆபத்து நிலைமை இருந்தது என்பதனையும் உறுதிபடுத்தும் சாட்சிகள்.

4. உடல் காயத்தின் அளவினை நிரூபிக்கும் மருத்துவ சிகிச்சை அறிக்கைகள்.

5. இவ் உடல் காயத்தினால் அன்றாட வாழ்வில் ஏற்பட்ட பாதிப்புகள்.

இப்படி எவ்வளவு எண்ணிக்கையில் ஆதாரங்கள் மூலம் நிரூபிக்கலாமோ அவ்வளவு தூரம் நிரூபிக்கப்படும் போதே நட்டஈடு கோரலில் வெற்றி எடுக்கும் சாதக நிலை உருவாகும். சரியான நிலையில் நிரூபிக்க முடியாது போனால் வழக்கில் சாதக-மான தீர்ப்பினை எதிர்பார்க்க முடியாது.

இதேநேரம் நட்டஈடு வழங்கப்போகும் காப்புறுதி கம்பனியும் (இது நகரசபையின் காப்புறுதி கம்பனியாகவும் இருக்கலாம். தனி நபர் வீடுகளின் காப்புறுதி கம்பனியாகவும் இருக்கலாம்)

தங்களின் செலவில் சட்ட நிபுணர்களை நியமித்து இப்பொறுப்பில் இருந்து தப்பித்துக் கொள்ள முயற்சிக்கும் அல்லது நட்டஈட்டு தொகையினை குறைத்து கொள்ள முயற்சிக்கலாம்.

இதற்காக தமது வாடிக்கையாளர்கள் சார்பில் காப்புறுதி கம்பனி பல ஆயிரங்களை செலவழிக்கும்.

இரு பக்கங்களின் வாத பிரதிவாத முடிவுகளின் பின்பு நீதிமன்றம் ஒரு முடிவுக்கு வரும்.



ஆதாரம் - ரொறொன்ரோ ஸ்ரார்


NEED MORTGAGE ADVICE?
Speak to an advisor



MSD Investments

- Mortgage Loans - 1st & 2nd
- Residential & Commercial
- Buying Home With Bad or Poor Credit
- Stated Income - Self Employed or Salaried
- Debt Consolidation
- Bankrupcy
- Refinance
- All kinds of Loans -
  1. Business Loans
  2. Credit Lines - Secured & Unsecured
  3. Personal Loans

*Are you paying lot of rent, Why not get your own home.* *Call for the expert advice*

647-344-3822 647-344-4340

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# குற்றவாளிகள்



**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

**துரதிஷ்டவசமாக பெரும்பாலான மனிதர்களுக்கு அவர்கள் வாழ்க்கையின் தீவிரமான சூழ்நிலைகள் அச்சம், கோபம், வெறுப்பு, ஆகியவை சார்ந்ததாகவே இருக்கிறது. அவர்களிடம் அன்பு தீவிரமாக இல்லை. அமைதி தீவிரமாக இல்ல. ஆனந்தம் என்பது தீவிரமாக இல்லை. எதிர்மறை உணர்வுகள் தான் தீவிரமாக இருக்கின்றன.**

பொவாகவே ஒரு குற்றவாளி என்று சமூகத்தில் குறிப்பிடப்படுபவர்களெல்லாம் தங்களைத் தாங்களே அந்த நிலைக்குத் தாழ்த்திக் கொண்டதால் குற்றவாளிகள் ஆகிறார்கள். ஒரு மனிதன் தனக்கு செய்து கொள்ளக் கூடிய மிகப் பெரிய தன்மையே தன்னைத் தாழ்த்திக் கொண்டு விலங்குநிலையிலிருந்து செயல்படுவதான். அது அந்த மனிதனுக்கு மகிழ்ச்சியையோ, அதிகாரத்தையோ அந்த விநாடிக்கு தரக்கூடும் என்றாலும் பல வகைகளில் அவனைப் பொறுத்தவரை அது ஒரு சோகம் தான். எனவே ஒருவர் குற்றம் செய்தவர். ஒருவர் பாதிக்கப்பட்டவர் என்று அல்ல. இருவருமே குற்றங்களுக்கு ஆளாகிறவர்கள்தான். இப்படி பலவிஷயங்கள் இந்த சமூகத்திலே நடைபெறுகின்றன. குறிப்பிட்ட ஒரு செயல் என்று இல்லை. பல விஷயங்கள் அப்படி நடைபெறுகின்றன. எனவே இவை நிகழ்வதற்கு நாம் அனுமதிக்க வேண்டுமா? இல்லை. இவை நிகழாமல் தடுக்க என்னென்ன செய்ய முடியுமோ அத்தனையும் செய்யவேண்டும்.

தொடர்புகளுக்கு: 416.300.3010
website: www.ishafoundation.org
www.ishayoga.org

ஆனால் இத்தகைய சம்பவங்கள் உலகில் நடக்கத்தான் செய்கின்றன. எனவே என்ன முடியுமோ அதைச் செய்யலாமே தவிர இதை முழுவதுமாக உங்களால் மாற்ற முடியாது. நீங்கள் அமானுஷ்ய ஆற்றல் பெற்ற ஒரு மனிதராக பலம் பெற்றால் கூட புற உலகை முழுமையாகக் கட்டுப்படுத்துகிற ஆற்றல் உங்களுக்கு இல்லை. அது உங்கள் நிறுவனமாகட்டும், உங்கள் குடும்பம் ஆகட்டும், உங்கள் உலகமாகட்டும் அதை முழுமையாகக் கட்டுப்படுத்துகிற ஆற்றல் உங்களுக்கு இல்லை.

ஆனால் உங்கள் உள்நிலையில் உங்களால் முழுக்கட்டுப்பாட்டைக் கொண்டு வரமுடியும். அது எப்போதுமே சாத்தியம். வெளிப்புறத்தில் கட்டுப்பாடு போய்விட்டது. ஏதோ சில காரணங்களுக்காக மனிதர்கள் கொலை செய்கிறார்கள், மானபங்கப் படுத்துகிறார்கள். எல்லா மோசமான விஷயங்களையும் செய்கிறார்கள். அப்படியானால் உங்கள் உள்நிலையும் கட்டுப்பாடற்ற நிலைக்குப் போக வேண்டுமா? வெளிச்சூழல்கள் கட்டுப்பாடற்ற நிலைக்கு போகிறபோது உங்கள் உள்நிலையை கட்டுபாட்டுக்குள் வைத்துக் கொள்வது மிக மிக முக்கியம்.

ஒரு மனிதர் பைத்தியக்காரத்தனமாக ஒரு பெருங்குற்றத்தை செய்விட்டார். அந்த மனிதர் மீதான கோபத்தினாலும், வெறுப்பினாலும், நீங்களும் பைத்தியக்காரத்தனத்துக்குப் போய் விடுவீர்களேயானால் உங்களுக்கும் அவருக்கும் என்ன வேறுபாடு? அவர் கற்பழித்தார். எனவே உங்களுக்கு அவரைக் கொல்ல வேண்டும். இரண்டுக்கும் என்ன வேறுபாடு? அதற்காக அந்த சூழலுக்கு ஏற்ப எதையும் செய்யக்கூடாது என்று பொருளல்ல. செய்யவேண்டியதைச் செய்ய வேண்டும். ஆனால் அதை கோபத்தோடோ, வெறுப்போடோ, செய்வதில் எந்தப் பயனும் இல்லை.

துரதிருஷ்டவசமாக உலகில் பலருக்கும் அச்சம், கோபம், வெறுப்பு போன்றவை தான் மிகத் தீவிரமான தருணங்களாக வாழ்வில் ஆகிவிட்டன. அவர்களின் அன்பு தீவிரமான நிலையை அடைந்த தில்லை. அமைதியைத் தீவிரமாக உணர்ந்த தில்லை. ஆனந்தத்தைத் தீவிரமாக உணர்ந்த தில்லை. ஆனால் எதிர்மறை உணர்வுகள் எல்லாவற்றையும் தீவிரமாக உணர்ந்திருக்கிறார் கள். எனவே எதிர்மறையாக செயல்படுகிற போதுதான் தங்களுக்கு அதிகாரம் இருப்பதாக அவர்கள் உணர்கிறார்கள்.

எப்படி நீங்கள் கோபத்தில் ஒரு அதிகாரத்தை உனருகிறீர்களோ அதுபோல மானபங்கப் படுத்துபவர் தன் காமத்தில் அதிகாரத்தை உனருகிறார். அவர் வாழ்வில் அவர் உணர்ந்த சக்திமிக்க தருணம் அதுதான். உடல்ரீதியாகத் தன்னை இன்னொருவர் மேல் பலவந்தப்படுத்துகிற போது அதை அதிகாரம் என்று அவர் கருதுகிறார். ஆகவேதான் அவர் அதைச் செய்கிறார். அதே காரணத்துக்காகத்தான் நீங்களும் கோபப்படுகிறீர் கள். இரண்டுக்கும் செயல்களில் வேண்டுமானால் வேறுபாடு இருக்கலாம். ஒருவரின் கோபம் சமூக ரீதியாக அங்கீகரிக்கப்பட்டு இன்னொன்று சமூக ரீதியான அங்கீகாரத்தைப் பெறாமல் இருக்கலாம். ஆனால் இந்த இரண்டு செயல்களுமே ஒரே அடிப்படையில் இருந்து எழுபவை.

நீங்கள் உலகை மாற்ற முடியும் என்று நினைக்கிறீர்களா? அல்லது கோபத்திலே தான் உங்களால் இயங்க முடியும் என்று கருகிறீர்களா? ஏன் அன்பின் அடிப்படையில் நீங்கள் இயங்கக் கூடாது? ஏன் பரிவின் அடிப்படையில் நீங்கள் நகர இயலாது? உங்களைச் சுற்றி இருக்கும் சூழ்நிலைக்கேற்ப உங்கள் அறிவை ஏன் நீங்கள் பயன்படுத்தக் கூடாது? அன்பு இல்லாவிட்டாலும் பரவாயில்லை. உங்கள் புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்தியாவது உங்களைச் சுற்றி இருக்கிற சமூகத்திற்கு என்ன வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். உங்கள் செயல்கள் அறிவிலிருந்து பூக்கிற போதுதான் அற்புதமான விஷயங்கள் நிகழுமே தவிர கோபத்திலிருந்து செய்கிற போது எதுவுமே நிகழாது.

ஒரு செயலுக்கு நீங்கள் எப்படி பதில்வினை ஆற்றுகிறீர்கள் என்பது - நீங்கள் யார்? உங்கள் தகுதிகள் என்னென்ன? ஒன்றைச் செய்வதற்கு உங்களிடம் என்னென்ன கருவிகள் இருக்கின்றன? நீங்கள் எந்தச் சூழலில் இருக்கின்றீர்கள்? என்பதையெல்லாம் பொறுத்திருக்கிறது. எல்லாச் சூழலுக்கும் நீங்கள் ஒரே விதமாக பதில்வினை ஆற்ற இயலாது. உங்களிடம் சக்தியும் வழியும் இருந்தால் ஒன்றை நன்றாகச் செய்யவேண்டு மென்றால் ஒருவிதத்தில் செயல்படலாம். உங்களுக்கு சக்தியும் வழிமுறையும் அந்த விநா டியில் இல்லையென்றால் அந்த விநாடி நீங்கள் அமைதியாக இருந்து பின்னர் என்ன செய்யலாம் என்று யோசிப்பீர்கள். ஆனால் இது வெறுப்புணர் விலோ பழி உணர்விலோ செய்யப்படக்கூடாது.

குற்றத்தை செய்தவருக்கும் சரி, பாதிக்கப்பட்டவருக்கும் சரி நீங்கள் இதனைச் செய்யக்கூடாது. ஏனென்றால் இருவருமே ஒருவிதத்தில் தங்கள் வாழ்க்கையைத் தாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். ஒருவர் தனக்கே அதைச் செய்து கொண்டிருக்கிறார். இன்னொருவருக்கோ யாரோ ஒருவர் அதைச் செய்திருக்கிறார். இருவருக்குமே இது நிகழக்கூடாது என்று நீங்கள் கருத வேண்டும். அப்போதுதான் நீங்கள் அன்பின் அடிப்படையில் இயங்குகிறீர்கள் என்று பொருள். இல்லையென்றால் நீங்கள் ஒரு ஆண் ஒரு பெண் என்கிற ஓர் அடையாளத்தில் இயங்குகிறீர்களே தவிர இதன் மூலம் ஆரோக்கியமான உலகத்தை உருவாக்க முடியாது. இந்த உலகத்தில் இவ்வளவு துயரங்கள் ஏற்படக் காரணமே எல்லா மனிதர்களும் ஏதோ ஒரு அடையாளத்தின் பேரில் இயங்குகிறார்கள். குறிப்பிட்ட குழுவையோ மதத்தையோ ஒரு ஜாதியையோ ஒரு நாட்டையோ ஒரு பாலினத்தையோ ஒரு அடையாளமாகக் கொண்டிருக்கிறார்கள் என்பது தான் இத்தனைத் துயரங்களுக்கும் காரணம்.

எனவே நீங்கள் பதில்வினையாற்றுவது என்பது உங்களிடம் இருக்கின்ற கருவிகளின் அடிப்படையிலானது. ஒரே சூழலுக்கு எல்லோரும் ஒன்று போல் பதில்வினையாற்ற முடியாது. அது அவரிடம் இருக்கிற தகுதிகளையும் திறமைகளை யும் பொறுத்தது. உங்கள் உணர்வுகளால் தூண்டப்பட்டு கட்டுப்பாடில்லாமல் நீங்கள் பதில்வினையாற்றினால் நீங்கள் எந்த நீதியையும் ஏற்படுத்த முடியாது. இந்த உலகில் நீங்கள் எந்த நன்மையையும் நிகழ்த்த இயலாது. ஒரு தீமையை இன்னொரு தீமை கொண்டு நீங்கள் எதிர் கொள்கிறீர்களே தவிர அது ஒரு தீர்வாகாது. எனவே அடையாளங்கள் அற்ற நிலையில் நீங்கள் செயல்படுகிறபோதுதான், அறிவின் அடிப்படை யில் செயல்படுகிறபோதுதான் இதற்கென்று ஒரு தீர்வை உங்களால் தரமுடியும்.


## கடன்... பணம்

**கடன் பிரச்சினையில் மூழ்கித் தவிக்கிறீர்களா?**
**நிதிப் பிரச்சினைக்கு தீர்வு காண நாடுங்கள்**



- Bankruptcy - செய்து கொடுத்தலும் இலவச ஆலோசனையும்
- Debt Consolidation
- Line Of Credit
- Personal Loan
- Business Loan
- Indian Visa Arrangement
- Students Loan Amount Reduced
- Credit Rehabilitation [ Answer within 24 hours ]
- Mortgage Problems & Refinancing
- Any Immigration Problems with Free Advice
- Are you under Deportation? Call Us
- Are You New To Canada - Call Us
- Have You Problem With Your Car Loan Payment
- Have You Been Laid Off Unfairly?
- Any Kind Of Legal Services
- Mortgage - கட்டமுடியாமல் உங்கள் வீட்டை Bank எடுக்கின்ற நிலைமையா?
- வாகன விபத்துக்கு உள்ளானீர்களா? காயமடைந்து விட்டீர்களா? உங்களுக்கு பெரிய நிதியை காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பெற்று தருவோம்.
- உங்களின் உரிமைகளை எங்களின் மூலம் வெல்லுங்கள்.

**Credit Score** குறைவு என்ற கவலை வேண்டாம்.

*We help our community*

முற்றிலும் இலவச ஆலோசனைகளுக்கும் சேவைகளுக்கும்
அழையுங்கள் சுரேஸ்: 416-662-9860



## வருமான வரி மீள்வு

***Income Tax Refund***



- தனிப்பட்ட குடும்பத்தினரின் வருமான வரி மீள்வும் எதிர்கால ஆலோசனைகளும்
- தனியாக தொழில் முயற்சியில் ஈடுபடுவோரின் வரிப்பத்திரம் தயாரிப்பதும் எதிர்கால ஆலோசனைகளும்
- வாடகை வருமான செலவுகளுக்கான (வீட்டின் ஒரு பகுதியோ, முழுமையாகவோ) வரி மீள்வு சேவை

**உதயன் ஐயாத்துரை Tel.: 416.999.3555**




## மனிதனை உயிரோடு எரிப்பது கவலை

'மனிதன் செத்தபின்பு அவன் உடலை எரிப்பது நெருப்பு. ஆனால் அவனை உயிரோடு இருக்கும் போதே எரிப்பது கவலை' என்கிறார் கவிஞர் கண்ணதாசன். கவலையை வெற்றி கொள்ள, தீர்வுகாண உதவுவதே பிராணாயாமம், யோகாசனம், தியானம் போன்ற உன்னத பயிற்சிகளாகும்.

பயன்படுத்து அல்லது இழந்து விடு (Use it or Loose it) என்ற அடிப்படையில் நமது உடல் இயங்குகின்றது. ஆண்டவன் படைப்பில் அற்புதம் ஒன்றுதான். உடல் கூறு இயல், இதன் இயங்கும் தன்மை, இயற்கையை ஒட்டியே உள்ளது. மனிதனுக்கு இராஜ உறுப்புகள் என ஐந்து உறுப்புகள் உள்ளது. அவை ஐந்தும் ஐந்து பூத சக்திகளோடு (ஆகாயம், பூமி, நீர், நெருப்பு, காற்று) நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளது. இந்த தொடர்பு துண்டிக்கப்படுமானால் நாம் தண்டிக்கப்படுவோம். இயற்கை விதிகளை ஒருவர் மீறும் போது அவருக்கு இயற்கை அளிக்கக்கூடிய தண்டனைகளே நோய்கள், பிணிகள் என்கிறது இயற்கை மருத்துவம்.

இராஜ உறுப்புகள்

1. இருதயம் (Heart) 2. நுரையீரல் (Lungs)
3. கல்லீரல் (Liver) 4. மூளை (Brain)
5. சிறுநீரகம் (Kidney)

அதிகப்படியான கோப உணர்ச்சி கல்லீரலை பாதிக்கிறது. அதிகமான கவலை நுரையீரலை (Lungs) பாதிக்கிறது. அதிக பய உணர்ச்சி கிட்னியை பாதிக்கிறது. 90 வீதமான நோய்களுக்கு காரணம் மனமே என்றும், 80 வீதமான வியாதிகளுக்கு மருந்துகளே தேவையில்லை என்று ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. உணர்ச்சிகளால் தோன்றும் வியாதிகளான ஆஸ்துமா (Ashma), சர்க்கரை நோய் (Diabetes), இருதய நோய் (Heart Disease) முதுகுவலி (Back Pain) போன்ற எண்ணற்ற வியாதிகள் யோகாசன சிகிச்சை மருத்துவத்தால் எளிதில் தீர்க்கலாம்.

உடல் உள் உறுப்புகளைப் பலப்படுத்துவதில் யோகாசனங்களே முதலிடம் பெறுகிறது. பண்டைக்கால சித்தர்களும் யோகிகளும் கண்டுபிடித்த உடல், உயிர் கவசங்களே யோகாசனங்கள். ஆதார உறுப்புக்களை நேரடியாக தூண்டி வலிமை அளிக்கும்

# வாழ்க்கை நம் கையில்

ஆசனங்கள் உள்ளன. உதாரணமாக கிட்னியைப் பலப்படுத்தும் ஆசனங்கள் உள்ளன. அவற்றுள் முக்கியமானது சலபாசனம். ஒருவருக்கு கிட்னி (Kidney) பலயீனமாக இருந்தால் இந்த ஆசனத்தைச் செய்வது கஷ்டமாயிருக்கும். நாளடைவில் இலகு வாயிருக்கும். கிட்னியும் பலப்படும். இதுபோன்ற ஆசனங்களைத் தேர்ந்தெடுத்து பழகி வந்தால் உடல், மன நோய்கள் தீர்வது மட்டுமன்றி மனஅமைதி, மகிழ்ச்சி என்பனவற்றையும் பெற முடிகிறது. தீர்க்கமுடியாத பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம். நல்லது எது? கெட்டது எது? என்று எளிதில் தீர்மானிக்கலாம்.

### ஆரோக்கியத்தின் அடிப்படை




மனிதனின் உடல், மன ஆரோக்கியத்தின் அடிப்படை என்பது முதுகுதண்டு. மற்றும் நாளமில்லா சுரப்பிகளான ஆதாரச் சக்கரங்களின் செயல் திறனைப் பொறுத்தே அமைகின்றது. இதுதான் இயற்கை விஞ்ஞானத் தத்துவம். ஒவ்வொரு ஆசனமும் நமது முதுகுதண்டு மற்றும் நாளமில்லா சுரப்பிகளைச் செம்மையாகத் தூண்டி செயல்பட வைக்கின்றது. இதனால் நோய் எதிர்ப்புசக்தி அதிகமாகி நோய் என்பது நெருங்குவதில்லை.

### *(Spinal Code)* முதுகுதண்டு

இது மூளையிலிருந்து முதுகின் எலும்பு வளையங்களூடாக கீழ்நோக்கி முதுகின் கீழ்ப்பகுதிவரை நீண்டிருக்கின்றது. இதனுடைய நீளம் 16½ அங்குலமாகும். இது நரம்பு நாளங்களாலானது. இதிலிருந்து 12 இணை நரம்புகள் மூளைக்குச் செல்கிறது. மற்றும் முப்பத்தொரு இணை நரம்புகள் உடலின் எல்லா பகுதிகளுக்கும் செல்கிறது. இது மனிதனின் இரண்டாவது மூளை எனப்படுகிறது. உதாரணமாக நடந்து செல்லும்போது காலில் ஒரு முள் குத்திவிட்டால், உடனே காலை தூக்குகிறோம். இந்த உத்தரவு, மூளையிலிருந்து கிடைக்கப் பெறுவதில்லை. முதுகுத்தண்டு உடன் செயல்பட்டு நரம்புகளுக்கு உத்தரவு கொடுத்து செயல்பட வைக்கிறது. இது உடலின் சந்திப்பு நிலையமாக விளங்குகிறது.

### நாளமில்லா சுரப்பிகள் - அவற்றை இயக்கும் யோகாசனங்கள்

உடலிலுள்ள நாளமில்லா சுரப்பிகளான 6 ஆதார சக்கரங்கள் தான் உடலின் மற்றும் மூளையின் இயக்கத்தையே சமநிலைப்படுத்துகின்றன. இவற்றின் தொழில்பாடுகளின் தன்மையைப் பொறுத்துத்தான் ஒருவரின் வாழும் காலமும், வாழ்வின் வெற்றியும் தோல்வியும் நிர்ணயிக்கப்படுகின்றன.

அவை வருமாறு

1. பிட்யூட்டரி சுரப்பி (மூளையின் அடியில்)
2. பிணியல் சுரப்பி (புருவ மத்தியில்)
3. தைராய்டு, பரா தைராய்டு (கழுத்தின் உட்பகுதி)
4. தைமல் சுரப்பி (நடு மார்பில்)
5. பங்கிரியாஸ் சுரப்பி (கணையம்)
6. அட்ரினல் சுரப்பி (கிட்னியின் உச்சியில்)
7. கோனாடு சுரப்பி (ஆண் பெண் உறுப்புகளில்)

மேற்கூறிய சுரப்பிகளைச் செம்மையாக இயங்கச் செய்வதற்கு உதவுவது முறையான யோகாசனப் பயிற்சிகள்தான் என்பதை மருத்துவ ஆராய்ச்சியாளரும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

எந்த கஷ்டமான வேலையும் உடலின் அனைத்து பாகத்திற்கும் முழுமையான பயிற்சியைச் கொடுக்காது. அதனை திட்டமிட்ட யோகாசனப் பயிற்சியினாலேயே முடியும். இந்த யோகாசன, பிராணாயாம, தியான பயிற்சியானது உடலுக்கு மட்டுமன்றி அதனோடு இணைந்து உள்ளமும் ஒரு முகப்பட்டு இயங்குவதால் வாழ்வின் எந்த துறையிலும் முன்னேற உதவுவதுடன் நினைத்ததை அடைந்து வாழ்வின் வெற்றிக்கு வழி காட்டுகிறது.



இந்த இணையற்ற யோகப் பயிற்சியை முழு நம்பிக்கையுடன் முறைப்படி பயின்று வந்தால் தீராத நாட்பட்ட வியாதிகளையும் குணப்படுத்த முடியும் என்பதில் சிறிதளவும் சந்தேகம் இருக்கலாகாது.



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 *after 7:00pm*

**YOGA - MEDITATION CLASSLESS**

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.



நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு
தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

தொடர்புகளுக்கு: ***Scarborough - Markham*** - செல்வ சோதி - ***416.289.2033***
***Etobicoke, Woodbridge, Brampton - Harani - 416.270.1687***

# சறுக்கியது! சம்பியன்! இந்தியா!!

## விளையாட்டுத் தகவல்கள் 255

### *20 சம்பியன் இந்தியா நியூசிலாந்திடம் வீழ்ந்தது.*

இந்தியாவுக்கு எதிரான முதல் டுவென்டி 20 கிரிக்கெட் ஆட்டத்தில் நியூசிலாந்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. கிறைஸ்ட்சர்ச்சில் புதன்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் ஆடிய இந்தியா 20 ஓவர்களில் 8விக்கெட் இழப்புக்கு 162 ஓட்டங்கள் எடுத்தது. தொடர்ந்து ஆடிய நியூசிலாந்து 18.5 ஓவர்களில் 3விக்கெட் இழப்புக்கு 166 ஓட்டங்கள் குவித்து வென்றது.

சேவாக் அதிரடி - அதிரடி வீரேந்திர சேவாக் தான் சந்தித்த முதல் 3 பந்துகளை சிக்சருக்கு அனுப்பி அட்டகாசமான தொடக்கம் அளித்தார். கம்பீர் விரைவிலேயே ஆட்டமிழந்தபோதும், சேவாக் அதிரடி ஓட்ட குவிப்பில் ஈடுபட்டார். ஆனால், அவர் 10 பந்துகளில் 4 சிக்சர்களுடன் 26 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தவுடன் ஆட்டத்தின் போக்கு மாறியது. அதன்பின் யூசுப் பதான் 8 பந்துகளில் 3 சிக்சர்களுடன் 20 ஓட்டங்கள் எடுத்து நம்பிக்கை அளித்தார்.
யூசுப் பதான் ஆட்டமிழந்த பின்னர், சுரேஷ் ரெய்னா 43 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 5 சிக்சர், 2 பவுண்டரிகளுடன் 61 ஓட்டங்களும், ஹர்பஜன் சிங் 22 பந்துகளில் 21 ஓட்டங்களும் எடுக்க இந்தியா கௌரவமான புள்ளிகளை எட்டியது.

நியூசிலாந்து தரப்பில் பிரையன், பட்லர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். வெட்டோரி 4 ஓவர்களில் 18 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார். நியூசிலாந்து தொடர்ந்தபோது ஜெஸ்ஸி ரைடரை இஷாந்த் சர்மா ஒரு ஓட்டத்துடன் வெளியேறினார். அடுத்து களமிறங்கிய மார்ட்டின் குப்டில் தான் சந்தித்த முதல் பந்திலேயே வெளியேறி இருக்க வேண்டும். இஷாந்த் சர்மா வீசிய பந்தை அவர் பேட்டில் படாமல் காலில் பட்டது. ஆனால் நியூசிலாந்து நடுவர் இவான் வாட்கின் அவுட் கொடுக்கவில்லை. டிவி ரீப்ளேக்களில் அது எல்பிடபிள்யூ எனத் தெளிவாகத் தெரிந்தது. அதன் பின்னர், குப்டில், பிரென்டன் மெக்கல்லம் இணைந்து சிறப்பாக விளையாடினர். குப்டில் 28 பந்துகளில் 3 சிக்சர், 4 பவுண்டரிகளுடன் 41 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஹர்பஜன் சிங் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். ராஸ் ரெய்லர் தன் பங்குக்கு 20 பந்துகளில் 3 சிக்சர், ஒரு பவுண்டரியுடன் 31 ஓட்டங்கள் குவித்தார். அவரை ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் சிறிது நம்பிக்கையை ஜாகீர் கான் ஏற்படுத்தினார். இருப்பினும், மெக்கல்லம் ஓரம் ஜோடி பொறுப்புடன் விளையாடி அணிக்கு வெற்றி தேடித் தந்தது. மெக்கல்லம் 49 பந்துகளில் 3 சிக்சர், 2 பவுண்டரிகள் உள்பட 56 ஓட்டங்களுடனும், ஓரம் 15 பந்துகளில் 2 சிக்சர், 3 பவுண்டரிகள் உள்பட 29 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். இந்த ஆட்டத்தில் இந்திய வீரர்கள் 13 சிக்சர்களும், நியூசிலாந்து வீரர்கள் 11 சிக்ஸர்களும் விளாசினர். ஆட்ட நாயகனாக பிரென்டன் மெக்கல்லம் தேர்வு செய்யப்பட்டார்.

**ஓரம் அபாரம்**

தொடர்ந்து 3 சிக்ஸர் அடித்த யூசுப் பதான், நாதன் மெக்கல்லம் வீசிய பந்தை 4 வது முறையாக தூக்கி அடித்தார். அதுவும் சிக்சர் என்று நினைத்தபோது, ஜேகப் ஓரம் அதை புத்திசாலித்தனமாக கேட்ச் ஆக்கினார். தான் எல்லைக் கோட்டைத் தாண்டுவோம் எனத் தெரிந்தவுடன் பந்தை எல்லைக் கோட்டுக்குள் தள்ளி விட்டு மீண்டும் எல்லைக் கோட்டுக்குள் வந்து பந்தைப் பிடித்துவிட்டார்.

### விம்பிள்டன்னில் அகாஸி, ஸ்டெஃபி கிராஃப்

முன்னாள் விம்பிள்டன் சாம்பியன்களும் தற்போதைய கணவன், மனைவியுமான ஆஞ்ரே அகாஸி, ஸ்டெஃபி கிராஃப் ஆகியோர் விம்பிள்டன் ரெனிஸ் மைதானத்தில் கட்டப்பட்டுள்ள புதிய விளையாட்டுக் களத்தில் பரிசோதனைக்காக காட்சிப் போட்டி ஒன்றில் பங்கேற்கின்றனர். கிம்கிளிஸ்டர்ஸ் டிம் ஹென்மேன் ஆகியோரும் இந்த காட்சி ரெனிஸ் போட்டிகளில் பங்கேற்கின்றனர். இந்தக் காட்சிப் போட்டித் தொடர் 'சென்டர் கோர்ட் கொண்டாட்டம்' என்று அழைக்கப்படுகிறது. மே மாதம் 17 ஆம் திகதி இந்த காட்சி ரெனிஸ் போட்டிகளில் நடைபெறுகிறது. இந்த புதிய மைதானத்தில் மழை வந்தாலும் கவலையில்லை. மேற்கூரையை இழுத்து மூடி போட்டிகளை நடத்தலாம். மழை இல்லாத நேரத்தில் அதனை விலக்கிக் கொள்ளலாம். இந்த புதிய ரெனிஸ் மைதானத்தில் விளையாடும்போது வீரர்கள் உடல்நிலைக்கு ஏற்ப காற்று வசதி உள்ளிட்ட பிற விளையாட்டு சூழ் நிலைகள் நன்றாக உள்ளதா என்பதை சோதனை செய்யவே இந்த காட்சி ரெனிஸ் போட்டிகள் நடத்தப்படுகிறது. இந்த ஆண்டு விம்பிள்டன் ரெனிஸ் போட்டிகள் ஜூன் 22ஆம் திகதி துவங்க ஜுலை 5ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

துபாய் ஓபன் ரெனிஸ் தொடரில் பங்கேற்க இருந்த ஷகர் பியருக்கு 'விசா' மறுக்கப்பட்ட விவகாரம் விஸ்வரூபமெடுத்துள்ளது. எதிர்காலத்தில் இங்கு ரெனிஸ் நடத்த தடை விதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இஸ்ரேலை சேர்ந்த நட்சத்திர வீராங்கனை ஷகர் பியர் ரேங்கிங் பட்டியலில் 48வது இடத்தில் இருக்கும் இவர் துயாய் ஓபன் ரெனிஸ் தொடரில் இடத்தில் இருக்கும் இவர் துபாய் ஓபன் ரெனிஸ் தொடரில் விளையாட தகுதிய பெற்றிருந்தார். ஆனால், கடைசி நேரத்தில் இவருக்கு துபாய் ஓபன் ரெனிஸ் தொடரில் விளையாட தகுதி பெற்றிருந்தார். ஆனால், கடைசி நேரத்தில் இவருக்கு துபாய் அரசு 'விசா' மறுத்தது. இதற்கு பாலஸ்தீனம் மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல் தான் காரணம் என கூறப்பட்டது. பியர் பங்கேற்றால் துபாய் ரசிகர்கள் போட்டியை புறக்கணிக்கும் சூழ்நிலை ஏற்படும் என அமைப்பாளர்கள் கூறினர். இதற்கு ரெனிஸ் உலகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. விளையாட்டில் அரசியலை கலக்கக் கூடாது என எச்சரித்துள்ளது. இது குறித்து துபாய் தொடரின் இயக்குனர் சலா தலக் கூறுகையில்,
'சமீபத்தில் காசா பகுதி மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஆயிரக்கணக்கான அப்பாவி பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். இதனை துபாயில் உள்ளவர்கள் 'டி.வி' மூலம் நேரடியாக பார்த்தனர். தற்போது இவர்கள் ரெனிஸ் அரங்கில் நேரடியாக பார்த்தனர். தற்போது இவர்கள் ரெனிஸ் அரங்கில் ஷகர் பியரை பார்த்தால் ஆத்திரப படுவர். மக்களின் உணர்வுகளை புரிந்துகொண்டு தான் அவருக்கு அனுமதி மறுத்தோம்' என்றார்.

இதற்கு பெண்கள் ரெனிஸ் சங்கம் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இதன் தலைமை அதிகாரி லாரி ஸ்காட் கூறுகையில், 'ஒரு வீராங்கனை தகுதி பெற்றிருக்கும் பட்சத்தில் அவருக்கு அனுமதி மறுக்கக் கூடாது என விதிமுறை தெளிவாக கூறுகிறது. அப்படியிருக்கையில் பியருக்கு 'விசா' தரப்படாதது வேதனைக்குரியது. இந்த தொடரை ரத்து செய்யலாம் என்று தான் முதலில் நினைத்தோம். ஆனால் தனக்காக மற்ற வீராங்கனைகள் பாதிக்கப்பட கூடாது என பியர் பெருந்தன்மையோடு கேட்டுக்கொண்டார். இதனால்தான் தொடர் இம்முறை நடக்கிறது. எதிர்காலத்தில் துபாயில் ரெனிஸ் தொடர் நடப்பது சந்தேகம்தான்', என்றார். பியர் கூறுகையில்' எனக்கு ஆதரவு அளித்தவர்களுக்கு நன்றி. ரெனிஸ் உட்பட எந்த விளையாட்டிலும் அரசியல், இன வேறுபாடுகளுக்கு இடமில்லை. வரும்காலத்தில் இதுபோன்ற அநீதி நடக்காது என நம்புகிறேன். என்னால் சகவீராங்கனைகள் பாதிக்கப்படக் கூடாது என்று தான் அமைதி காத்தேன்', என்றார். வரும் 23ஆம் திகதி துபாயில் ஆண்களுக்கான ரெனிஸ் தொடர் துவங்குகிறது. இதில் இஸ்ரேல் வீரர் ஆண்டிராம் கலந்து கொள்ள உள்ளார். இவருக்கு அனுமதி அளித்து துபாய் அரசு தனது தவறுக்கு பரிகாரம் தேட வேண்டும்மென ரெனிஸ் நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

### பாகிஸ்தான் Vs இலங்கை வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது

அணிகளுக்கு இடையே கராச்சியில் நடைபெற்ற முதல் கிரிக்கெட் ரெஸ்ற் சமநிலையில் முடிவடைந்தது. கடைசி நாளான புதன்கிழமை ஆட்டநேர முடிவில் இலங்கை தனது 2வது இன்னிங்ஸில் 5 விக்கெட் இழப்புக்கு 144 ஓட்டங்கள் எடுத்தது. முன்னதாக பாகிஸ்தான் தனது முதல் இன்னிங்சை 6விக்கெட் இழப்புக்கு 765 ஓட்டங்களுடன் டிக்ளேர் செய்தது.

**யூனிஸ் கான் ஏமாற்றம்** - லாராவின் 400 ஓட்ட சாதனையை முறியடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட யூனிஸ் கான் ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்திலேயே 313 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

836 நிமிடங்கள் களத்தில் இருந்த யூனிஸ் கான் 568 பந்துகளை எதிர்கொண்டு 4 சிக்சர், 27 பவுண்டரிகள் விளாசினார். ரெஸ்ற் ஆட்டங்களில் அதிக நேரம் (836 நிமிடம்) களத்தில் இருந்த 3வது வீரர் என்ற பெருமையை யூனிஸ் கான் பெற்றார். பாகிஸ்தான் வீரர் ஹனீப் முகமது 970 நிமிடங்களும், தென்ஆபிரிக்காவின் கேரி கிர்ஸ்டன் 878 நிமிடங்களும் களத்தில் இருந்து சாதனை படைத்துள்ளனர்.

**அக்மல் சதம்** - யூனிஸ் கான் ஆட்டமிழந்தபோதும், அதன் பின்னர் ஜோடி சேர்ந்த கம்ரான் அக்மல், யாசிர் அராபத் சிறப்பாக விளையாடினர். அக்மல் 1184 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 5 சிக்சர், 8 பவுண்டரிகளுடன் 158 ஓட்டங்கள் குவித்தார். யூனிஸ் கான் டிக்ளேர் செய்த போது யாசிர் அராபத் 50 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார். இருவரும் இணைந்து 7வது விக்கெட்டுக்கு 169 ஓட்டங்கள் சேர்த்தனர். இலங்கை 2வது இன்னிங்ஸைத் தொடர்ந்தபோது, பரணவிதனா 9 ஓட்டங்களுக்கும், வர்ணபுரா 2 ஓட்டங்களுக்கும், தில்ஷான் 8 ஓட்டங்களுக்கும் ஆட்டமிழந்தனர். ஆட்ட நேர இறுதியில் இலங்கை 5விக்கெட் இழப்புக்கு 144 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இரு அணிகளுக்கு இடையேயான 2வது ரெஸ்ற் லாகூரின் மார்ச் 1இல் தொடங்குகிறது.

### ஓய்வு பெறுகிறார் ஸ்டீவ் பக்னர்

ஐ.சி.சி உயர்மட்டக் குழுவில் உள்ள மேற்கிந்திய தீவுகளைச் சேர்ந்த நடுவர் ஸ்டீவ் பக்னா தென்ஆபிரிக்கா அவுஸ்திரேலிய தொடருடன் ரெஸ்ற் போட்டிகளிலிருந்தும், மேற்கிந்திய தீவுகளுக்கும் இங்கிலாந்திற்கும் இடையே பார்படோஸில் மார்ச் 29ஆம் திகதி நடைபெறும் ஒரு நாள் சர்வதேசப் போட்டியுடன் ஒரு தினப்போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். 1989ஆம் ஆண்டு சர்வதேச போட்டிகளில் நடுவர் பொறுப்பை ஏற்று பணியாற்றத் தொடங்கிய ஸ்டீவ் பக்னர் இதுவரை 126 ரெஸ்ற் போட்டிகளில் நடுவராக இருந்து சாதனை படைத்துள்ளார். 179 ஒருதின போட்டிகளிலும் இவர் நடுவராக இருந்துள்ளார். 1992 உலகக் கோப்பை இறுதிப் போட்டி முதல் 2007 ஆம் ஆண்டு உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி வரை 5 உலகக் கோப்பைகளில் இறுதிப் போட்டியில் நடுவர் பொறுப்பு வகித்து சாதனை படைத்துள்ளார் பக்னர். பந்துவீச்சாளர்கள் உரத்த குரலில் முறையீடு செய்யும் போது நாட் அவுட்டாக இருந்தால் உடனேயே இல்லை என்று தலையாட்டி விடும் இவர் அவுட் என்று தீர்மானித்தால் யோசித்து மெதுவாகவே அவுட் கொடுப்பார். பல பேட்ஸ்மேன்கள் இனிமேல் இவர் நமக்கு அவுட் கொடுக்கமாட்டார் என்று நினைத்த தருணத்தில் கடைசி நேரத்தில் கையை உயர்த்தி வெறுப்பேற்றியுள்ளார். கடந்த முறை இந்திய அணி அவுஸ்திரேலியா சென்றிருந்த போது சிட்னியில் நடைபெற்ற மோசடி ரெஸ்ரில் அவுஸ்ரேலிய அபாண்ட வெற்றிக்குக் இவரது மோசடி தீர்ப்புகள் உதவின. ஆண்ட்ரூ சைமன்ட்சிற்கு மட்டும் சுமார் 6முறை அவுட் மறுக்கப்பட்டது.

ரெஸ்ரை மோசடி வெற்றியிலிருந்து காக்க ஆடிக் கொண்டிருந்த திராவிட் உள்ளிட்ட

தொடர்ச்சி 12ஆம் பக்கம்



**எஸ். கணேஷ்**


# Raphael Maharaja

**கனேடியத் தமிழ் வழக்கறிஞர்**

**Barrister, Solicitor & Notary Public**



- வீடு, காணி, வர்த்தகச் சட்டம்
- அகதி, குடிவரவுச் சட்டம்
- விபத்து இழப்பீடு
- குடும்பச் சட்டம்
- தத்துவப் பத்திரம், இறுதி விருப்பாவணம், சத்தியப் பத்திரம்
- ஆங்கில, தமிழ், சிங்கள மொழிபெயர்ப்பு

> Real Estate & Business Law
> Refugee & Immigration Law
> Personal Injury
> Family Law
> Estate Planning, Power of Attorney & Affidavits
> English, Tamil & Sinhala Translation



**Tel: 416-847-7077 Fax: 416-847-7088**

# உலகின் பொருளாதாரத்தில் ஆரோக்கியமான நாடு - கனடா

உலகின் பொருளாதார இறக்கம், வீட்டின் விலை இறக்கம், வியாபாரத்தின் எண்ணிக்கையில் இறக்கம், பங்குசந்தையின் இறக்கம், வங்களின் வட்டிவீதத்தின் இறக்கம் இவை தொடர்ந்தே வருகின்றன. இந்நிலைமை எவ்வளவு காலம் தொடரும்? பொருளாதார ஆய்வாளர்களின் கூற்றின்படி, இந்த வருடத்தின் இறுதியில் அல்லது அடுத்த வருடத்தின் (2010) நடுப்பகுதியில் இந்த நிலைமைகள் முற்றுப்பெறலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சி 2006 ஆம் ஆண்டளவில் முற்றுப்பெற்று அத்துடன் வீட்டு விலையில் இறக்கம் ஆரம்பிக்கத்தொடங்கியது. இன்றும் இந்த நிலைமை தொடர்ந்து கொண்டே செல்கின்றது.

இதன் தொடர்ச்சி அல்லது பாதிப்பு கடந்த வருடத்தின் (2008) இறுதிப்பகுதியில் கனடாவில் ஆரம்பமானது. இருந்தும், ரொறொன்ரோப் பெரும்பாகத்திற்குரிய வீட்டுச்சம்மேளத்தின் (Toronto Real Estate Board) மாதாந்த அறிக்கையின்படி, கடந்த வருடத்தில் மனையின் சராசரி விலை அதற்கு முந்திய ஆண்டுகளை விட அதிகரித்தே காணப்பட்டது. ஆனால் கைமாறிய மனைகளில் பாரிய இறக்கத்தைக் காணக்கூடியதாக இருந்தது. கனடாவைப் பொறுத்தவரையில் சராசரி வீட்டுவிலையில் இறக்கம் காணப்பட்டது. (ரொறொன்ரோவில் அல்ல) இதற்கு கனடிய மேற்கு மாகாணங்களில் குறிப்பாக அல்பேட்டா, பிரிட்டிஷ் கொலம்பியாவில் ஏற்பட்டுள்ள பொருளாதார இறக்கம் கனடா ரீதியாக சராசரி வீட்டு விலை இறங்கியதற்கு காரணமானது. இருந்தும், ஒன்ராரியோவில் வீட்டுவிலை, குறிப்பாக ரொறொன்ரோவின் வீட்டுவிலையில் பாரிய இறக்கத்தை ஏற்படுத்தவில்லை.

வீட்டுச்சந்தையில் இந்த வருடம் (2009), வீட்டு வியாபாரத்தில் முக்கிய ஆண்டாக இருக்கும் என எதிர்பார்க்கலாம். பத்திற்கு மேற்பட்ட வருடங்களிற்கு பிறகு இந்த வருட மனை விலையில் இறக்கத்தை எதிர்பார்க்கலாம்.

வன்கூவரின் மத்தியில் மிகவும் ஆடம்பரமாக கட்டப்பட இருந்த Ritz - Carlton 20 அடுக்கு



கொட்டலுடன் சேர்ந்த, 60 அடுக்குமாடிக் கொண்டோ அப்பாட்மென்ட் கட்டிடம் நிர்மாணிப்பதை நிறுத்தப்பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம், உலகளாவிய பொருளாதார இறக்கம். அத்துடன் கட்டிட வேலைக்குரிய வங்கிகடனை நிதிநிறுவனங்கள் கொடுப்பதற்கு ஏற்படுத்தும் விதிகளை சமாளிப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது.

ரொறொன்ரோவில் கட்டப்பட இருக்கும் 1 Bloor St. E என்ற 500 மில்லியன் பெறுமதியான அடுக்குமாடி கட்டித்தின் எதிர்காலமும் எவ்வாறு இருக்கும் என்று எதிர்வு கூறமுடியாமல் உள்ளது. இந்நன்கு பேசப்பட்ட கட்டிடத்தொகுதி, கட்டப்பட்டால் ரொறொன்ரோவின் மைல்கல்லாக (Landmark) இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

ஸ்கோஷியா வங்கியின் தலைமை பொருளாதார ஆலோசகர் Adrienne Warren இன் கருத்துப்படி கனடாவின் வீட்டுவிலை மேலும், குறைந்தது ஒரு வருடம் இறக்கம் ஏற்படலாம் எனத் தெரிகின்றது. அத்துடன் விற்பனையாலும் 20 - 30% வரையான இறக்கம் (2008 உடன் ஒப்பிடும் போது) ஏற்படலாம் எனவும் கூறியுள்ளார். குறிப்பாக வன்கூவர் (Vancouver) கல்கறி (Calgary) சட்பியூறி (Sudbury) போன்ற நகரங்களில் விலைச்சரிவு அதிகமாகக்காணலாம் எனவும் கூறியுள்ளார். இதற்கு முக்கிய காரணம் தேவையைவிட மேலதிகமான கட்டிடத்தொகுதிகள் கட்டப்பட்டுள்ளது. (Supply vs Demand) மேலும், அவர் தெரிவிக்கையில், 2009ஆம் ஆண்டு மத்திய அரசின் வரவு செலவு திட்ட அறிக்கையில் கொண்டுவந்த திருத்த வேலைகளிற்கான (Renovation) வரிச்சலுகை திருத்தவேலையில் உள்ளவர்களிற்கு 2009ஆம் ஆண்டு மேலதிக தொழிலை வழங்கும் எனத் தெரிவித்தார். இந்த புதிய வரிச்சலுகையால் 2008 இல் திருத்தவேலையில் ஏற்பட்ட இறுக்கம் இந்த வருடம் நிவர்த்திக்கும் என எதிர்பார்க்கலாம்.

ஏற்கனவே ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சியினால் மேலதிகமான அடுக்குமாடிக் கட்டிடங்கள் கடந்த சில வருடங்களாக வீடு/மனைகள் கட்டப்பட்டுள்ளன. இவை தேவைக்கு அதிகமாகக் காணப்படுவதால் விலை இறக்கம் இயல்பானதாகவே காணப்படும். Adrienne Warren இன் கருத்துப்படி, பொருளாதாரம் சீரடையவேண்டுமாயின் வீட்டு விலையில் ஒரு சீரான நிலைமை ஏற்படுதல் வேண்டும். இதனைப் பொறுத்தே பொருளாதாரம் ஆரோக்கியமானதாக மாறும். அத்துடன் மனை வாங்கக்கூடியவர்களும் வீட்டுச்சந்தையின் மாற்றத்தை அவதானித்து கொண்டு இருக்கிறார்கள்.

இன்றைய நிலையில் 20 - 30% குறைந்த விலையில் வாங்கக்கூடிய மனைகள் வீட்டுச்சந்தையில் காணப்படுகின்றது. இவ்வாறான வீட்டைக்கண்டுபிடித்து வாங்குவது எமது பொறுப்பு ஆகும். தகுந்த வீட்டுமுகவர் உங்களுக்கு உதவலாம்.

கனடிய வட்டிவீதத்தின் மேலதிக இறக்கத்தை எதிர்பார்க்கலாம். மார்ச் 03, 09 ஆம் திகதி மேலதிக வட்டி வீதத்தை குறைந்தது (1/4%) ஐ எதிர்பார்க்கலாம். வருடக்கடைசியில் இந்த நிலைமை மாறக்கூடிய சந்தர்ப்பமே அதிகமாகவே காணப்படுகின்றது. ஜனவரி 2009 இல் 1/2 % வட்டிவீதம் ஏற்பட்டு இன்று கனடிய மத்திய வங்கியின் வட்டி வீதம் 1% ஆகக் காணப்படுகின்றது. முதன்மை வட்டி வீதம் 3% ஆக உள்ளது.

Adrienne Warren இன் கருத்துப்படி, உலகிலுள்ள நாடுகளில் கனடிய நிதி நிறுவனங்களின் சட்டதிட்டங்கள் மிகவும் நேர்த்தியாகக் காணப்படுவதால், வளர்ந்த, வளர்ந்து வரும் அனேகமான நாடுகளில் கனடிய நிதிநிறுவனங்கள் தமது கணக்குகளை சிறந்த முறையில் பராமரித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். எனவே இன்றைய காலகட்டத்தில் உலக நாடுகளில் பொருளதார அமைப்பில் கனடாவே சிறந்ததாக காணப்படுவ-தால் கனடாவில் வாழ்வதே உசிதமானது எனவும் தெரிவித்துள்ளனர். கனடிய பொருளாதாரத்தில் இறக்கம் ஏற்பட்டாலும் ஒப்பீட்டளவில் ஸ்திரமாகவே காணப்படுகின்றது.

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 293**


ஸ்காபரோ, மிசிசாக 2 இடங்களில், **140**இற்கு மேற்பட்ட வெற்றிபெற்ற வீட்டுப்பிரதிநிதிகள்

HOMELIFE HIGHER STANDARDS

*Independently owned & operated

**HomeLife GTA Realty Inc.,** Brokerage*

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

1711 McCowan Rd. #206, Toronto - **416.321.6969** /145 Traders Blvd # 28, Mississauga - **905.712.2666**



**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)

# CATERING / RESTAURANT FOR SALE

- Running business
- Location: Markham / Eglinton
- Resonable Rent
- Recently renovated
- Asking price $45,000 only
- Don't miss this chance

**Nantha Aiyadurai**
Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்




Relocation Service
OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# தொல்காப்பியரின் நாடக வழக்கு

**கடந்த இதழ் தொடர்ச்சி**

புறத்திணை ஒழுக்கங்களும் ஏழுவகைப்படும். அவை வருமாறு:

குறிஞ்சி: வெட்சி, கரந்தை
முல்லை: வஞ்சி, காஞ்சி
மருதம்: உழிஞை, நொச்சி
நெய்தல்: தும்பை
பாலை: வாகை
கைக்கிளை: பாடாண்
பெருந்திணை: காஞ்சி

வெட்சி என்பது பகைவரின் பசுக்களைக் கவர்தல். பகைவர் பசுக்களை மீட்டல் கரந்தை எனப்படும். வஞ்சி போர் தொடுத்தலையும் காஞ்சி எதிரியின் படையைத் தடுத்தலையும் குறிக்கும். பகைவருடைய மதிலைத் தாக்கிப் போர்செய்தல் உழிஞை எனப்படும். மதிலைப் பகைவர் கைப்பற்றாதவாறு பாதுகாத்தல் நொச்சி எனப்படும். பகைவருடன் எதிர் எதிராக நின்று போர் செய்தலுக்குத் தும்பை என்று பெயர். போரிலே பெற்ற வெற்றியை வாகைப்பூ சூடிக் கொண்டாடும் ஒழுக்கம் பூவின் பெயரால் வாகை என்றே வழங்கப்பெறும்.

கைக்கிளை என்னும் அகத்திணைக்கு ஒத்த புறத்திணை ஒழுக்கத்துக்குப் பாடாண் திணை என்று பெயர். பாடப்படுவோரின் வீரம், மானம், கொடைவளம், புகழ் முதலிய நல்லியல்புகளைப் பாடுவது எல்லாம் இதனுள் அடங்கும். பாடாண் திணை கடவுள் வாழ்த்து, வாழ்த்தியல், மங்கலம், செவியறிவுறுத்தல், ஆற்றுபடுத்தல், பரிசில்துறை, கைக்கிளைவகை, வசைவகை என எட்டுவகைப்படும். பெருந்திணைக்கு உகந்த ஒழுக்கம் காஞ்சி ஆகும்.

புறத்திணையிற் பொதுவியல் என்ற ஒரு பகுதியுமுண்டு. இதிற் புறத்திணை ஒழுக்கங்களில் அடங்காத பொதுவான நடத்தைகள் கூறப்படும்.

## ஒழுக்க மாந்தர்

இந்த உலக வழக்க ஒழுக்கங்களைச் செய்து காட்டும் பாத்திரங்களாக (characters) புலனெறி வழக்கிற் பலர் நடமாடவைக்கப்பட்டுள்ளனர். புலவர்களைப் பொறுத்தவரையில் அவர்களது கற்பனை அரங்கில் நடிக்கும் நாடக மாந்தர் இவர்கள். எனினும் அகத்திணையில் இவர்களைப் பெயர் சொல்லி அழைக்கும் வழக்கத்தைப் புலவர் மேற்கொள்ளவில்லை. பிரதான பாத்திரங்களை வெறுமனே தலைவன், தலைவி என்று மட்டும் அழைத்தனர். அவர்களுக்குத் துணைசெய்பவர் தோழி, நற்றாய், செவிலி, பாங்கன், பார்ப்பார், பாணன் முதலியோர்.

புறத்திணையில் அரசன் பிரதான பாத்திரம். அவனுக்கு அமைச்சர், ஏவலாளர், வாயிற் காப்போன், படைவீரர், பாணன், கூத்தர், தேர்ப்பாகன் முதலானவரும் பிறரும் துணைப் பாத்திரங்களாக வருவர். வீரர் தலையான பாத்திரங்களாக வரும் இடங்களும் உண்டு. சிலர் இரு திணைகளுக்கும் பொதுவாகவும் உள்ளனர்.

இப்பாத்திரங்கள் எத்தகைய இயல்பினராய் இருத்தல் வேண்டும் என்றும் தொல்காப்பியர் வரையறை செய்கின்றார். இவர்களைப் பற்றிய அறிவு நாடக வழக்கை நன்கு அறிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும்.

### தலைவன் (Protagonist)

தலைமகன் பதினாறு அகவையனாவான். 'பெருமையும் உரனும்' (3) உடையவன். பெருமை என்பது கல்வி, கேள்வி, நல்லொழுக்கம் போன்றவற்றால் எய்திய சிறப்பு. உரன் என்பதை 'கடைப்பிடிப்பும் நிறையும் கலங்காது துணிதலும் முதலிய வலிமை' என்று நச்சினார்க்கினியர் விளக்குவர்.

தலைவன் உயர்குடியிற் பிறந்தவன், செல்வச் சிறப்பும் உடையவன். அவனுக்கும் அவனது தலைவிக்கும் உள்ள தொடர்பு பிறவிதோறும் தொடர்ந்து வருவதாகக் கூறப்படும். களவியலிலும் கற்பியலிலும் தலைவன் நடந்துகொள்ளும் விதங்களையும் தொல்காப்பியர் இலக்கணமாக்கி இருக்கின்றார்.

### தலைவி

தலைமகள் பன்னீராண்டு அகவையுடையவளாக இருப்பாள். அவளது இலக்கணம்,

> அச்சமும் நாணும் மடனும் முந்துறதல்
> நிச்சமும் பெண்பாற் குரிய என்ப(4)

எனப்படுகின்றது. கற்பியலில்,

> கற்புங் காமமும் நாற்பால் ஒழுக்கமும்
> மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
> விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
> பிறவும் அன்ன கிழவோள் ... (5)

என்று தலைமகளின் குணவியல்புகள் விரித்துரைக்கப்படுகின்றன.

**· தொடரும்**



**கவிஞர் வி. கந்தவனம்**




**யோகா சோதிடம்**

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361


# இலங்கையில் மனித அவலம்...

**01ஆம் பக்கத்தொடர்ச்சி**

உயர்வட்டாரங்களுக்கும் ஊடக அமைப்புக்கள் மற்றும் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் உடனடியாகத் தகவல் தெரிவிக்கப்பட்டது. கல்கிஸை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டது. இது ஒரு கடத்தல் சம்பவம் என்றே முதலில் பலதரப்பிலும் இருந்து செய்திகள் வெளியாகின. கல்கிஸைப் பொலிஸார், இச்சம்பவம் குறித்து அங்கு முறைப்பாடு செய்யச் சென்றவர்களின் வாகனத்தில் தாமும் ஏறி, ரத்மலானை, பொரலஸ்கமுவ பகுதிகளுக்குச் சென்று குறித்த வெள்ளை வான் அந்தப் பகுதிகள் ஊடாகச் சென்றதா என்று ஆங்காங்கே இருந்த சோதனைச் சாவடிகளில் விசாரித்தனர். பின்னர் அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை நடத்தினர்.

ஆனால் இந்த அமளிதுமளிகளுக்கு மத்தியில் சிறிது நேரத்தின் பின்னர் வித்தியாதரன் பொலிஸாரால் விசாரணைகளுக்காகக் கைது செய்யப்பட்டிருக்கின்றார் என்று அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

'உதயன்', 'சுடர் ஒளி' ஆசிரியர் வித்தியாதரன் எங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார் என்பதை உடனடியாக வெளியிடுமாறு இலங்கை அரசிடம் கேட்டுக்கொண்டுள்ள சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் அவரது பாதுகாப்புக்குறித்துக் கடும் அச்சம் வெளியிட்டுள்ளது. வித்தியாதரன் எங்கிருக்கிறார் என்பதைக் கண்டுபிடிப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என சம்மேளனத்தின் செயலாளர் நாயகம் எய்டன் வைட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் பணிபுரியும் அனைத்துப் பத்திரிகையாளர்களினதும் பாதுகாப்பு மிகப்பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது என மேலும் தெரிவித்துள்ள அவர், சகல சர்வதேச ஊடக சுதந்திர அமைப்புகள் மற்றும் மனித உரிமை அமைப்புகளை வித்தியாதரனின் பாதுகாப்புக் குறித்து அறிவதற்கான உடனடி நடவடிகைக-



ளில் இறங்குமாறும் கோரியுள்ளார். இதேவேளை ஆசிரியர் வித்தியாதரனின் கைது தொடர்பாக சுதந்திர ஊடக இயக்கம் உள்ளிட்ட உள்நாட்டு ஊடக அமைப்புகளும் சர்வதேச பத்திரிகை சம்மேளனங்களும் கண்டனங்களை வெளியிட்டுள்ளன.

ஐக்கியநாடுகளின் பாதுகாப்புச்சபை பெப்ரவரி 27, 2009 அன்று மூடிய அறைக்குள் இலங்கைப்பிரச்சினைபற்றி ஆராய்ந்தது. பதினைந்து நாடுகளைக்கொண்ட பாதுகாப்புச்சபையின் தற்போதைய தலைமைப்பகுதியை வகிக்கும் ஜப்பானிய தூதுவர் யூக்கியோ ரகாசோ (Yukio Taksu) கூட்டமுடிவில் பத்திரிகைகளுக்கு அறிக்கை விட்டார். அவ்வறிக்கையில் "நாங்கள் இலங்கையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இடம்பெயர்ந்த மக்களின் அவலம் குறித்து மிகவும் கரிசனை கொண்டுள்ளோம். அங்கு நடைபெறும் அரசுக்கும் புலிகளுக்குமான முரண்பாட்டில் பொதுமக்கள் சிக்கித்தவிக்கிறார்கள். இலங்கை அரசாங்கம் தனது தாக்குதலை கவனமாக புலிகளுக்கு எதிராக நடத்தினாலும் அங்கு பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள். நாங்கள் இலங்கை அரசு பொதுமக்களில் அதிகூடிய கவனம் எடுத்துக்கொண்டுதான் புலிகளுக்கு எதிராக தாக்குதலை நடத்தும் என நம்புகிறோம்." என்று தெரிவித்தார்.

பிரித்தானியாவின் ஐக்கியநாடுகளிற்கான தூதுவர் (Sir John Sawers) தெரிவிக்கையில் "தானும் பிரித்தானியாவும் ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபையில் இலங்கையின் நிலவரம் பற்றி ஒரு முழுமையான விவாதம் நடைபெற வேண்டுமென வலியுறுத்தி வருகிறோம்" என்றார். மேலும் அவர் கூறுகையில் "நாங்கள் மனிதாபிமான காரணங்களுக்காக உடனடியாக ஒரு போர்நிறுத்தம் வரவேண்டும் என்று வலியுறுத்துகிறோம். இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றே முடிவாகும் என்று நாங்கள் நம்புகிறோம்." என்றார்.

ரஸ்சியாவின் ஐக்கியநாடுகளுக்கான தூதுவர் தெரிவிக்கையில் ஐக்கியநாடுகளின் பாதுகாப்புச்சபை இலங்கையில் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக்கூடாது எனத் தெரிவித்தார். இதை வியட்னாமின் ஐக்கியநாடுகளுக்கான தூதுவர் மேலும் வலியுறுத்தினார்.




SMILE....

- BUSINESS PLANS
- ACCOUNTING, TAXATION
- CORPORATE TAX PREPARATION OF FILING
- SYSTEMS - POINT OF SALES
- PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE

**RK CONSULTANTS**

**PL. CALL: 905.887.7457 / 905.751.7537** 24 hrs, 365 days


## அறிவித்தல்

கனடா - காரை கலாசார மன்றம் நடத்தும்

பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும்

இடம்: Scarborough Civic Centre, 150 Borough Drive [ McCowan & Ellesemere ]

காலம்: சனிக்கிழமை, மார்ச்சு 07, 2009 நேரம்: பி. ப 3:00 மணி

தொடர்புகளுக்கு: *(905)472 1163, (905)790 9323, (416)752 6471*

# வாழ்கை கவர்க்கமானது இனிய இல்லமொன்றில்...

## Elaguppllai (Mike) Srinathan B.Sc

**Sales Representative**

**Dir: 416-276-1225  Off: 905-470-9800**

**Email: esrinathan@trebnet.com**




**Mccowan And Eglinton**



**$169,900**

Condo Apt, Bed rooms 2, Washrooms 2
Very Well Maintained Upgraded Building Easy Access To Go, Ttc And Subway

**Markham/Lawrence**



**$279,900**

Detached Bungalow Bed rooms 3+2 , Washrooms 2
Large Bungalow House With Basement Apartment And Separate Entrance.

**Brimley/Denison**



**$284,000**

Link 2 Story Bed rooms 3 , Washrooms 2
Three Bedroom Home In High Demand Area, Close To Schools Childsafe Area,

**Neilson/Finch**



**$286,000**

Semi DFetached 2 story, Bed rooms 4+1, Washrooms 4
Great Family Neighbourhood Steps To Park, Ttc, Schools All Close By. Entrance To Home

**Steeles/Markham**



**$299,900**

Link 2 Story, Bedrooms 3, Washrooms 3 ,
Walk-Out To Yard;Walk To Public Transit,Schools And Shopping.

**Markham Rd/Elson**



**$334,000**

Semi Detached 2 Story, Bedrooms 3 Wasroom 3,
Well Kept Home With Lots Of Upgrades rooms, Close To School, Shopping, Main

**Morningside/FinchAve**



**$319, 900**

Town House 2 Story, Bed rooms 3+1 Washrooms 3,
Close To The Front Entrance Of The House. Large Finished Basement

**Markham/Steeles**



**$334,900**

Link 2 Story, Bed rooms 3 Washrooms 3,
Very Much Upgraded,Double Door Entry,Close To No Frills,Wal-Mart

**Markham Rd / Bur Oak**



**$344,900**

Detached 2 Story, Bed rooms 3 Washrooms 3
Beautifully Maintained. Freshly PaintedSchools! 24 Hrs Sobey,Schools & Public

**Brimley/Denison**



**$345,000**

Detached 2 story , Bed rooms 4+1 Washrooms 4,
Finished Basement Close To Schools, Ttc, Plazas And All Amenities.

**9th Line/South Of Highway 7**



**$365,900**

Detached 2 Story, Bedrooms 3 Washrooms 3, Hardwood Floor In Hallway,Close To Highway 7 & 407, Double Car Garage

**Middlefield/Denison-**



**$379,900**

Link 2 Storys, Bed rooms 4, Washrooms 3, Approximately 2050 Sq Feet!* *Direct Access From Garage To Home* *Close To School,

**Markham Rd/Denison**



**$385,900**

Link 2 Story, Bedrooms 3+1, Washrooms 4,
TDouble Car Garage And Large Driveway! Close To All Amenities, Schools, Hwy!

**Markham/Steeles**



**$414,900**

Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3
All Bathrooms Tiled Up To Ceiling. Huge Basement Windows. Great Location.

**9th Line/14th Ave**



**$449,900**

Detached 2 Story, Bedrooms 4, Washroom 3
Brand New Never Lived In Beautiful 4 Bedromm All Brick Home On Corner Lot!!

**9th Line/14th Ave**



**$469,000**

Detached 2 Story, Bedrooms 5, Washrooms 5, Better Than New!! 5 Bedrooms Stone/Brick Detached Home-Mins To Hwy 407/Public Tran-

**E.9th Line/N.14th Ave**



**$499,900**

Detached 2 Story, Bedrooms 4 Washrooms 3, Approx 2750 Sf, Close To Public Transit/Schools/Shops/Restaurant/Church/Comm. Ctr/Park

**9th Line/14 Avenue**



**$1,290,000**

Detached 2 Story, Bedrooms 5+1 Washrooms 7Beautiful 6 Yrs Old Custom Built Home, Ravine Lot And Abutting To Conservation Area

**Queen Mary/Sandalwood**



**$299,000**

Detached 2 Story Bed rooms3,Was rooms 3
Friendly NeighbourhoodClose To School, Transit, Shopping

**9th Line/16th Ave**



**$299,700**

Town House Bed rooms 3, Washrooms 3, New Mattamy Home In Cornell Community, Close To Shops, Schools & Transit And Parks

**Sale Of Business**



**$1,400,000 for sale**

Sale Of Business With Property Gas Stations Self Serve Now Look Petro Canada Gas Station With Convenience

**Commercial/Retail**



**$799,900**

Heart Of Richmond Hill. Well Known Sherton Parkway Mall Restaurant Unit.Own Almost 3000 Square Feet

**Sales of Business**



**$625,000**

Sale Of Business WithProperty Gas Stations High Traffic Highway Location.Sale Includes Land,5 Bay Auto Mec

RE/MAX
**Realtron Realty Inc. Brokerage**
**Independently Owned and Operated**
7800 Woodbine Ave. Penthouse, Markham,ON. L3R 2N7

**'I can also assist you with: Mortgage Financing Home Inspection, Real Estate Lawyer'**

# ‘நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்’’

## மூலிகைப்பொருட்கள் இரச குணவீரிய விபாங்களுக்கு (தன்மைகளுக்கு ) ஏற்ப வியாதிகளைக் குணமாக்கும்

**தூதுவளை** - இதன் தாவரவியல் பெயர் Solanum Trilobatum ஆகும். இதனைத் தூதுவேளை, சிங்கவல்லி எனவும் அழைப்பதுண்டு. இது ஒரு கொடியினத்தைச் சேர்ந்த மூலிகைச் செடியாகும். இத்தாவரத்தில் இருந்து இலை, பூ, காய், கொடி, வேர் என்பன பாவனைக்கு எடுப்பதுண்டு. உஷ்ண வீரியத்துடன் ஓரளவு கைப்புச் சுவையும் உடையது. இரசம், இரத்தம், மாமிசம், மேதஸ் அஸ்தி, மச்சை, சுக்கிலம் ஆகிய சப்த தாதுக்களினால் ஆன நமது உடம்பில் முத்தாதுக்களான வாதம், பித்தம், கபம் இவற்றில் விகாரநிலை ஏற்பட்டு கபம் (சளி), கூடிக்காணப்பட்டால் அவற்றை வெளியகற்றி உடல் வலிமையையும் கொடுக்கக்கூடியது.



இதன் இலை, பூ, காய், வேர், கொடி என்பன ஒவ்வொன்றும் அதனதன் தன்மையைக் கொண்டு செயலாற்றுகின்றன. ஆனால் இவையாவும் இங்கு பெற்றுக்கொள்வது கஷ்டம். இதன் இலை சில வேளைகளில் நமது வர்த்தகர்களின் கடைகளில் பெறமுடியும். இதன் இலையில் முட்கள் நெருங்கி இருப்பதைக் காணலாம். பாவனைக்கு எடுக்கும் போது முட்களை நீக்கிக் கொள்ள வேண்டும். இதன் செடியின் பயனை நாலடியில் சித்தர்களில் ஒருவரான தேரையர் விளக்குகின்றார்.

‘தூது பத்திரி யூன் சுவையாக்கும் பூ
தாது வைத்தழைப்பித்திடுங் காயது
வாத பித்த கபத்தையு மாற்றும்வே
றேதும் வல்லிபன்னேயு மொழிக்குமே’

எனவே இங்கு பெறக்கூடிய தூதுவளை இலையின் தன்மையைப் பற்றிப்பார்ப்போம்.

தூதுவளை இலையை எடுத்து அதில் உள்ள முட்களை நீக்கி சிறு துண்டுகளாக நறுக்கி ஒரு சுண்டு தண்ணீர் இட்டு ½ சுண்டாக வற்றவைத்து கசாயம் (குடிநீர்) செய்து காலை, மாலை வயதிற்கு ஏற்ப ஒரு தேகரண்டி வீதம் கொடுத்து வர இருமல், முட்டு, இழுப்பு யாவும் குறைந்து வருவதைக் காணலாம்.

காதில் இரைச்சல், அடைப்பு காணப்பட்டால் இலையின் சாற்றில் இரு துளி விட்டு வர யாவும் நீங்கும். இருந்தும் வைத்தியர்களின் ஆலோசனை, நோயின் தன்மை என்பவற்றைக் கையாழுவது சாலச்சிறந்தது. நுரையீரலில் காசநோய் (Pulmonary Tuberculosis) இதனை சுவாசகாச நோய் எனவும் அழைப்பர். இந்நோய் உள்ளவர்கள் குளிர்காலநிலைக்கு மூச்சுவிடக் கஷ்டம் ஏற்பட்டு துன்பப்படுவதுண்டு. இவ்வேளையில் குளிர்ந்த அன்ன ஆகாரங்களை கொடுப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். தூதுவளை இலையில் ஓரளவு எடுத்து முட்களை நீக்கி நன்கு துப்பரவு செய்து சிறு சிறு துண்டுகளாகப் பொடியாக்கிக் கொள்ளவேண்டும். அடுத்து சின்ன வெங்காயத்தை எடுத்து அதனை துப்பரவு செய்து சிறு துண்டுகளாக வெட்டி எடுத்த பின் ஒரு சட்டியில் ஓரளவு (ஒரு மே.க) நல்லெண்ணெய் இட்டு சூடாக்கி வரும்போது எண்ணெய் தன்மை காய்ந்தபின் வெங்காயத்தை இட்டுக்கிளற வேண்டும். வெங்காயத்தின் சிவப்பு நிறம் காணப்படும் போது பொடியாக்கிய தூதுவளையிலையை இட்டு, உப்பும் ஓரளவு சேர்த்துக் கொள்வது நன்று. பாகம் சரியான நிலை வந்தபின் இறக்கி, ஆறிய பின் உண்ணக் கொடுக்கவேண்டும். இதனால் மூச்சுக்கஷ்டம் நீங்கி விடும்.

மேலும் இத்தூதுவளை இலையை கீரையாகவும் எடுக்கலாம். இதனைச் சம்பலாகவும் பாகம் செய்து பாவிக்கலாம். இதனால் இருமல், உடல்வலி, புளிப்புத்தன்மை, மிஞ்சிய ஏப்பம், நெஞ்சுவலி, சளிப்பிடிப்பு இவையாவும் நாளடைவில் குறைவடைந்து வரும். நாம் உண்ணும் உணவுடன் சேர்த்துப் பாவிப்பதினால் கெடுதியில்லை. இதன் விசேட தரத்தால் சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் சில மருந்துகள் தயாரிக்கும் போது, சமூலமாகவோ, அன்றி தனித்தோ பாவனைக்கு எடுப்பதுண்டு. (சமூலம் என்பது வேரில் இருந்து யாவும்) இம்மருந்துகளை உரிய நோயாளர்களுக்கு கொடுத்து குணம் கண்டோர் பலர்.

உதாரணம்: மருந்துவகை தீரும் நோய்கள்

1. தூதுவளைக் கிருதம் - ஈழை இருமலுக்கு
2. அசுவகெந்திலேகியம் - விந்து நஸ்டம்
3. சித்தாதிலேகியம் - இரத்தக்கொதிப்பு
4. மாவேலிச்சூரணம் - வாதரோகம்

எனவே இதன் தன்மைகள் போற்றக்கூடியவை. வைத்தியர்களின் ஆலோசனையும், நோயின் நிதானமும் முக்கியமானது.

### சிறுகுறிஞ்சா

இதன் தாவரவியல் பெயர் Gymnema Sylvestris ஆகும். இது கொடிவகையை சேர்ந்தது. இதனைச் ‘சக்கரைக் கொல்லி’ எனவும் அழைப்பதுண்டு. துவர்ப்புச் சுவையுடன் உஷ்ணத்தன்மை உடையது. இதன் இலை, வேர் பாவனைக்குரியது. இதன் இலை பெரும்பாலும் வெற்றிலையின் வடிவத்தைக் கொண்டது. இதனை இங்கு நமது வர்த்தகர்களின் கடைகளில் பெற்றுக்கொள்ள முடியும். பெற்றுக்கொள்வது அருமையாக இருந்தாலும் பெற்றதைக் குளிர் சாதன பெட்டியில் வைத்துக் கொண்டு வந்தால் தேவைக்கு எடுத்துக் கொள்ளலாம்.



நமது இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு கூடிக் கொள்ளாமல் பாதுகாத்துக் கொள்ள முதன்மை பெற்ற மூலிகைச் செடியாக அமைகின்றது. இலையை எடுத்து நன்கு துப்பரவு செய்து உலர்த்திச் சூரணமாக்கி (தூள்), காலை, மாலை, சாப்பாட்டுக்கு முன் ½ தேக்கரண்டி வெந்நீருடன் பாவித்துவரக் குணம் கிடைக்கும்.

எனவே நீரிழிவு (Diabetes) நோயாளிகளுக்கு சாலச் சிறந்ததெனக் கூறலாம். இலையைத் துப்பரவு செய்து நன்றாக வாயில் இட்டுமென்றுவரும் போது வரும் சாறு நாவில் உள்ள இனிப்புச் சுவையின் தன்மையை மாற்றும் தன்மையுடையது. இடையிடையே நாம் உண்ணும் உணவுடன் சேர்த்து கொள்வதினால் நன்மையுண்டு. இந்த இலையைச் சுண்டிச் சாப்பிடலாம். அல்லது பிட்டுத் தயாரிக்கும் போது சேர்த்துப் பாவிக்கலாம். நீரிழிவு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளோர் இதன் சாற்றில் ஒரு மேசைக்கரண்டி காலை, மாலை ஒரு கிழமையில் இருநாட்கள் பாவிப்பதினால் நன்மையுண்டு.


**வைத்திய கலாநிதி**
**கே.ரி. கோபால்**
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 416.939.2013





**New Home Warranty Inspections**

**Pre-purchase Home Inspections**

*Nalliah Thayabharan BSSO CMI CEI RHI*

Building Science Specialist of Ontario®

Certified Master Inspector®

Registered Home Inspector®

***Building Experts Canada Ltd***

***416 332 1743 / www.buildingexperts.ca***

**Commercial Building Inspections**

**Environmental Assessments** Phase I, II & III

Specializing in Commercial Malls, Motels & Gas Stations

***Building Experts Canada Ltd***

***Tel.416 332 1743 / Fax 416 754 7032***

***www.buildingexperts.ca***





GSF
Golden Store Fixtures
Friend for your Business
OPENING
ON APRIL
VISIT OUR LARGE SHOW ROOM
SHOWCASES
GLASS DISPLAYS
COSMETIC DISPLAYS
GRID PANEL
METAL SHELVING
GARMENT RACKS
ACRYLIC PODIUMS
CD RACKS
SIGNS
SLATWALL PANELS
SLATWALL HOOKS
SHOPPING CARTS
BULK FOOD BINS
WIRE BASKETS
SHOPPING BASKETS
ESTIMATE in GTA
FREE
DELIVERY (over $100.00 purchase)
Tel:- 416.627.4335
355 ADMIRAL BLVD., UNIT 5, MISSISSAUG, ONT L5T 2N1
web: www.goldenstorefixtures.com
E_mail: info@goldenstorefixtures.com

# செருப்பு

உடம்பின் கால் பகுதியாக இருப்பதினால் கால் என அழைக்கப்படுகின்றது போலும். அவையே எம்மைத் தாங்கி நிற்கின்றன. நடப்பதற்கும் ஓடி ஆடி விளையாடுவதற்கும் வேலை செய்வதற்கும் அவை பயன்படுகின்றன. ஊர்திகள் கண்டு பிடிக்கப்படுவதற்கு முன்னர் காலால் நடந்தே மனிதன் பல இடங்களுக்கு பயணம் செய்கின்றான். இந்த நடைப்பயணம் காலப்போக்கில் நலிந்துவிட்டதனால் மனிதனின் ஆரோக்கியமும் கெட்டுவிட்டது. ஏனெனில் சுறுசுறுப்பான நடை உடல் நலத்திற்கு உகந்தது எனக் கூறப்படுகின்றது.

விவசாயிகள் சேற்றில் நடக்கிறார்கள். கடின உழைப்பாளிகள் கல்லிலும் முள்ளிலும் நடக்கிறார்கள். சிலர் எச்சிலிலும், புழுதியிலும், கழிவு நீரிலும், குப்பையிலும் நடக்கிறார்கள். இதனால் பாதங்கள் பழுதடைகின்றன. எனவே அவற்றைப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். பாதங்களைப் பாதுகாக்க மனிதன் கண்டுபிடித்ததே செருப்பாகும். இது ரப்பரினாலும் மிருகத்தோலினாலும் செயற்கைப் பொருளாலும் உருவாக்கப்படுகின்றது. இவற்றில் தான் எத்தனை வண்ணங்கள், எத்தனை வகைகள்.

வரலாற்றிற்கு முந்திய காலத்திலேயே செருப்பு கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. எகிப்து, சுமேரிய, மற்றும் கிரேக்க ரோமானிய நாகரிக மக்கள் செருப்பணிந்திருந்தனர் எனக் கூறப்படுகின்றது. பழந்தமிழன்கூட செருப்பை 'அடிபுதை அரணம்' என்று அழைத்திருக்கின்றான். இதிகாச காலத்திலும் செருப்பு இருந்திருக்கிறது. பரதன் இராமனிடம் சென்று அவன் பாதுகையைப் பெற்று வந்தான் என்று கூறப்படுகின்றது. பாதங்களைப் பாதுகாப்பது மட்டுமன்றி அவற்றை சிறுக்க செய்வதற்காகவும் செருப்பு அணியப்பட்டதாக கூறப்படுகின்றது.

செருப்பு என்பது மற்ற நாடுகளில் மனிதர்களாலும் இந்தியாவில் மேல் சாதியினராலும் அணியப்படுகின்றது எனக் கூறப்படுகின்றது. செருப்பு அவசியத்தேவை என்று கருதப்படாமல் அந்தஸ்த்தின் சின்னமாகவே இப்போ ஆக்கப்பட்டிருக்கின்றது. நமது பாதுகாப்பிற்காக செருப்பு அணியப்பட்டாலும் சிலவேளைகளில் அது நமக்குச் சுமையாகவும் அமைந்து விடுகின்றது. நம்மைச் சுமக்கும் செருப்பை நாம் சுமக்க வேண்டியிருக்கிறது. இதனால் செருப்பின்மீது ஒரு வெறுப்பு வந்து விடுகின்றது.



செருப்பை அணிந்ததும் சிலருக்கு நடையே மாறி விடுகின்றது. குதி உயர்ந்த செருப்புக்களை அணிந்து நடக்கும் நடையே நாகரிக நடையாக மாறிவிடுகின்றது. வெப்பநாடுகளிலும் குளிர் நாடுகளிலும் வசிக்கும் மக்களுக்கு செருப்பு அவசிய, அத்தியாவசியத் தேவையாகும். ஆனால் சிலருக்கு அது ஆடம்பரப்பொருளாகவும் அந்தஸ்தின் சின்னமாகவும் அமைந்து விடுகின்றது.

பணக்காரர்களுக்கு அந்தஸ்தின் சின்னமாகவும், ஏழைகளுக்கு கனவாகவும் சட்டசபையில் ஆயுதமாகவும், கோயில்களுக்கு வருமானமாகவும், பெண்களுக்கு கவசமாகவும் பிச்சைக்காரனுக்கு தலையணையாகவும் செருப்பு அமைந்துள்ளது. இருந்தும் கண்களுக்கு இமைகளை இயற்கை பாதுகாப்பாக பெற்றுள்ள நாம் கால்களுக்கு ஒரு இயற்கைப் பாதுகாப்பை பெறாதது துரதிஷ்டமேயாகும். இதனால் செயற்கைப் பாதுகாப்பான செருப்பை அணிகின்றோம். அது நமக்கு அவசியம் தேவை. ஏனெனில் கால்வழி புகும் நோய்களும் கணிசமானவையாகும்.

செருப்பை தைத்துக் கொடுப்பவன் தாழ்ந்தவனாகவும் அதனை அணிந்து கொள்பவன் உயர்ந்தவனாகவும் கருதப்படுவது வெட்கக் கேடாகும்.

உலக நாடுகளில் உள்ள எல்லா மக்களும் செருப்பணிந்துள்ளனர் என்று சொல்வதற்கில்லை. அரைப்பங்கினரே செருப்பணியும் வசதியுள்ளவர் களாக உள்ளனர். தோல் உற்பத்தியும், செருப்பு உற்பத்தியும் பெருகி உள்ள போதிலும் இந்நிலை நிலவுவது வருத்தத்திற்குரியது.

ஒரு செருப்பே இல்லாத மக்கள் பலர் இருக்கின்ற நிலையில் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி இமெல்டா மார்க் கோஸ் மூவாயிரம் சோடி செருப்பு வைத்திருந்தாளாம். கிராமங்களில் அனேகரின் பாதங்கள் நிர்வாணமாக இருக்கும் போது ஒருவரின் காலடியின் கீழே பல கோடி செருப்புக்கள் நசுங்குவதும் உண்டு.

மதுரைக்கு வந்திருந்த மகாத்மகாந்தி மேலாடை இல்லாத விவசாயியைப் பார்த்து தனது மேலாடையை துறந்ததுபோல அவனது பாதங்களைப் பார்த்திருந்தால் தனது செருப்பையும் துறந்திருப்பார். எவ்வளவு விலை மதிப்புடைய செருப்புக்களாக இருந்தாலும் அவற்றை வெளியில்தான் விடுகின்றோம். இதனால் பொது இடங்களில் செருப்புகள் களவாடப்படுவதும் உண்டு. வெளி இடங்களில் விடுவதனால் செருப்பின் மதிப்பின்மை விளங்குகிறது. ஆனாலும் மகான்களின் பாதரட்சைகள் வணக்கத்துக்குரியனவாக அமைந்துவிடுகின்றன. 14 ஆண்டுகள் அயோத்தியை பாதுகை ஆட்சி புரிந்தது அதன் மகத்துவத்தை உணர்த்துகின்றது.

வேண்டாத, விரும்பாத ஒன்றை செருப்பு என்று அழைப்பதிலிருந்து அதன் இழிநிலை புரிகின்றது. மனம் விரும்பியபடி செயற்படாத மருமகள் மாமியாருக்கு செருப்பாகவே தென்படுகின்றாள்.



**நா. க. சிவராமலிங்கம்**

# சறுக்கியது! சம்பியன்!

06ஆம் பக்கத்தொடர்ச்சி

இந்திய வீரர்களுக்கு கேட்டவுடன் அவுட் என்று இவரது நடுவர் திறமையின் மீது ஏகப்பட்ட சர்ச்சைகள் எழுந்து கடைசியில் இந்திய அணி நிர்வாகத்தின் கோரிக்கைக்கேற்ப இவர் அந்த தொடரிலிருந்து நீக்கப்பட்டார்.இந்த ரெஸ்ற் போட்டியை தவிர மற்ற போட்டிகளில் இவரது நடுவர் பணி சிறப்பாகவே அமைந்தது என்று கூறலாம். ஓய்வு பெற்றவுடன் மேற்கிந்திய தீவுகள் வாரியத்துடன் இணைந்து நடுவர் தரத்தை உயர்த்தப் பாடுபடப் போவதாக தெரிவித்துள்ளார்.

புதுடில்லி - ஜான்சன், கிளார்க், பாண்டிங்கை தொடர்ந்து மற்ற அவுஸ்திரேலிய வீரர்களும் இரண்டாவது ஐ.பி.எல் தொடரில் பங்கேற்பதில்லை என முடிவெடுத்து இருப்பதாக தெரிகிறது. இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) சார்பில் இரண்டாவது 'டுவென்டி 20' தொடர் வரும் ஏப்ரலில் துவங்க இருக்கிறது. இதற்கான வீரர்கள் ஏலம் சமீபத்தில் முடிந்தது. 2வது கட்ட ஐ.பி.எல் தொடரில் கலந்து கொள்ள முடியாது என அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்துக வீச்சாளர் மைக்கேல் ஜான்சன், துணை அணித்தலைவர் மைக்கேல் கிளார்க் ஏற்கனவே அறிவித்து இருந்தனர். இவர்களைத் தொடர்ந்து பாண்டிங்கும் இதில் பங்கேற்க முடியாது என தெரிவித்தார்.

**தேசம் முக்கியம்** - கடந்த முறை கல்கட்டா நைட் ரைடர்ஸ் அணியின் முக்கிய வீரராக இடம் பெற்றிருந்த அவுஸ்திரேலியாவின் பாண்டிங் கூறுகையில், 'தேசத்தின் முன்பு மற்றவைகள் எல்லாம் அடுத்துதான். அவுஸ்திரேலியாவுக்காக அனைத்தையும் தியாகம் செய்வேன்' என தெரிவித்து இருந்தார். தற்போது பாண்டிங் வழியில் மற்ற வீரர்களும் செல்வது போல் உள்ளது. ரெஸ்ற், ஒருநாள் 'டுவென்டி -20' என அவுஸ்திரேலியாவின் மூன்று வகையான அணியிலும் இடம்பெறுபவர் மைக்கேல் ஹசி, இந்த ஆண்டு சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் ஸ்டாராக இருப்பார் என கணிக்கப்பட்டது. இம்முறை இவர் பங்கேற்பது சந்தேகமாக உள்ளது. கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியில் கடந்த ஆண்டு அசத்தியவர் மார்ஷ். இவருக்கு அவுஸ்திரேலிய ரெஸ்ற் அணியில் இடம்இல்லை. இருப்பினும் சிலவாரங்கள் மட்டுமே ஐ.பி.எல் தொடரில் பங்கேற்பார் என தெரிகிறது. மற்றொரு வீரர் பிரெட் லீ காயத்தில் இருந்து குணமடைந்து விட்டாலும் இம்முறை ஐ.பி.எல் போட்டிகளில் பங்கேற்கமாட்டார். ஆனால் இது குறித்து அணியின் அணித்தலைவர் யுவராஜ் கூறுகையில், 'பிரெட்லீ விரைவில் குணமடைய வாழ்த்துகிறேன்', என்றார்.

காரணம் என்ன? இதன்மூலம் ஐ.பி.எல் தொடரை அவுஸ்திரேலிய வீரர்கள் ஒட்டுமொத்தமாக புறக்கணிப்பது தெரியவருகிறது. கடந்த ஆண்டு நடந்த முதல் கட்ட ஐ.பி.எல் தொடரில் பங்கேற்ற அவுஸ்திரேலிய வீரர்கள் பலர் காயமடைந்தனர். இரண்டு வாரம் மட்டும் போட்டிகளில் பங்கேற்பது என்பது அதிகமாக தெரியாது. ஆனால் நீண்ட நாட்கள் நடக்கும் ஐ.பி.எல் போட்டிகள் அதிக அளவு சோர்வைத் தருவதாகவும், வீரர்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்துவதாகவும் கடந்த ஆண்டு பங்கேற்ற அவுஸ்திரேலிய வீரர்கள் தெரிவித்துள்ளனர். இதனை தவிர்ப்பதற்காகவும் விலகி இருப்பதாக தெரிகிறது. ஆனால் சமீபத்தில் சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற அவுஸ்திரேலியாவின் கில்கிறிஸ்ட், ஹைடன், வார்ன் முதலிய வீரர்கள் இந்த அதிரடி திருவிழாவில் கலந்து கொள்ள உள்ளனர்.

## "ஆபிரிக்க காரிருளே..! அமெரிக்க சூரியனே."

நலிவுற்ற யினத்தின் நிமிர்ந்த நாயகனே.
நடு நெருப்பில்..நடந்த உயர்ந்த மனிதனே..
நீங்கள்அமெரிக்க நாட்டின்அதிபரானதை...
நான் நினைத்து பார்க்கிறேன். ஒருகணம்
நினைத்துப் பார்த்தால் நெருங்கமுடியுமா?
வெள்ளை ரோசாவில் மலர்ந்த கறுப்பு ராசாவே..
நாற்திசையும் போற்றும் நினைவழியா சின்னமே.
ஆபிரிக்க காரிருளே.!அமெரிக்க சூரியனே..பராக் ஒபாமாவே..!

ஆங்கில சொல்மழை.. அகராதியோ..உங்கள்..
ஆற்றலுக்கு ஆலவட்டம் வீசியது..
சாந்த மொழி உங்கள் நாவில் சேர்ந்து..
காந்தம் உங்கள் விழிகளில் கலந்தது...
வீரமும் விவேகமும் ஒன்றாய் யிணைந்தது _உங்கள்
இதயமோ எதையும் தாங்கும் புயலானது..!
அமெரிக்க தேசத்தின் ஆபிரிக்க புலியே_நீங்கள்
புரட்சித் தலைவனானீர்கள் அமெரிக்க தேசத்திற்கு..!!

அமெரிக்க யுகத்தின் அற்புதத்தலைவனே..நீங்கள்
வருவதற்குமுன்பே..?அமெரிக்காவில் வரலாறுண்டு....
ஆண்டாண்டு காலம் வெள்ளை அமெரிக்கர்களுக்கு
ஆபிரிக்க கறுப்பினம் கொத்தடிமையினமென்றும்
கொலை, களவு, வறுமை கல்லாமை கொண்ட
இனமென்ற கறுப்பு இனங்களின் பாவப் பழிகள்..
சூனியத்தை களைத்தெறிந்த.. சூரிய நாயகனே..
ஆபிரிக்க இனத்தின் இதயஜோதி..நீங்களின்று....!!!

ஆட்சி போகும் வரும் அது நிலையல்ல- நீங்கள்
அமெரிக்க தேசத்தின் அதிபரானது உறுதி..
அகிலம் போற்றும் அபூர்வத் தலைவனே..ஒபாமாவே
விடுதலை தேடுமினங்கள் விட்டில் பூச்சிகளல்ல..
வானில் பறக்கும் விடுதலை பறவைகளென்பதை..
சிறுபான்மையினங்களுக்கு..சிந்திக்க வைத்த சிந்தனை சிற்பியே..
அமெரிக்க நாட்டின் நினைவழியா சின்னமே..பராக் ஒபாமாவே..
அமெரிக்க யுகத்தில் புதுவரலாறு படைத்திட வாழ்த்துகின்றோம்..!!!!

கனடாத் தமிழர்கள்- ஈழத் தமிழர்கள் சார்பாகவும் வாழ்த்துகின்றோம்.. வரவேற்கின்றோம்..
கவிஆக்கம்:- வட்டக்கச்சி சுயகவி துரை வெளியீடு:- Central Driving School..[416-890-5273]
பராக் ஒபாமா கனடா வருகைக்காக 19-02-2009

# ஆபத்தான நண்பர்கள்

## ஓடும் நீர் உறைவதில்லை 80

நட்பு என்பது ஒரு அதிசிறந்த கொடை. இந்த உலகின் ஒட்டுமொத்தமான இயக்கமும் நட்பின் அடிப்படையில்தான் அமைந்துள்ளது. நட்பு என்பதன் இன்னொரு பொருள் இணக்கம் என்பதாகும். இயற்கையானது, மனிதன் உள்ளடங்கலாக ஒரு இணைப்பின் ஒழுங்கு முறையில் தான் அமைந்துள்ளது. சூரியன், சந்திரன் நட்சத்திரங்கள், கோள்கள் எல்லாமே ஒன்றுக்கொன்று ஒரு ஒழுங்குமுறையில் இணங்குதல் என்ற வடிவில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதனால் தான் நட்பு என்பது இந்த உலகின் இயக்கத்தின் ஆணிவேராக அமைந்துள்ளது.

நமது நாளாந்த வாழ்க்கையானது பல்வேறு வகையான நடவடிக்கைகளின் தொகுப்பாக அமைகின்றது. உறக்கத்தில் இருந்து எழுந்து உறக்கத்துக்குச் செல்லும்வரையான அத்தனை நடவடிக்கைகளும் ஒன்றுடன் ஒன்று இணைந்து ஒன்றுக்கொன்று ஒத்தாசை வழங்குவதன் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. இதனால் தான் நாம் தெரிந்தும் தெரியாமலும் பல நட்புகளின் இணைப்பால் நமது வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கின்றோம். எனவே நட்பு என்பது நமது வாழ்வின் அத்திவாரம் என்பதை மறந்துவிடவோ அல்லது துறந்து விடவோ முடியாது. அதாவது நட்பு இன்றி வாழ்க்கை இல்லை என்பதே உண்மையாகும்.

உலகில் படைக்கப்பட்டுள்ள அத்தனை உயிரனங்களும் இயற்கையின் பங்களிப்பால் தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இங்கே பங்களிப்பு என்பது ஒத்துழைப்பு என்று பொருள் கொள்ளப்படல் வேண்டும். இந்த ஒத்துழைப்பின் அடிப்படையாக அமைவதுதான் நட்பு. இதனால் தான் நட்பு என்பதை நாம் பெரும்பாலும் மனிதனுடன் மட்டும் தொடர்புபடுத்துகிறோம். காரணம் என்னவெனில் ஒத்துழைப்பு என்பது இரு மனிதர்களுக்கிடையிலான உடலியல், உளவியல் பரிமாற்றம் என்பதுடன் மட்டும் நிறுத்திக் கொள்கிறோம். மாறாக நமது ஒவ்வொரு கணப்பொழுதும் பல்லாயிரக் கணக்கான (மனிதன் மட்டுமல்ல) மனிதனல்லாத இயற்கையின் பல படைப்புக்களின் ஒத்துழைப்பால் நகர்த்தப்படுகின்றது என்பதும் நாம் அறிந்து கொள்ள வேண்டிய விடயமாகின்றது.

இப்போது நமக்குப் பழக்கப்பட்டுவிட்ட நட்பு என்பதைச் சிறிது ஆழமாகப் பார்ப்போம். நட்பு என்பது இணக்கம் என்பதன் அடிப்படையில் இரண்டு மனிதஜீவன்களின் ஒருங்கிணைக்கப் பட்ட செயல்முறையாகும். இரண்டு நபர்களுக்கிடையிலான இந்த இணக்கம் என்பது புரிந்துணர்வால் முன்னெடுக்கப்படுவது. நட்பின் மிகவும் உன்னதமான வடிவம் குடும்பமாகும். இங்கே கணவன், மனைவி என்ற பந்தத்துக்குள் வரும் இரு மனித ஜீவன்களின் சிறந்த புரிந்துணர்வுடன் கூடிய ஒன்றிணைப்பே குடும்ப மாகின்றது. இந்த இரண்டு மனிதஜீவன் களினதும் நட்பே அந்தக்குடும்பத்தின் ஆரம்பமாகவும் முடிவாகவும் அமைவதால் நட்பு குடும்பத்தின் ஆணிவேராக அமைகின்றது. நட்பு இல்லை யேல் குடும்பம் இல்லை. குடும்பம் என்பது உறவுகளின் சேர்க்கை அல்ல. உள்ளங்களின் சேர்க்கை. உள்ளத்தின் வெளிப்பாடு நட்பு. எனவே நட்பின் வெளிப்பாடே குடும்பமாகின்றது. இதனால்தான் ஒரு மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட உயர்ந்த நட்புக்கான வாய்ப்பாக அமைவது குடும்பமாகின்றது.

இப்போது ஒரு முக்கியமான விடயத்தை நாம் கவனித்தல் வேண்டும். நட்பு என்பது குடும்பதின் அடித்தளமாக அமைவதுபோல், அதாவது கணவன், மனைவி என்ற பந்தத்துக்குள் அமைவது போல் பிறருடனான நட்பு அமைவதில்லை என்பதும் கவனிக்கப்பட வேண்டியதாகின்றது. ஒரு மனிதனின், தனிப்பட்ட சமுதாய, கலாச்சார பணபாட்டு முறைகள் சார்ந்த, சட்டவியல் சார்ந்த விடயங்களின் வரையறைகள் ஒரேமாதிரியான நட்பை எல்லோருடனும் உருவாக்கிக்கொள்ள வழிவகுப்பதில்லை. இந்தவகையான வரைய-றைகள் சமுதாய ஒருங்கமைப்பிற்காக நடைமுறைப்படுத்தப்படுவதாக அமைகின்றன. அதேநேரத்தில் குடும்பம் என்ற கட்டுக் கோப்புக்குள் உள்ள நட்பானது பல உடமைக-ளையும் உரிமைகளையும் அதேநேரத்தில் எதிர்காலத்திற்கான குழந்தைகளின் மனோபாவ வளர்ச்சிக்கான பாடசாலையாகவும் அமைவதால் அவ்வாறான வரையறைகளுக்குட்பட்டேயாக வேண்டிய தேவைப்பாடும் அவசியமாகின்றது. எனவே கணவன், மனைவிக்கிடையிலான நட்பானது சமுதாயக் கட்டமைப்பின் ஆணிவேராக அமைகின்றது.

இப்போது கணவன், மனைவி நட்புமுறைக்கு அப்பாற்பட்டவர்களது நட்பு எவ்வாறு அமையவேண்டும் என்பதைப் பார்ப்போம். நண்பர்கள் என்று நாம் கூறும்போது அவர்கள் யார், எப்படிப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும், எதைச் செய்தல்வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அதே நேரத்தில் நாம் ஒரு சிறந்த நண்பனாக இருப்பதற்குத் தேவைப் படுகின்ற மனோபாவங்கள் என்ன என்பதும் இங்கு ஆராயப்படுகின்றது. நடைமுறையில் நாம் மற்றவர்கள் சிறந்த நண்பராக இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பது போல் நாம் மற்றவர்களது எதிர்ப்பார்ப்புக்கு ஏற்றவாறு நமது நட்பை நடைமுறைப்படுத்துகின்றோமா என்பதை கவனத்தில் எடுப்பதில்லை. எனவே நட்பு என்பது இருபக்க ஒத்துழைப்பின் பிரதிபலிப்பாகும் என்ப தால் இங்கு குறிப்பிடப்படும் விடயங்களை நாமும் நடைமுறையில் பயன்படுத்தல் அவசியமாகும்.

நட்பிற்குட்படும் இருவரை நாம் நண்பர்கள் என்கிறோம். இந்த நபர்கள் உளவியல், உடலியல் ரீதியாக ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி வேறுபட்டவர்கள். இங்கே இருவேறுபட்ட இருவர்களுக் கிடையிலான இணக்கப்பாட்டிற்கு அடித்தளமாக அமைவது நட்பாகும். இந்த நட்பு எப்பொழுது ஒரு பகுதியால் மீறப்படுகின்றதோ அல்லது மதிப்பிழக்கச் செய்யப்படுகின்றதோ அப்பொழுது முதல் நட்பு முடிவடைந்து விடுகின்றது. சில சந்தர்ப்பங்களில் சிறிய தவறுகளால் முறிவடையும் நட்புக்கள் தற்காலிகமானவையாக அமைவதால் காலப்போக்கில் முறிந்த நட்பு மீண்டும் இணைக்கப்படுவதும் உண்டு. எனவே ஒரு நட்பின் இழப்புக்குக் காரணமான விடயத்தைப் பொறுத்தும் அந்த இரு நபர்களுடைய தன்மையைப் பொறுத்தும் நட்பின் முறிவு நிரந்தரமானதாகவோ அல்லது தற்காலிகமானதாகவே அமையும்.

இன்னொருவகையான நட்பின் மதிப்பிழப்பானது ஒருவரது அல்லது ஒரு குடும்பத்தின் ஆணிவேரையே அறுப்பதாக அமையும் போது அது பகைமையை உருவாக்கி விடுகின்றது. அவ்வாறான பகைமையானது பல்வேறு பிரச்சினைகளுக்கும் அடிப்படையாகவும் அமைந்துவிடுகின்றது. நண்பர்களாக இருந்தவர்கள் ஒருவரையொருவர் வெறுக்கும்

**KG Master-*kgmaster@rogers.com***

அளவிற்கு நடந்து கொள்ளும்போது ஏற்படும் பகமை உணர்வானது மீண்டும் நட்பை உருவாக்குவதற்கு இடமளிக்காததாக அமைந்து விடுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களால் உருவாகும் நட்பின் இழப்பு அல்லது உருவாக்கப்படும் பகைமையானது ஒட்டப்பட முடியாத சுட்ட மண்ணாக அமைகின்றது. இங்கே ஒருவிடயம் மட்டும் வெளிப்படையானது. அதாவது இவர்கள் நண்பர்கள் அல்ல என்பது உறுதிப்படுத்துகின்றது.

ஆனால் இங்கு நான் குறிப்பிடும் ஆபத்தான நண்பர்கள் எனப்படுபவர்கள் நமது விரோதி களல்ல. துரோகிகளும் அல்ல. இவர்கள் நமது நட்பை மதிப்பவர்கள். நட்புக்கு எல்லையிடாத வர்கள். தொடர்ச்சியாக நமது நட்பைச் சிறப்பாக மதிப்பவர்கள். ஆனால் மிகவும் ஆபத்தானவர்கள். நாமாக அறிந்து நம்மைப்பாதுகாத்துக் கொண்டால் ஒழிய இவர்களிடம் இருந்து நாம் தப்பமுடியாது. உண்மையில் இவர்கள் அப்பாவிகள் தனது நண்பனுக்கு ஆபத்து விளைவிக்கின்றோமே என்பதை அறியாதவர்கள். இவர்களிடம் வசமாக மாட்டிக்கொள்பவர்களும் இவர்களைப் போன்ற அப்பாவிகள் தான் இவர்கள் தமக்குப் பாதிப்பு ஏற்படுத்தப்படுவதையும் உணர்வ தில்லை. தம்மால் மற்றவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றதே என்பதையும் உணருவதில்லை. ஒட்டு மொத்தமாகக் கூறுவதாயின் நண்பர்களாக இருந்து கொண்டே தமக்கும் பிறருக்கும் ஆபத்தை விளைவிக்கும் அப்பாவி நண்பர்தான். இவர்கள் எந்தவகையான ஆபத்தை ஏற்படுத்துகிறார்கள்?

ஒருமனிதனுக்கான ஆபத்து என்பது அவரால் இழக்கப்படுவதால் தீர்மானிக்கப்படுகின்றது. இழப்பு பெரிதாயின் பெரிய ஆபத்து என்றும் சிறியதாயின் சிறிய அளவான ஆபத்து என்றும் கூறுகின்றோம். உண்மையில் ஒரு மனிதனின் மிகப் பெரிய இழப்பு என்பது என்ன என்பதை அதிபெரும்பான்மையானவர்கள் அறியாமல் இருப்பதே இந்த ஆபத்தின் தன்மையைப் புரிந்து கொள்ள முடியாமல் அமைந்துள்ளது. குறிப்பாகக் கூறுவதாயின் நாமாக, நமது உழைப்பால் சேகரிக்கப்பட்ட, சேமிக்கப்பட்ட உடைமை அல்லது உரிமை கொள்ளப்பட்ட வற்றின் இழப்பையே நாம் இழப்பு என்றும் அதற்கான காரணியாக இருந்தவற்றை ஆபத்து என்றும் கருதுகிறோம். முதலீடுகள் உடமைகள் உறவுகள் என்பன இவ்வாறானவற்றுள் அடங்குகின்றன. ஆனால் பணரீதியான பெறுமதி கள் கொடுக்கப்படமுடியாத ஆனால் உயிர் வாழ்தலுக்கு அவசியமானவையாகிய ஐம்பூதங்கள்: நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்பனவற்றுடன் மிகமிக முக்கியமான இன்றும் ஒன்று உள்ளது. இந்த ஐம்பூதங்கள் கூட இவ்வுலகில் வாழும் ஒவ்வொருவருக்கும் சமமாகப் பகிரப்படவில்லை. ஆனால் இந்த ஆறாவது மூலம் எந்த வேறுபாடும் இன்றி எல்லோருக்கும் சரிசமமாகப் பகிரப்பட்டுள்ளது. அதுதான் “நேரம்” எனப்படுவதாகும்.

ஒரு மனிதனின் சிறப்பும் சிறப்பின்மையும் அவரது நேரப்பயன்பாட்டினால் தீர்மானிக்கப்படுகின்றது. நேரத்தின் பயன்பாடு என்பது நிகழ்காலத்திற்குரியது மட்டுமே. எதிர்காலம் என்பது இன்றின் தொடர்ச்சியாகின்றது. இதனால் தான் நிகழ்காலத்தின் நேரப்பயன் பாடும் அதன் விளைவுகளுமே எதிர்காலத்திற் கான பெறுபேறுகளாக அமைந்து விடுகின்றன என்ற உண்மையை நாம் உணர்ந்து கொள்ளல் வேண்டும். இன்று, இப்போது செய்யக் கூடியவற்றை நாளை எனப் பின்போடுவது ஒரு மனிதனின் மிகப்பெரிய தவறும் மிகப் பெரிய அளவில் தண்டிக்கப்படுவதாகவும் அமைந்து விடுகின்றது. காரணம் என்னவெனில் இன்று பயன்படுத்தப்பட வேண்டிய நேரத்தையும் வீணடித்துவிட்டு நாளை கிடைக்கும் நேரத்தை யும் திருடுவதாகி விடுகின்றது. இதனால் செலவழித்த நேரமும் திருடப்பட்ட நேரமும் மொத்த நட்டத்தையே அதன் விளைவுகளாகத் தருகின்றன.

இப்போது இந்த நேர இழப்பிற்கும் நண்பர்களுக்கும் என்ன தொடர்பு இருக்கின்றது என்பதைப் பார்ப்போம். நண்பன் என்றவகையில் தானும் அறியாது மற்றவரும் அறியப்படாத விதத்தில் அனாவசியமான முறையில் நேரத்தை வீணடிப்பவர்கள் அவர்கள் நண்பர்களானாலும் ஆபத்தானவர்களே! ஏனெனில் ஒருவரது எதிர்காலச் சிறப்பு என்பது நிகழ்காலத்தில் நேரத்தைச் சிறப்பாக பயன்படுத்துவதால் மட்டுமே நிர்ணயிக்க முடியும். இதனால் எவர் ஒருவர் நண்பனென்ற வகையில் தனது நேரத்தையும் பாழாக்கி மற்றவரது நேரத்தையும் வீணாக்குகிறாரோ அவரே மிகவும் ஆபத்தான நண்பனாகின்றார்.

ஆம் வாசகர்களே!
தவறான வழியில் நேரத்தை வீணடிப்பவர்களும், நம்மை வீணாடிக்கத் தூண்டுபவர்களும் மிகவும் ஆபத்தான நண்பர்கள். ஏனெனில் இழக்கப்பட்ட நேரத்தினை ஒரு பொழுதும் ஈடுசெய்யமுடியாது என்பதால் இதைவிட ஒரு ஆபத்தை வேறு எந்தவழியிலும் ஏற்படுத்தமுடியாது. எனவே ஆபத்தான நண்பர்களை இனங்காண்பதும் மற்றவர்களுக்கு ஆபத்தான நண்பர்களாக நாம் செயற்படாமல் இருப்பதும் நமது வாழ்வின் குறிக்கோளாக அமையட்டும்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகையிலும் ஒலிவடிவில் வாரம் தோறும் திங்கட்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கு கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமானவரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

*நன்றியுடன் KG Master*


**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

**1-877-707-3223 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**

**மஹராஜியின் உரைகள்**

| On DVD | On TV |
|---|---|
| இலவச DVDக்கு அழையுங்கள் | Saturdays at 10:30 am |
| (416) 431-5000 | Rogers Cable Channel - 20 |
| 1 877 707 3223 | Bell Express vu Channel - 219 |



# மரபுடன் இணைந்த நவீனம்

## அல்லா ரக்கா ரஹ்மான்



இந்தியாவில் அதிகம் விற்பனையாகும் ஒரே திரை இசையமைப்பாளர், அல்லா ரக்கா ரஹ்மான் என்கிற ஏ.ஆர்.ரஹ்மான், இன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படும் குறிப்பிடத்தகுந்த இசையமைப்பாளர்களில் ஒருவராகியிருக்கிறார். இந்திய - பிரிட்டீஷ் தயாரிப்பான 'ஸ்லம்டாக் மில்லியனர்' படத்தின் இசைக்காக, மூன்று பிரிவுகளில் 81ஆவது அமெரிக்க அகாடமி விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டு, இரண்டு பிரிவுகளில் விருது பெற்றிருக்கிறார். இதுதான் உலகளவில் அவருக்கு கிடைக்கும் முதல் அங்கீகாரம். தமிழன் உலக சினிமாவில் பதிக்கும் முதல் முத்திரை!

ஆஸ்கர் விருதுபெறும் முதல் தமிழன் என்பதுடன், 'எல்லா புகழும் இறைவனுக்கே' என்று ஆஸ்கர் மேடையில் தமிழில் பேசி உலகத் தமிழர்களுக்கு இன்ப அதிர்ச்சியை வழங்கினார் ரஹ்மான். இதனால் இயல்பாக தமிழர்களிடையே உருத்திரண்ட உற்சாகம், உணர்ச்சிப் பெருக்கானது. ஆஸ்கர் விருதுகளுடன் நள்ளிரவு சென்னை விமான நிலையத்தில் ரஹ்மான் வந்து இறங்கிய போது, அந்த உணர்ச்சிப் பெருக்கு கரைபுரண்ட வெள்ளமானது.

சுருண்ட தலைமுடி, டி-சர்ட் அல்லது காட்டன் சர்ட், ஜீன்ஸ் என்று ரஹ்மான் பார்ப்பதற்கு கல்லூரி செல்லும் ஒரு மாணவனைப் போல்தான் இருக்கிறார். நாற்பத்து மூன்று வயது என்று சொன்னால் நம்ப சிரமமாக இருக்கிறது. (1967ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் தேதி பிறந்தவர் ரஹ்மான்) ஆனால், 1992ஆம் ஆண்டு சிறந்த திரைப்பட இசையமைப்பாளருக்கான தேசிய விருது, ரஹ்மானுக்கு, அவருடைய முதல் படமான 'ரோஜா'வுக்கு வழங்கப்பட்டபொழுதே அவருக்கு வயது இருபத்தைந்து தான். பிலிம்பேர் விருது, சினிமா எக்ஸ்பிரஸ் விருது, பொம்மை நாகிரெட்டி விருது, தெலுங்கு புரஸ்கர் அகாதமி விருது போன்ற குட்டிக்குட்டி விருதுகள் பலவற்றை பலமுறை அக்காலங்களிலேயே ரஹ்மான் பெற்றாகிவிட்டது. இந்திய அரசின் 'பத்மஸ்ரீ' விருது, ராஜீவ் காந்தி விருது போன்ற பெரிய விருதுகளையும் இசைக்காக மிகச் சிறிய வயதிலேயே பெற்றுவிட்டார். ஒரு திரைப்பட இசையமைப்பாளர் 'பத்மஸ்ரீ' விருது பெற்றது, முதல்முறையாக ரஹ்மான் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று ஆஸ்கர் விருதுகளைக் கையில் பற்றியிருக்கும் ரஹ்மானின் விரல்கள், அவற்றின் பிஞ்சு நாட்களிலேயே இசைக் கருவிகளுடன் விளையாடத் தொடங்கிவிட்டவை. இசையில் தேர்ந்த ஒரு குடும்பத்தில் பிறந்தவர், ரஹ்மான். அவரது தந்தை கே.ஏ.சேகர், தென்னிந்தியாவில் நன்கு தெரிந்த ஒரு இசையமைப்பாளர். இந்தியாவில் முதன் முதலாக சிந்தஸைஸர் (Synthesizer,) வாங்கியவர் சேகர் தான் என்பது குறிப்பிடத்தக்கது. 1973ஆம் ஆண்டு சிங்கப்பூரில் அதை அவர் வாங்கியிருக்கிறார். மூன்று வயதில் இருந்தே கே.ஏ.சேகர், ரஹ்மானை இசைப் பயிற்சிகள் எடுத்துக்கொள்ளச் செய்தார். எனவே, அன்று தொடங்கி ரஹ்மானின் குழந்தைப் பருவ வளர்ச்சி இசையுடன் சேர்ந்தே இருந்தது. மூன்றரை வயதான போது அவருக்கு ஆர்மோனியம் வாசிக்கத் தெரிந்திருந்தது. அடுத்த சில வருடங்களில் கீபோர்டை கையாளுவதிலும் நன்கு தேர்ச்சி பெற்றார். ஒருவகையில், தன் தந்தையினுடைய கனவின் திரட்சிதான் ரஹ்மான் எனலாம். ரஹ்மானுக்கு ஆஸ்கர் விருது அறிவிக்கப்பட்டவுடன், "அவருக்கு அப்பாவின் ஆசி இருக்கிறது" என்று இளையராஜா சொன்னதற்குப் பின்னால், சேகரை நன்கு தெரிந்தவர்கள் மட்டுமே உணரக்கூடிய ஆயிரம் அர்த்தங்கள் இருக்கலாம்.

ஆனால், கே.ஏ.சேகர் மரணத்துக்குப் பிறகு ரஹ்மானின் குடும்பம் பொருளாதார ரீதியாக பல இன்னல்களையும் துன்பங்களையும் சந்திக்க நேரிட்டது. தந்தை நீண்ட காலங்கள் உடல் நலமின்றி இருந்ததால் ரஹ்மானின் குழந்தைப் பருவத்தின் பெரும் பகுதியும் மருத்துவமனையிலேயே கழிந்தது. குடும்பச் சுமையைக் குறைப்பதற்காக, பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு, கீபோர்டை கையாளுவதில் பெற்றிருந்த தேர்ச்சியை பயன்படுத்தி ரமேஷ் நாயுடு, எம்.எஸ்.விஸ்வநாதன், இளையராஜா போன்ற அன்றைய திரை இசைப் பிரபலங்களிடம் சேர்ந்து பணி புரிந்தார், ரஹ்மான். பின்னாட்களில் ரஹ்மானுக்கு லண்டன் டிரினிட்டி இசைக் கல்லூரியில் பயிலுவதற்கான ஸ்காலர்ஷிப் கிடைத்தது. ரஹ்மான் லண்டன் சென்றார்.

இசையை நோக்கி கவரப்பட்ட ரஹ்மான், அதற்கு இணையான கோட்டில் ஆன்மீகத்தை நோக்கியும் கவரப்பட்டார்.ரஹ்மானின் தந்தைக்கு அவருடைய கடைசி காலங்களில் தீராத வயிற்று வலி இருந்தது. செய்வினை காரணமாகத்தான் தன்னுடைய தந்தைக்கு இந்நோய் ஏற்பட்டது என்று ரஹ்மான் நம்பினார். இஸ்லாமை நோக்கி ரஹ்மான் கவரப்படுவதற்கு இதுவே காரணம் என்று சொல்கிறார்கள். அவர் இஸ்லாத்தின் ஒரு பிரிவான சூஃபித்துவத்தைத் தன் வாழ்க்கை முறையாக ஏற்றுக்கொண்டார். தாய் கரீமா, சகோதரிகள் இஸ்ரத் மற்றும் ரெஹ்மா ஆகியோரையும் சேர்த்து குடும்பமாக இஸ்லாத்துக்கு மாறினார். கே.எஸ்.திலீப்குமார் என்ற தன் இயற்பெயரை அல்லா ரக்கா ரஹ்மான் என மாற்றிக்கொண்டார். அல்லா ரக்கா என்பது புகழ்பெற்ற தபேலா கலைஞர் ஜாகீர் உசேனின் தந்தை பெயர். அல்லா ரக்காவிடம் இருந்துதான் தனக்கு இசையை நோக்கி ஈடுபாடு ஏற்பட்டது என்று ரஹ்மான் குறிப்பிட்டிருக்கிறார். 1995இல் ரஹ்மான் சாய்ரா பானுவை திருமணம் செய்துகொண்டார். ரஹ்மானுக்கு இரண்டு பெண் குழந்தைகள், ஒரு மகன் இருக்கிறார்கள்.

மீண்டும் தமிழகத்துக்கு திரும்பி வந்தபோது, ரஹ்மானிடம் இசைப் பயிற்சியுடன் பெருங்கனவுகளும் இருந்தது. சென்னைக்கு திரும்பி வந்த ஆரம்ப காலங்களில் ரஹ்மான் விளம்பர படங்களுக்கு மட்டுமே இசையமைத்து வந்தார். இந்தியாவின் முன்னணி தயாரிப்புகளான பாரிஸ் மிட்டாய்கள், டாடா கம்பெனி, டைட்டன் வாட்ச் விளம்பரங்கள் ரஹ்மான் இசையமைத்தவைதான். கபில்தேவ், சச்சின் டெண்டுல்கரும் ஓடிவரும் பூஸ்ட் விளம்பரமும் ரஹ்மான் இசையமைத்ததுதான். அடுத்த மூன்று வருடங்களில் 300 விளம்பரப்படங்களுக்கு இசையமைத்தார். இக்காலத்தில் ரஹ்மான் தனக்கான ஒரு ஸ்டுடியோவை உருவாக்கிக் கொண்டார். இவர் சேமித்திருந்த இசைத்தட்டுகளும் முக்கிய ஒரு நூலகமாக உருவெடுத்திருந்தது. இச்சமயத்தில் சென்னையில் நடைபெற்ற ஒரு விருந்தில், மணிரத்னத்தின் உறவினரான திருலோக் சாரதாவை சந்தித்தார், ரஹ்மான். இச்சந்திப்பு ரஹ்மான் வாழ்வின் ஒரு திருப்புமுனைக்கு காரணமாயிற்று. சில தினங்கள் சென்று, ரஹ்மானின் ஸ்டுடியோவுக்கு மணிரத்னம் வந்தார். 'ரோஜா' திரைப்படத்திற்கு ரஹ்மான் இசையமைப்பது என்று முடிவாயிற்று.

'ரோஜா' தொடங்கி 'புதிய முகம்', 'ஜென்டில்மேன்', 'கிழக்கு சீமையிலே', 'காதலன்', 'பம்பாய்', 'மே மாதம்', 'இந்தியன்', 'முத்து', 'லவ் பேர்ட்ஸ்', 'உயிரே', 'முதல்வன்', 'அலைபாயுதே' என அடுத்தடுத்து ரஹ்மான் இசையமைத்த திரைப்படங்களின் பாடல்கள் இந்திய இசையின் போக்கையே பெருமளவில் மாற்றிவிட்டன. அதுவரைக்கும் இந்திய இசைத்துறையில் ஆதிக்கம் செலுத்தி வந்த திரையிசைப் பாடல்களை ராக், பாப் போன்ற இசை ஆல்பங்களின் விற்பனை முந்தின. எம்.டிவி, வீ சேனல்களின் வருகையும் இந்தியாவின் ஆல்பங்களின் விற்பனை அதிகமாகக் காரணமென்றாலும், ரஹ்மானின் இசைப்பாணி தான் அவ்வகை இசை இந்தியாவில் பிரபலமாக முக்கியக் காரணம்.

**- தளவாய் சுந்தரம் -**

அதுவரைக்கும் பெரும் சாதனைகளாக இருந்த திரை இசைப்பாடல்கள் விற்பனை புள்ளி விபரங்களை ரஹ்மானின் வருகை ஒன்றிரண்டு வருடங்களிலேயே பாதாளத்திற்கு தள்ளிவிட்டன. 'பம்பாய்' திரைப்படத்தின் பின்னணி இசை விற்பனை மட்டும் 5 மில்லியனைத் தாண்டிய போது, அது இந்திய திரை இசை சரித்திரத்திலேயே பெரும் சாதனையாக சொல்லப்பட்டது. அடுத்த மூன்று வருடங்களில் 40 மில்லியனுக்கும் அதிகமாக ரஹ்மானின் ஆல்பங்கள் விற்பனையாகி, 'பம்பாய்' சாதனையை ஒன்றுமில்லாமல் செய்தது. ரஹ்மான், இந்தியாவின் அதிக விற்பனையாகும் ஒரே இசையமைப்பாளர் ஆனார். ரஹ்மான் இசையமைக்கும் ஒவ்வொரு எட்டுப் படங்களுக்குள்ளும் தனிப்பாடல்களாக பதினாறு பாடல்கள் ஹிட்டாகி விடுகின்றன என்கிறார்கள். ரஹ்மானை 'இந்திய பாப் இசையின் மன்னன்' என்றார்கள். இந்தியில் ரஹ்மான் இசையமைத்த 'ஜோதா அக்பர்', 'லகான்', 'கஜினி' பாடல்கள் மூலம் ஆஸ்கர் கதவுகளைத் தட்டத் தொடங்கினார், ரஹ்மான். 'ஸ்லம்டாக் மில்லியனர்' கதவைத் திறந்து, அவருக்கு விருதைப் பெற்றுத் தந்துவிட்டது.

ஆரம்ப காலகட்டங்களில், வெற்றிகள் ஒருபக்கம் குவிய, ரஹ்மானின் இசை குறித்து அநேக குற்றச்சாட்டுகளும் சொல்லப்பட்டன. வேகம் குறைவானவர், நிறைய திரைப்படங்கள் செய்ய ஆரம்பிக்கும்போது வெளிறிவிடுவார். எனவே தான் அதிக திரைப்படங்களை ஒப்புக்கொள்வதில்லை. இரவுகளில்தான் வேலை பார்க்கிறார். இப்படி நிறைய. இந்த அனைத்து குற்றச்சாட்டுகளையும் ரஹ்மான் மறுத்தார். அவருடைய இயல்பான ஒதுங்கியிருக்கும் கூச்ச சுபாவத்தை மீறி அவர் சொன்னார்: "நான் காசு சம்பாதிப்பதற்காக மட்டும் இத்துறைக்கு வரவில்லை. எனக்கு மக்களின் சந்தோஷம் முக்கியம். நான் தமிழ்நாடு முழுவதும்

தொடர்ச்சி 18ஆம் பக்கம்



# HomeLife GTA Realty Inc., Brokerage*

“கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது”

## எமது நிறுவனம் பற்றிய சில தகவல்கள்

- *3 Brokers to Help / Assit*
- *2 Branches in Scarborough & Mississauga*
- 140 இற்கு மேற்பட்ட வீட்டு முகவர்கள்
- *7 days open*
- *Verty convenient Locations*
- *Regular Training*
- *New Projects to Promote*
- நீங்களும் மதிப்பு மிகு வீட்டு முகவராக இணைந்து செயல்பட உங்கள் தொடர்புகளுக்கு: 416.321.6969



Broker / Owner



Broker/Manager



Broker / Owner

**Pl. Call @ 416.321.6969 / 905.712.2666**

**1711 McCowan Rd. #206, Toronto / 145 Traders Blvd # 28, Mississauga**

# Slumdog Millionaire

## (குப்பத்து நாய் லட்சாதிபதி) படம் மீதான கருத்துக்கள்

ஏ.ஆர் ரகுமானுக்கு கோல்டன் குளோப், ஒஸ்கார் விருதை பெற்றுக் கொடுத்த படமான 'குப்பத்து நாய் லட்சாதிபதி' என்ற படம் இந்திய குப்பத்து சிறுவர்களின் வாழ்வியலை மையமாகக் கொண்டது. சர்வதேச ரீதியாக பல விருதுகளை பெற்றுக் கொண்ட இப்படம் ஒஸ்காரிலும் எட்டு விருதுகளைப் பெற்றுள்ளது. ரொரண்ரோ திரைப்படவிழாவில் பலரது பாராட்டைப் பெற்ற படம். அத்துடன் சிறந்த மக்கள் தெரிவு விருதையும் பெற்றுக் கொண்ட படம்.

ஒஸ்காரில் எட்டு விருதுகளை இப்படம் பெற்றுக் கொண்டது. இதில் இசைக்கு ஏ.ஆர்.ரகுமானுக்கும், பாடல்களுக்காக இரு பாடல்கள் பரிந்துரைக்கப் பட்டன. ஒன்றிற்கு ஒஸ்கார் கிடைத்தது. மற்றையதை (ஓ..சாயா..சாயா..) பாடியவர் மாயா- M.I.A எனப்படும் மாதங்கி அருட்பிரகாசம். இவர் லண்டனில் பிறந்து, இலங்கை, இந்தியாவில் சிறிது காலம் வாழ்ந்து இப்பொழுது லண்டனில் வாழ்கின்றார். இவரது தந்தை 'அருளர்' என அழைக்கப்படும் ஈரோஸ் இயக்க ஸ்தாபகர்களில் ஒருவர். M.I.A – Missing in Action or Missing in Acton.

வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்பவர்களில் சுமார் 33 வீதமானோர் இந்தியாவில் தான் வாழ்கின்றனர். மும்பையில் மாத்திரம் சுமார் 2.6 மில்லியன் சிறுவர்கள் சேரியில் வாழ்கின்றனர். இதில் 400,000 சிறுவர்கள் பாலியல் தொழில் புரிகின்றனர். அங்கு வாழும் ஒருவனைப் பற்றிய படமே இது.

விகாஷ் சுவாரப்பின் கேள்வியும், பதிலும் என்ற நாவலை மையமாகக் கொண்டு சிமன் பியுபோய் திரைக்கதை அமைத்துள்ளார். ஏ.ஆர். ரகுமான் இசையமைத்துள்ளார். இயக்கம் டான் பொயில் Danny Boyle (இங்கிலாந்து).

மும்பை தெரு வீதிகளில் வாழும் 18 வயது ஜமால் மாலிக் Who Wants To Be A Millionaire? என்ற லட்சாதிபதி போட்டி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அனைத்துக் கேள்விகளுக்கும் பதில் கூறுகின்றார். இன்னும் ஒரேயொரு கேள்வி, பதில் கூறினால் 20 மில்லியன் ரூபா பரிசு. அன்றைய நிகழ்ச்சியை அத்துடன் முடித்துக் கொள்கின்றார் நிகழ்ச்சி அறிவிப்பாளர் பிரேம் குமார் (அனில் கபூர்). நிகழ்ச்சி ஒளிப்பதிவு செய்யப்பட்ட அரங்கத்தை விட்டு வெளியே காலடிவைத்த ஜமால் பொலிஸால் கைது செய்யப்படுகின்றான். மோசடி செய்து பதில்கள் கூறியதாக இன்ஸ்பெக்டர் காரணம் கூறுகின்றார். அடி, உதை எப்படி பதில்களை பெற்றுக்கொண்டாய்? கேள்விகளுக் கான பதில்களை எப்படி ஜமால் தெரிந்து கொண்டார் என்பதுடன் விரிகின்றது. வாழ்வின் அவலங்களையும், வறுமையின் நிறங்களையும், அவனது காதலின் தூய அன்பையும் கூறுகின்றான். ஒவ்வொரு கேள்விகளுக்கும் அவன் அளித்த பதில்கள் எங்கிருந்து பெற்றுள்ளான்? பார்வையாளர்களுக்கு வெளிச்சமாகின்றது. மறு நாள் இறுதிக் கேள்விக்கான பதிலை நோக்கி இன்ஸ்பெக்டரும் அன்றைய இரவும் நகருகின்றன.

கேள்விகளுக்கான பதிலை எப்படி பெற்றுக் கொண்டான்?



இந்து, முஸ்லீம் கலவரத்தில் தாய் இறந்து விட, ஊரைவிட்டு தனது அண்ணன் சலீமுடன் ஓடி வருகின்றான் ஜமால். வந்து சேர்ந்த இடம் மிகவும் மோசமான பம்பாயின் தாதா உலகத்தில். சேரி

## தூறல்

### வானரன்

வாழ்வு. இவர்களுடன் அநாதரவற்று நின்ற லத்திக்காவையும் சேர்த்துக் கொள்கின்றான் ஜமால். சிறுவர்களுக்கு வாழ்வு தருவதாக கூறி அழைத்துச் சென்ற கும்பலிடம் சிக்கிக் கொள்கின்றனர். நன்றாக பாட்டு பாடுபவர்களது கண்களை குருடாக்கி, பணம் பிச்சை எடுக்க அனுப்புகின்றது இந்தக் கும்பல். ஜமாலும் நன்றாக பாடுவான். இந்தக் கும்பலின் நம்பிக்கையை சம்பாதிக்கும் சலீமிடமே, ஜமாலின் கண்களை கொதி எண்ணெயை ஊத்தி குருடாக்கும் படி கூறுகின்றனர். அமிலத்தை எடுத்து அருகில் நின்ற கும்பல் உறுப்பினருக்கு ஊத்திவிட்டு தப்பி ஓடுகின்றனர். காலங்கள் கரைகின்றன. ஜமால் உணவு விடுதியில் வேலை பார்க்கின்றான். சலீம் தாதா குழுவில் உறுப்பினராகி விடுகின்றான். ஜமால் லத்திகாவை தேடித்திரிகின்றான். ஒருவாறு லத்திகாவை கண்டுபிடித்து சலீமின் உதவியுடன் மீட்டுக் கொள்கின்றான். சலீம் துப்பாக்கி முனையில் ஜமாலை துரத்திவிட்டு லத்திகாவை தனதாக்கிக் கொள்கின்றான். பின்னர் லத்திகா, சலீமின் தாதா குழு தலைவரின் சொத்தாக்கப்படுகின்றாள். ஜமால் தொடர்ந்து லத்திகாவை தேடுகின்றான். அவள் இருப்பிடத்தை

தொடர்ச்சி 22ஆம் பக்கம்


IF YOU BUY, SELL OR INVEST IN ANY RESIDENTIAL OR COMMERCIAL PROPERTIES FROM ME

$145,000



Lawrence/Morningside
Well Maintained Condo
2 +1 Bedroom Condominium
2 Washrooms, Beautiful Lay Out
Parking Space , Good Location,
All appliances

$305,900



Brimley Rd/ Denison St
In A Great Neighborhood
3 Bedrooms Detached Home
2 Washrooms, Move in Condition
4 Car Parking Spaces , Close To All Amenities

$309,900



Mccowan/Finch
Very Good Neighborhood
3 +1 Bedrooms Detached Home
3 Washrooms, Beautiful Lay Out
Parking Spaces , Upgraded House

$379,900



Kennedy/Finch
Great Location. Shows Beautiful
4 +1 Bedroom Detached Home
3 Washrooms, Ttc [24Hrs],
Parking Spaces ,
Newer Roof & Front Porch

For Sale or Rent




Very good neighborhood
Open Any Business
Affordable Rent
Lots of parkings

HERE IS YOUR CHANCE TO WIN




Jayanthi Sritharan
Real Estate Broker
416.918.5872
Email:sritharanj@rogers.com
web:www.jrealhomes.com
This is not intend to solicit properties currently listed for sale
** some conditions may apply



HOMELIFE
HIGHER STANDARDS

HomeLife GTA Realty Inc., Brokerage*
Tel: 416.321.6969 Fax: 416.321.6963 1711 McCowan Rd, Suite 206, Scarborough, On, M1S 2Y3 *Each office independently owned and operated

# “எம். ஜி. ஆரும் இந்திராகாந்தியும் இருந்திருந்தால் தமிழ் ஈழம் மலர்ந்திருக்கும்”

## நேர்காணல் - நாஞ்சில் சம்பத்

“இந்தியாவில் ஆட்சி மாற்றம் வந்தால்தான், ஈழத் தமிழர்களுக்கு விடிவு பிறக்கும்.”

1983ம் ஆண்டு. நான் நாகர்கோவில் மீனாட்சிபுரம் ஆட்டோ நிறுத்தத்தில் என் ஆட்டோவுடன் நின்றுகொண்டிருந்தேன். அப்போது, ஒரு இஸ்லாமிய நண்பர், புதிதாக ஒருவரை அழைத்து வந்து அறிமுகம் செய்து, இவரை பூதப்பாண்டி வரைக்கும் கொண்டுபோய் விட்டுவிடுங்கள் என்று பணமும் கொடுத்தார். நாங்கள் புறப்பட்டோம். நாங்கள் போய் சேர்ந்த இடம் ஒரு தி.மு.க. கட்சி பொதுக்கூட்டம். என்னுடன் ஆட்டோவில் வந்தவர் அந்தக் கூட்டத்தில் பேச இருந்த பேச்சாளர் புத்தொளி சம்பத் எனத் தெரிந்தது. சரி, என்ன பேசுகிறார் என்றுதான் கேட்போமே என அவர் பேச்சைக் கேட்கத் தொடங்கிய நான், அவரது சொற்போரில் ஆச்சர்யமடைந்து கூட்டம் முடிவது வரைக்கும் இருந்து கேட்டுவிட்டுதான் வந்தேன்.

அவரது சொற்பொழிவை வியந்து இரண்டு வார்த்தைகள் சொல்லவேண்டும் என முயற்சித் தால் முடியவில்லை. கூட்ட அமைப்பாளர்கள், கட்சிக்காரர்கள் என ஒரு பெரும்படை அவரைச் சுற்றி வியந்துகொண்டிருந்தது.

26 ஆண்டுகளுக்குப் பிறகு “விளம்பரம்” பத்திரிகை மூலமாக அந்த வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அன்று தி.மு.க.வின் கன்னியாகுமரி மாவட்ட பேச்சாளராக இருந்த புத்தொளி சம்பத்தான் இன்றைய நாஞ்சில் சம்பத். வை.கோ.வின் ம.தி.மு.க. கட்சியின் இரண்டாம் கட்ட தலைவர்களில் ஒருவர். தமிழக அளவில் மிகப் பெரும் கூட்டத்தை சேர்க்கவும், சேர்ந்த கூட்டத்தை கலைந்து போகாமலும் நிறுத்தும் பேச்சாற்றலும் கொண்ட பேச்சாளர்களில் ஒருவர். அன்று ஆட்டோக்காரனான நான், இன்று ஒரு பத்திரிகையாளனாக அவரை சந்தித்தேன். “பரவாயில்லையே, இவ்வளவு வருடங்களுக்குப் பிறகும் நான் பேசியதை நினைவு வைத்திருக்கிறீர்களே” என்று உற்சாகமாக நேர்காணலுக்கு தயாரானார்.

கேள்வி: தமிழ் ஈழப் பிரச்சினையில் உங்கள் கட்சி கொண்டுள்ள நிலைப்பாட்டுக்கு நேர் எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ள கட்சி அ.தி.மு.க. விடுதலைப்புலிகளை ஆதரித்து பேசினார் என்பதற்காக உங்கள் தலைவர் வை.கோ.வை கைது செய்து, இரண்டு ஆண்டுகள் சிறையிலும் வைத்திருந்தவர் ஜெயலலிதா. அ.தி.மு.க.வும் ஜெயலலிதாவும் தங்கள் நிலைப்பாட்டை இன்றும் மாற்றிக்கொள்ளவில்லை. நீங்களும் ஈழ ஆதரவில் உறுதியாக இருக்கிறீர்கள். இந்நிலையில் அ.தி.மு.க.வுடன் ம.தி.மு.க. கூட்டணி அமைத்திருப்பது முரண்பாடாக இல்லையா?

நாஞ்சில் சம்பத்: எங்கள் இரு கட்சிகளுக்கும் இடையேயான கூட்டணி ஒரு தேர்தல் உடன்பாடுதான். இப்படி வெவ்வேறு மாற்றுக் கருத்துகள் கொண்ட இரண்டு அரசியல் கட்சிகள், கருத்து முரண்பாடுகள் இருந்தாலும், குறைந்தபட்ச பொதுத் திட்டங்களின் அடிப்படையில் கூட்டணி அமைத்துக்கொள்வது இந்திய அரசியல் சரித்திரத்தில் எல்லாக் காலகட்டங்களிலும் நடந்து வந்திருப்பதுதான். குடும்ப ஏகாதிபத்தியத்தை தமிழ்நாட்டில் நிலை நிறுத்தியுள்ள கருணாநிதி யின் பாசிச ஆட்சிக்கு முடிவு கட்டுவது என்னும் பொதுவான கருத்து உடன்பாட்டின் அடிப்படையில் நாங்கள் ஜெயலலிதாவோடு தேர்தல் கூட்டணி வைத்துள்ளோம். இது எந்தவகையிலும் கொள்கைகளை பாதிக்காது. இலங்கைத் தமிழர்கள் விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டை அ.தி.மு.க வைத்திருந்தாலும், நாங்கள் எங்கள் நிலைப் பாட்டில் உறுதியாக இருக்கிறோம். பல்வேறு கைது அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் எங்கள் கருத்தை உரக்க சொல்லிதான் வருகிறோம். சமரசம் என்ற பேச்சுக்கே இடம் இல்லாமல், வை.கோ. அவர்கள் வெற்றிகரமாக தன் வழியில் பயணித்துக் கொண்டிருக்கிறார். உலகத் தமிழர்களுக்கு இந்தப் பேட்டி மூலம் சொல்ல விரும்புவது, ஈழத் தமிழர்கள் பிரச்சினை யில் வை.கோ சோரம் போகவில்லை. அவருடைய வீரம் என்றும் பழுதடையாது என்பதைத்தான்.

கேள்வி: இந்தியாவின் தலையீடு இல்லாமல் ஈழத் தமிழர்கள் போராட்டம் முடிவுக்கு வர வாய்ப்பில்லை என்னும் நிலை இன்று உருவாகியுள்ளது. எனவே, இந்தியாவின் நிலையை தெரிந்துகொள்ள ஈழத் தமிழர்கள் அனைவரும் ஆர்வமுடன் காத்திருக்கிறார்கள். இலங்கைத் தமிழர்கள் போராட்டத்தில் இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டை மாற்ற, இந்தியத் தமிழர்கள் என்ன செய்யவேண்டும் எனக் கருதுகிறீர்கள்?

நாஞ்சில் சம்பத்: இலங்கையில் தமிழர்கள் விடுதலைப் போராட்டம் ஒரு நீண்ட நெடியப் போராட்டம். அது தமிழ் ஈழம் மலர்வது வரைக்கும் நிற்காது என விடுதலைப்புலிகள் தலைவர் பிரபா-கரன் தெளிவாக சொல்லியுள்ளார். இந்த விடுதலைப் போரில் அவர்கள் முன்னேறுவதும் பின்வாங்குவதும் மீண்டும் முன்னேறுவது மாகத்தான் கடந்தகால நிகழ்வுகள் இருக்கின்றன. இலங்கை அதிபர் ராஜபக்ஷே கனவு காண்பதுபோல், விடுதலைப்புலிகளை அழித்து இலங்கைத் தமிழர்கள் விடுதலைப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வரலாம் என்பது நடக்க சாத்தியமில்லை. அந்த விடுதலைத் தீ கடைசி தமிழன் இருப்பது வரைக்கும் எரிந்து கொண்டிருக்கும். ஈழத்தில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் பின்னடைவுக்கு காரணம், இந்தியாவில் சோனியா காந்தியின் ஆலோசனை யில் இயக்கும் காங்கிரஸ் அரசுதான். ஆகவே, இந்தியாவில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்தால்தான் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசின் நிலைப்பாடு மாறும். காங்கிரஸ் ஆட்சிக்கு முடிவு கட்டினால்தான் ஈழத்தில் தமிழர்களுக்கு விடிவு பிறப்பதற்கான கதவுகள் திறக்கப்படும் என நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். குண்டு வீச்சு விமானங்களுக்கு அஞ்சி காடுகளில் தஞ்சம டைந்துள்ள ஈழத் தமிழர்களுக்கு ஒரு நிம்மதியான வாழ்க்கை அமையவேண்டும். மீண்டும் அவர்கள் தங்கள் சொந்த இல்லங்களில் குடியேற வேண்டும் என நினைக்கும் ஒவ்வொரு இந்தியத் தமிழனும் செய்யவேண்டியது, வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தங்கள் வாக்குகள் மூலம் காங்கிரஸ் கட்சியை ஆட்சியில் இருந்து இறக்குவதுதான்.

கேள்வி: காசாவில் இஸ்ரேல் ராணுவம் குண்டு போடும்போது கண்டிக்கும் ஐ.நா.சபை, அதே காரி யத்தை இலங்கையில் சிங்கள ராணுவம் செய்கிறபோது கண்டிக்கவில்லையே.

நாஞ்சில் சம்பத்: காசாப் பகுதியினருக்காக பேசுவதற்கு இருபத்தி இரண்டு அரபு நாடுகள் இருக்கின்றன. எகிப்து முன்வந்து அவர்களுக்காக பேசுகிறது. நமக்கு பேசுவதற்கு ஒரு நாடுகூட இல்லை. எனவே, நமக்காக பேச யாரும் முன் வரவில்லை. அதனால் இந்த சோகம். குறைந்தபட்சம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக ஒரு தீர்மானம் கொண்டு வரமுடியாத கையறு நிலையில் நாம் இருக்கிறோம். தமிழகத்தில் முதலமைச்சராக இருக்க கூடிய கருணாநிதி அதற்கு தயாரில்லை. ஈழத் தமிழர்களை காயப்படுத்துவதற்கும் காட்டிக் கொடுப்பதற்கும்தான் கருணாநிதி போன்றோர்கள் இருக்கிறார்கள்.

கேள்வி: இப்படியே இந்த யுத்தம் நீடித்துக்கொண்டே சென்றால், ஒருவேளை நாளை ஒருநாள் தனி ஈழம் கிடைத்தாலும் அங்கு வாழ்வதற்கு தமிழர்கள் இருக்கமாட்டார்கள் என ஒரு பேச்சு இருக்கிறதே.

நாஞ்சில் சம்பத்: இதுபோன்ற பேச்சுகள் போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்ய எதிரிக-ளால் கட்டவிழ்த்துவிடப்படும் காழ்ப்புகள். அதனை நாம் பொருட்படுத்தக் கூடாது. 1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்தப்போது அங்கே 35 லட்சம் தமிழர்கள் இருந்தார்கள். ஆண்டுகள் பலவான பிறகும் இன்று அது 70 லட்சத்தை தாண்டவில்லை. அன்று, யூதர்களுக்கென்று ஒரு நாடு கிடையாது. எங்கெங்கே யூதர்கள் இருக்கிறார்கள் என்று யாருக்கும் தெரியாது.

இருபது நூற்றாண்டு காலம் தேசாந்திரியாக அடையாளம் தெரியாமல் வாழ்ந்தார்கள். ஆனால், யூதர்களின் நாடாக இஸ்ரேல் வடிவம் பெற்ற பிறகு, அவர்களுக்கு என்று ஒரு நாடு அமைந்த பிறகு, ஆங்காங்கே சிதறிக்கிடந்த யூதர்கள் அங்கே வந்து ஒன்றிணைந்தார்கள், குடியமர்ந்தார் கள். அதேபோல நாளை தனி ஈழம் கிடைக்கும் போது உலகெங்கும் உள்ள ஈழத் தமிழர்கள் நிச்சயமாக தாம் பிறந்த மண்ணுக்கு திரும்பி வந்து குடியேறுவார்கள். அதற்கான கனவுகளை தாங்கிப் பிடித்துக்கொண்டுதான் அவர்கள் பல்வேறு நாடுகளிலும் இருக்கிறார்கள். அவர்கள் திரும்பி வரும்போது, இலங்கையில் தமிழர்களுக்கு கம்பீரத்தோடு ஒரு நாடு அமையும்.

கேள்வி: கேள்வியின் போக்கை மாற்றி தமிழக அரசியலுக்கு வருவோம். தமிழ்நாட்டில் நடிகர்கள் அரசியல் கட்சி ஆரம்பிப்பதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

நாஞ்சில் சம்பத்: ஒரு ஜனநாயக நாட்டில் யார் வேண்டுமானாலும் அரசியல் கட்சி தொடங்கலாம். அதற்கு எல்லோருக்கும் உரிமையிருக்கிறது. அந்த உரிமையை நான் மறுக்கவில்லை. யாரும் மறுக்கவும் முடியாது. ஆனால், எந்தவிதமான திட்டமும் கொள்கையும் இல்லாமல் எப்படியாவது முதலமைச்சராகிவிட வேண்டும், சினிமாவுக்கு அடுத்து மக்களை ஏமாற்றி சம்பாதிக்க அதுதான் சிறந்த வழி என்ற அடிப்படையில் சிலர் அரசியலுக்குள் நுழைந்திருக்கிறார்கள். சினிமாவை காட்டிலும் அரசியல் நல்ல வருமானம் தரும் தொழில் என்ற அவர்கள் எண்ணத்துக்கு மக்கள் தகுந்த பாடம் கற்பிப்பார்கள். ஏற்கெனவே, திருமங்கலம் இடைத்தேர்தலில் அந்த திட்டத்தில் மக்கள் அடியெடுத்து வைத்துவிட்டது எனக்கு மகிழ்ச்சிக்குரிய செய்தியாக தெரிகிறது. காலத்தின் போக்கில் இவர்கள் காணாமல் போய்விடுவார்கள். ஆகவே, நாம் அவர்களை கண்டுகொள்ள வேண்டியதில்லை.



**- சந்திப்பு சிவதானு -**


# MOHAN
## HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 416-431-6774

**Answers - 238 February 01, 2009**

1) (a) $x^4+3x^2+36=(x^2+6)^2-9x^2=(x^2+6-3x)(x^2+6+3x)$

(b) $x^4-23x^2+49=(x^2-7)^2-9x^2=(x^2-7-3x)(x^2-7+3x)$

2) At present their ages are 27+6. After 1 year they will be 28+7. Therefore Father's is 4 times the son's age after 1 year.

3) $y=a(x-2)^2+c,\ y=(2x-5)(x-b),\ a(x-2)^2+c=(2x-5)(x-b)$

$a(x^2-4x+4)+c=2x^2-x(5+2b)+5b$

$ax^2-4ax+4a+c=2x^2-x(5+2b)+5b$

$\therefore a=2,\ 4a=5+2b,\ \therefore\ 5+2b=8,\ 2b=8-5=3,\ b=3/2$

4) (a) $\overrightarrow{w},\overrightarrow{a},\overrightarrow{b}$ *Non Coplanar* (b) $\overrightarrow{w},\overrightarrow{b},\overrightarrow{c}$ *Non Coplanar*

(c) $\overrightarrow{a},\overrightarrow{b},\overrightarrow{c}$ *Non Coplanar*

5)




$|\bar{a}+\bar{b}|^2=|a|^2+|b|^2-2|a||b|\cos(180-\alpha$

$3=1+1+2|a||b|\cos(180-\alpha,\ 1=2|a||b|\cos\theta,\ 1=2\bar{a}.\bar{b},\quad \bar{a}.\bar{b}=\frac{1}{2}$

Now $(2\vec{a}-5\vec{b})(\vec{b}+3\vec{a})=-13\vec{a}\vec{b}+6|\vec{a}|^2-5|b|^2\ =-13.\frac{1}{2}+6-5=-\frac{11}{2}$

## Questions – 239 – February 15th, 2009

1) I am 10 years older than my brother. Ten years ago, he was 10. How old will I be in ten years? [For grade 5 & 6]
2) I have twice as much money as my brother. If I have $10 more than he does, how much money do I have? [For grade 6]
3) Three forces 5N, 7N & 8N are applied to an object. If the object is in a state of equilibrium. Calculate the angle between the lines of action of the 5N and 7N forces [For grade 11 & 12]
4) A child with a mass of 35 kg is sitting on a swing attached to a tree branch by a rope of 5 m in length. The child is pull back 1.5 m measured horizontally. (a) What horizontal force will hold the child in this position? (b) what is the tension in the rope? [For grade 11 & 12]
5) A canadian postal code has the form XxXxXx where X is an uppercase letter and x is a digit from 0-9. How many postal codes are there if the letters D, F, I, O, Q, U & W are not used?


**MATH, SCIENCE & ENGLISH TUITION**

MATH, SCIENCE & PHYSICS under taken for ALL Grades from Gr. 3 to University 1st year. Special classes in Functions, vector, Calculus & Data Management.

Individual & group classes available By an experience teacher: S.F. Xavier Classes available at Scarborough & Stouffville

**CONTACT: 416 - 431- 6774** (Scarborough)
**647.831.0070** (Stouffville)

**SMART TUTOR** *(Math & Science)*

*Classes by well experienced Tutor* - **Contact: (416) 278-4742/ (416) 335-1818**

**Grade 5 to Grade University students**

- Math
- Physics
- Chemistry
- General Science
- Applied & Academic Math
- Functions
- Calculus
- Finite
- Advanced Functions
- Geometry
- Algebra
- Homework Help

***Individual and group classes available at Markham and Scarborough east area***


## மரபுடன் இணைந்த

14ஆம் பக்கத்தொடர்ச்சி

மேற்கொண்ட பயணத்தில் மக்கள் சந்தோஷத்திற்காகவே இசையை கேட்கிறார்கள் எனபதைக் கண்டேன். ஒவ்வொரு வகை இசையும் அதற்கான ஒரு வட்டத்தினரை மட்டுமே சென்றடைகிறது. நான் இந்த அனைத்து வகையான மனிதர்களையும் சென்றடைய விரும்புகிறேன். நான் ராக் இசைப்பது இளைஞர்களுக்காகத்தான். மற்ற திரைப்பட இசையமைப்பாளர்கள் ஒரு பாடலுக்கு ஏழு அல்லது எட்டு மணி நேரம் மட்டுமே எடுத்துக் கொள்கிறார்கள். உண்மைதான். ஆனால், நான் அப்படியில்லை. முதலில் வாய்ப்பாட்டை மட்டும் பதிவு செய்துவிட்டு பின்பு ஒவ்வொரு இசைக் கருவியாக இணைத்துக்கொண்டே வருவேன். இசைக் கருவிகளை மாற்றி, மாற்றி போடுவேன். பாடல் கொஞ்சம் கொஞ்சமாக செம்மையாக துவங்கும். எனினும் எனக்கு திருப்தி ஏற்படும் வரை அப்பாடலை விட்டு வேறு வேலையை நான் ஏற்றுக்கொள்வதில்லை.” தென்னிந்திய இசைமேதை ஒருவர் இந்த விவாதங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார். அவர் ரஹ்மான் இசைக் குறித்து இப்படிச் சொன்னார்: “ரஹ்மானின் இசை கம்ப்யூட்டர் காலத்தைச் சேர்ந்தது, அறிவுப்பூர்வமானது. அனேகமானோர் நினைத்துக் கொண்டிருப்பதுபோல் அவை வெறும் இரைச்சல் இல்லை. நமது மரபில் இருந்து பெற்றுக் கொண்டதுடன், கூடிய நவீனமானது”.

ரஹ்மானின் திரை இசைப்பாடல்கள், இவரது இசைக்கும் மரபான இந்திய பாரம்பரிய இசையுடன் இருக்கும் தொடர்பை உறுதி செய்யக்கூடியவை. பாக், பீத்தோவன், மொசர்ட், ரெகே, இளையராஜா, கர்நாட்டிக் மற்றும் ஹிந்துஸ்தானி நான் விரும்பி கேட்கும் இசை வகைகள் என்று ரஹ்மான் ஒரு முறை குறிப்பிட்டார். கர்நாடக சங்கீதத்தை தக்ஸணாமூர்த்தியிடமும் இந்துஸ்தானியை கிருஷ்ணன் நாயரிடமும் கற்றுக்கொண்டிருக்கிறார் ரஹ்மான். இவரது ஆரம்பகாலப் பாடல்கள், நுஸ்ரத் அலிகானிடம் அவர் எந்த அளவுக்கு பாதிப்பைப் பெற்றிருக்கிறார் என்பதை சொல்லக்கூடியவை.

திரை இசையில் மிக உச்சத்தை இன்று ரஹ்மான் தொட்டிருந்தாலும், உண்மையில் அவருக்கு அதில் மிகப்பெரிய ஆர்வமில்லை என்பதுதான் ஆச்சரியமான உண்மை. விவரம் தெரிந்த காலம்தொட்டு ரஹ்மான் திரைப் படத்துறையில் நுழைவதில் ஆர்வம் காட்டியதில்லை. ஒரு பேட்டியில் ‘ரோஜா’வுக்கு இசையமைத்தது குறித்து அவர் இப்படிச் சொன்னார்: “அதுதான் நான் இசையமைக்கும் கடைசித் திரைப்படமாக இருக்கும் என்று நினைத்தேன்”.

இசையில் சோதனைகள் செய்து பார்ப்பதையே ரஹ்மான் அதிகம் விரும்பி வந்திருக்கிறார். திரைப்படங்களில் அதிக சுதந்திரம் எடுத்துக்கொண்டு அதனை செய்ய முடியாது என்று கருதினார். ஏனெனில், திரைப்படம் அதிக பணம் முதலீடு செய்யப்படும் ஒரு தொழில். எனவே, அது அதிக மக்களைச் சென்று அடைந்தால்தான் வெற்றிபெற முடியும். எனவே, திரைப்படங்களைக் குறைத்துக்கொண்டு ஆல்பங்களிலும் இசை நிகழ்ச்சிகளிலும் அதிக ஆர்வம் காட்டினார். உலகப் புகழ்பெற்ற மறைந்த இசையமைப்பாளர் நுஸ்ரத் பதே அலிகானுடன் இணைந்து, 1997இல் இந்திய சுதந்திரப் பொன்விழா ஆண்டை முன்னிட்டு ‘வந்தே மாதரம்’ என்னும் ஆல்பத்தை வெளியிட்டார். இந்த ஆல்பத்தில்தான் ரஹ்மான் முதன் முறையாக பாடவும் செய்தார். தொடர்ந்து எல்.சங்கர் உசேன், தல்வீன் சிங், எம்.எஸ்.சுப்புலட்சுமி போன்றோருடன் இசை நிகழ்ச்சிகள் மற்றும் ஒலிப்பதிவுகளை



சேர்ந்து செய்தார். 2000இல் ரஹ்மானின் இரண்டாவது ஆல்பம் ‘ஜனகணமண’ வெளிவந்தது. உலகப் புகழ்பெற்ற ஆன்ட்ரூ லாயிட் வெப்பர், ரஹ்மானின் ‘உயிரே’ மற்றும் ‘தாள்’ (ஹிந்தி) திரைப்பட இசைத் தட்டுகளால் கவரப்பட்டு, ரஹ்மானை ‘பம்பாய் கனவுகள்’ ஆல்பத்திற்கு இசையமைக்கும்படி கேட்டுக் கொண்டார். தொடர்ந்து கோலாலம்பூர், லண்டன் என ரஹ்மான் செய்த இசை நிகழ்ச்சிகள் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றன.

இவையனைத்தும் சேர்ந்து ரஹ்மான் வெளிநாட்டில் செட்டிலாகப் போகிறார் என்னும் வதந்தியை கிள்ப்பிவிட்டு விட்டது. ரஹ்மான் இதை மறுத்தார். அவர் சொன்னார்: “நான் ஏன் போக வேண்டும்?” இப்பொழுது, ஆஸ்கர் விருதுக்குப் பிறகு மீண்டும் அக்குரல்கள் கேட்கத் தொடங்கியிருக்கின்றன.

“இனிமேல் ரஹ்மானுக்கு ஹாலிவுட் பட வாய்ப்புகள் அதிகம் வரும். அவர் வெளிநாட்டில் செட்டிலாகிவிடுவார்” என்கிறார்கள். எது எப்படியிருந்தாலும், ஆஸ்கரை விட உயர்ந்த பல விருதுகளைப் பெற தான் தகுதியானவன்தான் என்பதை கடந்த வருடங்களில் பலமுறை ரஹ்மான் நிரூபித்திருக்கிறார். இனிமேல், அவற்றை நோக்கி அவர் பயணப்பட வேண்டும். அவரின் இசை மேலும் உச்சத்தைத் தொடவேண்டும் என்பதுதான் இசை ரசிகர்களின் விருப்பம்!

# "ரீமிக்ஸ் பாடல்களுக்கு இடையமைக்க மாட்டேன்"

## "பூ" இசையமைப்பாளர் எஸ்.எஸ். குமரன் உடன் சந்திப்பு



"ச்சூ, ச்சூ.. மாரி" பாடல்தான் இப்பொழுது தமிழகத்தில் குழந்தைகளின் தேசிய கீதம். 2008 ஆம் ஆண்டின் சிறந்த பத்து திரைப்பட பாடல்கள் வரிசையில், எல்லா பத்திரிகைகளிலும் தவறாமல் இடம் பிடித்திருந்தது இந்தப் பாடல். போகும் இடங்களில் எல்லாம் குழந்தைகள் "ச்சூ, ச்சூ மாரி" என்று என்னைச் சூழ்ந்து கொள்கிறார்கள். இதைவிட ஒரு அறிமுக இசையமைப்பாளருக்கு பெரிதாக என்ன வேண்டும்." இவ்வளவு அடக்கத்துடன் பேசும் இவரா, கோடம்பாக்கத்தில் மிக அதிக படங்களை கையில் வைத்திருக்கும் இசையமைப்பாளர் எஸ்.எஸ்.குமரன் என்று சந்தேகமாகத்தான் இருக்கிறது. "ச்சூ, ச்சூ மாரி" மட்டுமல்ல "பூ" திரைப்படத்தின் அனைத்துப் பாடல்களுமே ஹிட்டுதான். விளைவு, பன்னிரெண்டு புதிய திரைப்படங்களுக்கு இசையமைக்க ஒப்பந்தமாகி, தமிழ் திரையுலகின் "பிஸி"யான இசையமைப்பாளராகிவிட்டார் குமரன். "விளம்பரம்" பத்திரிகைக்காக ஒரு ஞாயிறு காலை, குமரனின் சென்னை கே.கே.நகர் இல்லத்தில் சந்தித்தோம்.

கேள்வி: "பூ" திரைப்படம் வரைக்குமான உங்கள் இசைப் பயணத்தை சுருக்கமாக சொல்லமுடியுமா?

எஸ்.எஸ்.குமரன்: எனது சொந்த ஊர் திருநெல்வேலி மாவட்டத்தில் வள்ளியூர் என்ற ஒரு சின்ன டவுன். சின்ன வயதில் இலங்கை வானொலி எங்கள் ஊர் பகுதியில் மிகப் பிரபலம். அப்பொழுது இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகும் பாடல்களை கேட்டு, அதை நண்பர்கள் மத்தியில் பாடிக் காட்டுவேன். ஊர் திருவிழாவில் நடக்கும் பாட்டு கச்சேரியில் வருடம்தோறும் என் மேடையேற்றம் இருக்கும். கச்சேரி முடித்ததும் ஊர்க்காரர்கள் பாராட்டுவார்கள். நம்மூர்கார பையன் இவ்வளவு அருமையாக பாடுகிறானே என்ற ஊர்ப் பாசத்தில் அவர்கள் பாராட்டியிருக்கலாம். இருந்தாலும், எனக்கு இசையமைப்பாளராக வரணும் என்று தோன்றிவிட்டது. அதற்கு சென்னைக்கு போகணும். ஆனால் அப்பா விடமாட்டார். எப்படி போவது என்று யோசித்தேன். படிப்பு என்றால் அப்பா தடங்கல் சொல்லமாட்டார். எனவே, சென்னை திரைப்படக் கல்லூரியில் சேர்ந்து ஒளிப்பதிவு பாடம் எடுத்து படித்தேன். மூன்று வருடம் படிப்பு முடியவும் எனக்கு சென்னை துறைமுகத்தில் வேலை கிடைத்தது. "கால் காசு சம்பளமானாலும் கவுர்மெண்ட் உத்தியோகம்" என்று அரசாங்க வேலைக்கு பெரிய மதிப்பு இருந்த காலம் அது. எனவே, தவிர்க்க முடியாமல் வேலையில் சேர்ந்தேன். அரசாங்க வேலை என்பதால், உடனே பெண் பார்த்து, திருமணம் ஆகி, குழந்தைகள் பிறந்து, குடும்பமாகிவிட்டேன். என்றாலும், வேலை இல்லாத நேரங்களில் கோடம்பாக்கம் ரிக்கார்டிங் தியேட்டர்கள் பக்கம் சென்று என் இசை ஆர்வத்தைக் குறையாமல் பாதுகாத்து வந்தேன்.

இசைக் கனவில் அலுவலகத்தில் பதினைந்து லட்சம் ரூபாய் கடன் வாங்கி, ஒரு சிறிய ரிக்கார்டிங் தியேட்டரை என் வீட்டுலேயே உருவாக்கினேன். அதில், நானே பாடல் எழுதி, நான்கு பாடல்கள் இசையமைத்துப் பார்த்தேன். நான் குடியிருந்த கே.கே.நகர் எம்.ஜி.ஆர் பூங்காவில்தான் இயக்குனர் சசி காலையில் நடைப்பயிற்சி செய்வார். அவரிடம் நான் இசையமைத்த பாடல்களைக் கொடுத்து, "கேட்டுப் பாருங்கள்" என்று சொன்னேன். அவரும் கேட்டுவிட்டு, "ரொம்ப நல்லாயிருக்கு. நான் எடுக்க போகும் கிராமத்து படத்துக்கான பாடல் காட்சியை சொல்கிறேன். நீங்கள் இசையமைத்து காட்டுங்கள்" என்று சொன்னார். நான் உற்சாகமாக ஒப்புக்கொண்டு, இசையமைத்து காட்டினேன். அவருக்கு பிடித்து போனது. "நீங்கள்தான் என் "பூ" படத்துக்கு இசையமைப்பாளர்" என்று சொன்னார்.

கேள்வி: "பூ" பத்திரிகை விமர்சனங்கள் அனைத்திலும் உங்களை பாராட்டி தள்ளிவிட்டார்களே?

எஸ்.எஸ்.குமரன்: நிச்சயம் ஒரு அறிமுக இயக்குநருக்கு அது மிகப்பெரிய அங்கீகாரமும் ஊக்கமும்தான். "பதினாறு வயதினிலே" காலத்தில் இருந்து "பருத்திவீரன்" வரைக்கும் கிராமத்து மண்வாசனையோடு எடுக்கப்படுகிற எல்லா படங்களுமே வெற்றி பெற்றிருக்கிறது. அது போல் "பூ"வும் வெற்றிபெறும் என்ற நம்பிக்கை சசி கதையைச் சொன்னதுமே எனக்கு ஏற்பட்டுவிட்டது. சசி ஏற்கெனவே மூன்று வெற்றிப் படங்களை கொடுத்தவர். அவரைப் பொறுத்தவரை "பூ" அவரது நீண்ட நாள் கனவு. அவரது கனவில் என்னை நம்பிக்கையுடன் சேர்த்துக் கொண்டதே, எனக்கு கிடைத்த மிகப் பெரிய அங்கீகாரம் என்றுதான் சொல்லுவேன்.

கேள்வி: கே.வி.மகாதேவன், எம்.எஸ்.விஸ்வநாதன் போன்றோர்கள் காலத்தில் பாட்டுக்கு மெட்டு போட்டார்கள். ஆனால், தற்போது எல்லா இசையமைப்பாளர்களும் மெட்டுக்குத்தான் பாட்டெழுத சொல்கிறார்கள். இதனால் பாடல் வரிகளின் தரம் குறைந்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது. இதை மாற்ற, நீங்கள் பாட்டுக்கு மெட்டு போட முன் வருவீர்களா?

எஸ்.எஸ்.குமரன்: கண்டிப்பாக செய்யலாம். ஆனால், அதை நீங்களும் நானும்தான் கேட்க

தொடர்ச்சி 28ஆம் பக்கம்


# A. V. M. MAX 2000

விடுமுறை காலங்களில் சுற்றுலா செல்லத் தயாராகுங்கள்!

# மார்ச் விடுமுறைச் சுற்றுலா

**March 14 தொடக்கம்**
**21 வரை Orlando,**
**Florida பயணம்**
**உணவு, இருப்பிடம்**
**உட்பட சொகுசு**
**பயணத்திற்கு அழையுங்கள்**

**416 - 609-2542**



## BASEMENT RENT

**MARKHAM & ELLESMERE**
2 Bedroom bsmt. apt for rent. Sep. entrance. Parking & laundry. Close to TTC, bakery, school & tamil stores. Available immediately.
தொடர்புகட்கு: 647.400.3559

**MORNINGSIDE & SEWELLS**
1Bedroom bsmt. apt for rent. Parking, cable & laundry. Close to TTC, school & tamil stores. Available immediately.
416.282.2495/647.504.8215

**BELLAMY & EGLINTON**
2 Bedroom bsmt. apt for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to mall, TTC, school & GO train. Available immediately.
தொடர்புகட்கு: 647.834.8206

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, cable, laundry. Close to Wal-Mart, No Frill, school & bus. Avail. immediately.
905.294.1856 / 905.554.1232

**NEILSON & FINCH**
2 Bedroom bsmt. apt for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to Malvern Mall, school & TTC. Avail. April 1st, 2009
தொடர்புகட்கு: 416.951.7645

**MCCOWAN & 16TH AVE**
இரண்டு அறைகள் கொண்ட bsmt Apt. வாடகைக்கு உண்டு. Sep. entrance. Parking, cable, laundry. Close to ttc, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.414.5562

**McCOWAN & DENISON**
Newly renovated 2 bedroom bsmt. apt for rent. Parking, cable, laundry. Close to TTC, school, shopping. Suitable for singles or working couple. Avail. immediately. $ 700+
தொடர்புகட்கு: 416.402.5622

**KENNEDY & FINCH**
2 Bedroom bsmt. apt. for rent. Parking, cable (TVI). Close to TTC, schools, shopping & temples. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.291.2796

***LAWRENCE & Scarboro. Golf Club Rd***
2 Bedroom bsmt apt. for rent. Sep. entrance. parking, laundry. Avilable immediately. Close to Bank, TTC, shoping, school, etc.
தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
416.219.4936 / 416.454.9986

**MCCOWAN & ELSON**
2 bedroom bsmt apt. for rent. Sep. entrance, parking, laundry, cable. Avail. April 01, 09. Close to ttc, school, stores, etc. வாடகை $750.
தொடர்புகளுக்கு: 905.471.9016

**McCOWAN & 14TH AVE**
3 Bedroom bsmt.apt. for rent. Sep. entrance. Parking, laundry. Close to TTC, school. All shopping centers. Avail. immediately.
905.201.8350/905.472.1091

**VICTORIA PARK & ELLESMERE**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to mall, school, TTC, Tamil stores etc. Available immediately.
தொடர்புகளுக்கு: 416.444.3402

**McCOWAN & ELSON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, laundry, cable, TVI included. Close to TTC, school. Family preferred. Avail. immediately. தொடர்புகளுக்கு: 416.737.3891

**MARKHAM RD. & ELSON ST.**
Beautiful, spacious, bright, 2 bedroom bsmt apt. for rent. Step away from all amenities, separate private side entrance. Laundry, parking, cable. Non-smokers & no pets. Available now.
தொடர்புகட்கு: 416. 726. 5122

**McCOWAN & DENISON**
2 Bedroom bsmt. apt for rent. Sep. entrance. Parking & laundry. Close to school, bus. Small family preferred. Avail. immediately.
தொடர்புகட்கு: 647.297.8128

**MCCOWAN & FINCH**
1 Bedroom bsmt. apt. for rent. Furnished large living room, parking, cable, laundry. Close to school, TTC, shopping. Couple, small family or ladies preferred. No pets or smoking. Available immediately.
தொடர்புகட்கு: 416.321.1831

**WARDEN & LAWRENCE**
2 Bedroom bsmt. apt for rent. Sep. entrance. Parking, cable. Close to school, Parkway Mall & TTC. Available immediately.
416.388.9904 / 416.230.6957

**MCCOWAN & ELSON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry. Step to school & TTC. Quiet place. Park near-by. Available immediately.
தொடர்புகட்கு: 647.991.4437

**McCOWAN & EGLINTON**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, Go Station, stores & school. Avail. immediately.
416.300.6797/416.286.8257

**NEILSON & SHEPPARD**
1 Bedroom walk-out bsmt. for rent. Sep. entrance. Parking, laundry. Close to Malvern Mall, bus & school. Available immediately.
தொடர்புகட்கு: 416.284.7604

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to school, mall & bus. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.587.2704

**BRIMLEY & McNICOLL**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, Sun TV. Close to school, TTC. All inclusive $600. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.335.0261

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, cable, laundry. Close to Wal-Mart, TTC, school, plaza. Available immediately.
416.678.9876/905.294.4786

**McCOWAN & LAWRENCE**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking & laundry. Close to library, hospital, Tamil stores, school & bus. Avail. immediately.
416.289.8890/416.737.8880

**McCOWAN & ELSON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, school, shopping. Avail. immediately.
தொடர்புகட்கு: 905.201.0046

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom walk-out bsmt. for rent. Parking & laundry. Close to TTC, Cedarbrae mall. Avail. immediately. தொடர்புகட்கு: 647.929.3192

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry, Close to ttc, school, mall. Avail. immediately.
647.287.9546/647.350.6515

**MARKHAM & ELLESMERE**
2 bedroom bsmt for rent. Sep. entrance. parking, cable, laundry. Close to ttc, school, plaza, etc. தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
416.289.6977 /416.300.6977

## TUTION CLASSES

English, Maths, Science and other subjects. By graduate teacher PLACE:
**LAWRENCE & MIDLAND,**
**LAWRENCE & PHARMACY**
New washer & dryer for sale.
Both $600 (For Apt. Use)
தொடர்புகட்கு: 416.731.2833

## BABY SITTING

பிள்ளை பாரமரிப்பு
**NEILSON & FINCH**
உங்களின் பிள்ளைகள் பாரமரிக்கப்படுவதோடு அவர்களுக்கு kinder-garden க்கான ஆயத்தங்களும் செய்து தரப்படும்.
அழைக்கவும்: 416.754.2416

## TUTORING

By experienced graduate. Math, Function Calculus, Vectors, Physics, Data Management / Statistics, ASP & Access, PHP & My SQL, VB, Java, C Word, Excel, Access, Web Design & Development
தொடர்புகட்கு: 416.706.1654

## FLORISTS

திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழா, கோவில் மாலை, Funeral services, ஆகியவற்றிக்கு வேண்டிய அனைத்து பூத்தேவைகளும் பூர்த்தி செய்து தரப்படும்.



அழைக்கவும்: ***647.201.3111***

## CAR FOR HIRE

Wedding, Airport, Temple, Special occasion ஆகிய தேவைகளுக்கும், Limousine தேவைக்கும் அழையுங்கள்:
416.274.5495

## CONDO. FOR RENT

**NEAR SCARB. TOWN CENTER**
1Bedroom + Den condo. for rent. Prime location. Steps to RT, mall, cinema, bus, underground parking, insuite laundry. Mins to HWY 401. Unobstructed view, Avail. immediately.
தொடர்புகட்கு: 416.806.4567

**MARKHAM & EGLINTON**
2 Bedroom in 3 bedroom condo. for rent. 2 Full washroom. Cable, A/C, washer & dryer. Close to TTC, mall, school. Clean & Nice Building. Rent $750. Avail. April 1st, 2009.
416.878.5974/416.292.3944

**KENNEDY & EGLINTON**
2 Bedroom condo for rent or sale. With all facilities. Very good location. Close to TTC, school & mall. Available immediately.
தொடர்புகட்கு: 647.801.9720

## CONDO. FOR SALE

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom+Den condo for sale. Low rise. Low maintenance fee. Income property. 24 hrs. bus. Close to all facilities.
தொடர்புகட்கு: 416.554.9689

## CAR FOR SALE

2007 Honda Civic - 40K, $13,500.
2005-Toyota Sienna- $13000.
2002 Honda Accord- 2 door, 114k, $7500.
2006- Ford Fusion $6900
2002 Honda odyssey, 90k, $8000
2004 Lexus Es 300 $14900
Contact: 416.575.5055

## A1 கொழும்பு ஸ்ரூடியோ & வீடியோ

**அல்பத்துடன் போட்டோ *packages***
25-5x7 பிறந்த நாள் போட்டோக்கள் $50.
50-5x7 முதல் நன்மை $100.
50-5x7 பூப்பு நீராட்டுவிழா $100.
100-5x7 திருமண விழா $200.
2296 Eglinton Ave East @ Birchmount Rd. Unit Lower Level 3
***416.755.2333/416.752.4444*** (cell)

## Tutoring



***Tutoring for students from grade 3 to 12.***
**Courses include: Math, Science, Algebra and Geometry, Advance Function, Physics, Chemistry and English. Also tutoring available for University student.**

***You will have a better chance of achieving your goals. Courses taught by experience University graduates. Cost for the courses areas the following:***

Grade 3 to 5 from $30.00/month
Grade 6 to 8 from $40.00/month
Grade 9 to 12 from $50.00/month
**Location:** Near **Birchmount & Sheppard.**

For more information contact ***Kula*** (B.Engineer McMaster University Canada, B.Sc Jaffna University SriLanka) at
**Home: (416) 850-9397 Cell: (416) 317-9413**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***

மேலும் பக்கங்கம் 21

# ROOM RENT

**NEILSON & McLEVIN**
1 Bedroom with attached bathroom in condo. for rent. All recreation facilities . Available immediately.
416.286.0043 / 416.453.3418

**MCCOWAN & LAWRENCE**
1 Bedroom for rent. Kitchen, washroom. Parking, etc. Close to TTC, stores, hospital. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.885.0454

**NEILSON & FINCH**
1 room for rent with food. Parking, cable, laundry. Close to Malvern Mall, school & bus. Only for woman. Avail. immediately.
416.297.4100/647.239.4100

**MORNINGSIDE & SHEPPARD**
1 large bedroom for rent - Main floor. Sep. washroom, sharing kitchen, parking, laundry, utilities. inclu. Avail. immediately. Close to bus, shopping. ***Low rent.***
416.724.6186 / 647.833.3893

**MARKHAM & BRIMORTON**
2 Bedroom bsmt. apt for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to TTC, school & stores. தனியாகவும் அறை ஒன்று வாடகைக்கு உண்டு. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.438.3710

**KENNEDY & EGLINTON**
Room available For $450 in an Apartment. Central AC. Close to Subway, Shopping, School, Bus 24 Hrs. Available Immediately.
நாதன்: 416.454.4466
674 Kennedy Road

**EGLINTON & BIRCHMOUNT**
1 Room in 2 bedroom apt. to share. Close to all facilities. Available immediately
தொடர்புகட்கு: 647.828.5860

**MARKHAM & LAWRENCE**
Room available for rent in main floor. Cable inclusive. Close to TTC & plaza. Room $275
416.439.4076/416.728.0807

**BRIMLEY & STEELES**
தனி வீடு ஒன்றின் மேல் தளத்தில் அறை ஒன்று வாடகைக்கு உண்டு. Laundry, cooking facilities. Close to bus, school, தமிழ் கடைகள். NO Parking. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.844.7550

**LAWRENCE & PHARMACY**
1Room in 4 bedroom bsmt. with free internet for rent with two meal. Avail. immediately.
தொடர்புகட்கு:416.288.0303

**ORTON PARK & LAWRENCE**
2 அறைகள் கொண்ட Apt.இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. ஆண்கள் விரும்பத்தக்கது. Parking. Close to bus, stores, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.439.3568

**KENNEDY & EGLINTON** சந்திப்புக்கு
அருகாமையில் அமைந்துள்ள BSMT இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, parking, cable. No alcohol, no smoking. Avail. anytime. Rent $375. Close to bus, subway, stores, etc.
647.839.1747 / leave message

**MARKHAM & ELSON**
1 bedroom for rent. laundry. Avail. immediately. தனி நபர் விரும்பத்தக்கது. Rent $300. Close to bus, shopping, etc.
தொடர்புகளுக்கு: 416.951.0034

**LAWRENCE & BELLAMY**
Rooms available for rent. Sep. entrance, parking, cable, laundry all included. TTC at door step. Available immediately. Call after 6 pm on week days & weekends any time.
தொடர்புகட்கு: 647.408.3459

**KINGSTON & LAWRENCE**
1 Room in main floor for rent. Cooking facilities, parking, laundry & Sun TV. Close to bus, mall, Tamil stores. Ladies above 55 years preferred. Avail. immediately. Also 1 Room avail. for men in bsmt. with all facilities.
தொடர்புகட்கு: 416.816.5293

**DANFORTH & EGLINTON**
One Room in main floor for rent. Laundry, parking. Close to bus, stores, 5 minutes to Kennedy subway. Ladies preferred. Avail. immediately. தொடர்புகளுக்கு: 647.201.3111

**LAWRENCE & MIDLAND**
1 Room in 2 bedroom condo for rent. All facilities included. Close to sub-way, Price Shopper, bank, mall. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.616.7427

**BIRCHMOUNT & MCNICOLL**
அறைகள் வாடகைக்கு உண்டு.
தனித்தனியாகவும் வாடகைக்குக் கொடுக்கப்படும்.
Attached washroom, Double garage.
Close to everything.
Call: 416.335.8055/905.294.2674


றிப்ளக்ஸ்
REFLEX
COPY & DIGITAL PRINTING
B/W & Color Copies
Color & B/W Prints - Booklets - Binding
Scanning - Color B.Card & Flyers
POSTERS & BANNERS
1109 Bay St., Toronto - Tel: 416-975-9674
அச்சுத் தொடர்பிற்கு JOE (416)558-8905
BAY & BLOOR (BAY SUBWAYக்கு அருகாமையில்)
OPEN 7 DAYS


வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை ஐந்து நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

*விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு*
***www.vlambaram.com***

# HOUSE FOR RENT

**BIRCHMOUNT & ELLESMERE**
3 Bedroom house for rent. 1½ bathroom. Sunroom overlooking the back yard. A/C. Newly renovated kitchen & bathroom. Recroom set up in finished basement. Close to school, ttc, temple & church. Non smokers, no pets. $1,300 + utilities. Avail. immediately.
Pl. call: 416.755.1484 / leave message

**NEILSON & TAPSCOTT**
3 Bedroom house for rent. Near Malvern mall. Parking & laundry facilities. Close to school & TTC. Avail. immediately. Also 2 Bedroom bsmt apt. avail. for rent.தொடர்புகட்கு: 416.754.8195

**BRIMLEY & STEELES**
3 Bedroom house for rent. 4 parking. 2 washroom & A/C. Close to TTC, school & stores. Avail. April 1st, 2009
416.335.3460/647.408.1541

**MARKHAM & LAWRENCE**
3 Bedroom bungalow house for rent. Close to school, mall, TTC. Avail. immediately.
647.287.9546/647.350.6515

**BIRCHMOUNT & McNICOLL**
3 Bedroom or 5 Bedroom house for rent. 2 parking, 2½ washroom. Close to Grace Hospital, school, TTC & Mall. Available from May 01st, 09
416.335.8055 / 905.294.2674


மேலும் பக்கங்கம் 20


**MARKHAM & BRIMORTON**
3 bedroom bungalow house main floor for rent. Parking, washer & dryer. Close to bus, school, stores. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். உடன் வாடகைக்கு உண்டு.
தொடர்புகட்கு: 416.438.3710

**MARKHAM & LAWRENCE**
3 Bedroom house for rent. Parking. Close to TTC, Tamil stores,schools, mall, doctors & many more. Avail. immediately. Quiet neighbour hood.
தொடர்புகளுக்கு: 647.219.4558

**MARKHAM & 16TH AVE**
4 Bedroom house for rent. 3 washrooms. Rent $1500.
**BIRCHMOUNT & STEELES**
3 Bedroom house for rent. Rent $1300
416.575.5055

**KENNEDY & ELLESMERE**
3 Bedroom house for rent. Parking, washer & dryer. Close to school, bus, & many malls. Good location. Avail. immediately.
தொடர்புகட்கு: 416.720.7561

**MORNINGSIDE & MCLEVIN**
3 bedroom house for rent main floor. Parking. Small family preferred. Close to everything.
416.724.1837 / 416.297.8767

**KENNEDY & DANFORTH**
3 Bedroom house for rent. 2 parking. All facilities. Close to TTC, school. Avail. immediately. 416.717.8979

# APARTMENTS FOR RENT



***In a NEWLY Renovated High-Rise Apartment Building***
***Clean, Utilities inclu. Free parking. Close to TTC, Tamil store in building, schools nearby***

**Pl. Call: 416.264.2818**

# OFFICE SPACE FOR RENT

**அலுவலக இடம் வாடகைக்கு -**
**MORNINGSIDE & SHEPPARD**
Luxury Office space for rent. Real Estate, Mortgage, Insurance offices போன்ற அலுவலகங்கள் நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு.
***Pl. Call: Murale - 416.569.4065***

# Slumdog Millionaire

16ஆம் பக்கத்தொடர்ச்சி

அறிந்து, அங்கு சென்று தன்னுடன் வரும்படி கூறுகின்றான். இதற்கிடையில் இப்போட்டியில் கலந்து கொள்கின்றான். போலிஸ், அடி உதையின் பின்னர், மறு நாள் காலை ஜமால் பற்றிய விபரங்கள், பத்திரிகைகளையும், தொலைக்காட்சிகளையும் அலங்கரிக்கின்றன. சலீம் லத்திகாவிடம், தனது முதலாளியின் கார் திறப்பையும் தனது கைத் தொலைபேசியையும் கொடுத்து தப்பி ஓடி விடுமாறு கூறுகின்றான். தன்னை மன்னித்துக் கொள்ளுமாறு கூறுகின்றான். இறுதிக் கேள்வி இவர்கள் பள்ளியில் படித்த Three Musketeers கதையை மையமாகக் கொண்டது. இதற்கான விடைக்கு உதவி பெற தனது அண்ணன் சலீமின் கைத்தொலைபேசிக்கு அழைக்கின்றான். நீண்ட நேரத்தின் பின்னர் லத்திகா குரல் கொடுக்கின்றாள். அப்பாவியாக விடை தெரியாது எனக் கூறுகின்றாள். சலீம் தனது முதலாளியை சுட்டுக் கொல்கின்றான். சலீமும் இறக்கின்றான். இறுதிக் கேள்விக்கான விடையை அதிர்ஸ்டமாக 'ஏ' எனக் கூறுகின்றான். அதுவே சரியன விடை. 20 மில்லியன் ரூபாய் பரிசாக பெற்றுக் கொள்கின்றான். ஜமாலும், லத்திகாவும் இணைகின்றனர்.

படத்தில் வரும் சிறுவர்களுக்கு இந்நிகழ்ச்சி பற்றி எதுவும் தெரியாது. அவர்கள் இந்நிகழ்ச்சியையோ, இப்படத்தையோ பார்க்கும் சந்தர்ப்பம் இல்லை. பாத்திரங்கள், பார்வையாளர்கள் என அந்நியப்பட்ட சூழ்நிலையில் தான் இது உள்ளது. படத்தைப் பார்க்கும் பார்வையாளர்கள் தமது மனச்சாட்சி மீதான விசாரணைகளை மேற் கொள்ளக்கூடாது. இது படத்தின் ஆரம்பத்தில் இருந்தே மேற்கொள்ளப்படுகின்றன. படத்தின் ஆரம்பத்தில் ஜமால் இறுதிக் கேள்வி பதில் கூறி 20 மில்லியன் ரூபாயை பெறுவாரா? என்ற கேள்வியுடனேயே படம் தொடங்குகின்றது. மத்திய மேல் தட்டு வர்க்க பார்வையாளர்கள் சேரி சிறுவனுக்கு 20 மில்லியனா? என்ற கேள்வியுடனே படத்தை பார்க்க ஆரம்பிப்பார்கள். படம் பார்வையாளர்களை சேரி வாழ் மக்களது வாழ்வியலில் இருந்து, தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலம் மேலும் அந்நியப்படுத்துகின்றது. ஜமாலை ஒரு கதாநாயக, காவியனாகவே காட்டுகின்றார் கள். இப்படத்தைப் பார்க்கும் பொழுது, ஒரு கட்டத்தில் எம்.ஜி.ஆர் படத்தை பார்த்த உணர்வு ஏற்பட்டது. இறுதிக்காட்சி மேலும் இதற்கு சான்று.

உலகமயமாக்கலின் கட்டாயம் இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளை எதுவுமற்றவர்களாக காட்டுவதுடன், இங்கு சமூகரீதியான ஒடுக்கு முறைகள் உள்ளன என்பதனை வெளிப்படுத்தி இந்திய பார்வையாளர்களையும், அவர்கள் நாட்டின் மீது கொண்டுள்ள நம்பிக்கையினையும் தகர்ப்பது மிக முக்கியம். மேற்குலகு பற்றிய போலி மதிப்பீட்டினை இவர்கள் மத்தியில் வளர்ப்பது, மேற்கின் வியத்தகு வியாபார தாபனங்களின் லாபத்தை அதிகரிக்கும். இன்றும் காலனித்துவ ஆட்சி மீதும், வெள்ளையர் மீதும் மரியாதையுடன் உள்ளனர் இந்த மூன்றாம் உலக நாட்டு மக்கள்.

காதல் பற்றிய மத்திய தர வர்க்க கோட்பாடுகளில் இருந்து மாறி, கற்பு போன்ற கற்பிதங்களை மீறி ஜமாலின் தூய காதல் வெளிப்படுகின்றது. இது வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் மத்தியிலே தான் சாத்தியம்.

தாதாக்கள், அவர்களது மனோ நிலைகள், கதாநாயகத் தன்மைகள் சலீமிடம் சென்றடைகின்றன. அதன் வெளிப்பாடு தம்பியின் காதலியையே துப்பாக்கி முனையில் தனதாக்கிக் கொள்கின்றான். இது 'துப்பாக்கியிலான' அதிகாரத்து வெளிப்பாடு. இது எமக்கு புதிதல்ல.

சலீம் பாத்திரத்தின் படிப்படியான வளர்ச்சி இயல்பாகவுள்ளது. ஜமாலின் வளர்ச்சி இயல்பற்றுள்ளது. தாஜ்மகால் உல்லாசப்பயணிகளிடம் ஆங்கிலம் பேசுவது போன்றவை நம்பமுடியாமல் உள்ளது. அதுவும் ஒரு சிறுவனை வழிகாட்டியாக ஏற்றுக் கொள்ளும் உல்லாசப் பயணி, 'இது ஓர் 5 நட்சத்திர கோட்டல், இராணி விபத்தில் வைத்தியசாலைக்கு செல்லும் வழியில் இறந்துவிட்டார்' போன்றவற்றை நம்பும் உல்லாசப்பயணி. இதில் யார் முட்டாள், பார்வையாளர்களா? பாத்திரங்களா?

படத்தில் வரும் ஜமாலும், சலீமும் முஸ்லீம்கள். ஏன் இவர்களை இந்துக்களாக காட்டவில்லை என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததே. மூலக் கதையில் இப்பாத்திரத்தின் பெயர் 'ராம் மொகமட் தோமஸ்' என உள்ளது. நாவலாசிரியர் இப்பாத்திரம் ஓர் இந்தியன் எனக் காட்டுவதற்காகவே அவ்வாறான பெயர் சூட்டப்பட்டதாக தெரிவித்தார். படத்திற்கான



வியாபாரமும், மேற்குலகு முஸ்லீம்கள் மீது கொண்டுள்ள காழ்ப்புணர்ச்சிக்கு மனோரீதியான வடிகாலாக இது அமையும். அறிவிப்பாளர் இறுதிவரை ஜமாலை போட்டியில் இருந்து விலத்தி விட தீவிரம் காட்டுகின்றார். மலசல கூடத்தில் கண்ணாடியில் "B" என எழுதி விட்டுச் செல்கின்றார். ஜமால் அதற்கெதிரான விடையைக் D எனக் கூறுகின்றான். அறிவிப்பாளர் ஜமாலை அடிக்கடி 'சாய் வாலா' எனக் கூறி கேலி செய்கின்றார். ஒவ்வொரு முறை கூறும் பொழுதும் பின்னணியில் சிரிப்பொலி கேட்கின்றது. இவ்வாறான சிரிப்பொலிகள் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களால் செயற்கையாக ஒலிபரப்பப்படுவது வழமை. இப்படத்தில் இந்நிகழ்ச்சி நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சியாக காட்டப்பட்டுள்ளது. நிகழ்ச்சிக்கு வந்திருந்த பார்வையாளர்களின் சிரிப்பொலியாக காட்டப்படுகின்றது. பார்வையாளர்கள் பெரும் பாலோனோர் மத்திய மேல் தட்டு வர்க்கத்தினரே. படத்தின் பார்வையாளர்களும், நுகர்வோர்களும் அவர்களே. படத்தின் கருவின்படி சேரி வாழ்வியலால் அனைத்து பதில்களை கூறும் ஜமாலால் ஏன் இறுதிக் கேள்விக்கு மாத்திரம் அதிர்ஸ்டத்தை நம்ப வேண்டி வந்தது? அதுவும் தான் படித்த புத்தகத்தில் இருந்து கேட்கப்பட்ட கேள்விக்கே விடை தெரியாமல் அதிர்ஸ்டத்தை அழைக்கின்றான். அனைத்து கேள்விகளுக்கும், அனுபவத்தில், பொதுப் புத்தியில் பதில் கூறும் ஜமால், இறுதிக் கேள்விக்கு, அவனது கல்வியறிவே உதவவில்லை. இயக்குனர் ஜமாலையும், அவன் சார்ந்த சேரி மக்களையும், நன்றாகவே கேலி செய்துள்ளார். இது கூட வர்த்தகரீதியான வெற்றிக்கான வழியமைப்பும், மேல் தட்டு வர்க்க மனோபாவத்தின் எதிரொலியாகவுமே வெளிப்படுகின்றது.

சேரி வாழ் மக்கள் பற்றிய பதிவின் காவியாக ஏன் இப்போட்டி நிகழ்ச்சி பயன்படுத்தப்பட்டது? ஒரு சேரி வாழ் நாயகனால் இப்போட்டியில் இலகுவாக பங்கு பற்ற முடியுமா? போன்ற கேள்விகள் எழுகின்றன. இப்படக்கதையின் மூல ஆசிரியரான விகாஷ் சுவாரப்பின் பேட்டி ஒன்றின் போது 'இங்கிலாந்தில் ஒரு இராணுவ அதிகாரி ஒருவர் இப்போட்டியில் தவறான வழியில் விடைகளை பெற்றதற்காக சட்டத்தின் பிடியில் சிக்கினார்' அதைப்பற்றி யோசிக்கும் பொழுது ஒரு சேரி வாழ் சிறுவன் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்றாலும் இது போன்ற சட்ட நடவடிக்கைக்குட்படலாம். அதுவே கதையாயிற்று என்றார். சேரி வாழ் மக்கள் சந்திக்கும் பிரச்சினைகளை தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலம் அணுகும் கதாசிரியரின் சமூக அக்கறையை நிச்சயம் பாராட்டத்தான் வேண்டும். ஆசிரியர் மேல் தட்டு வர்க்கத்தைச் சேர்ந்தவர். இவரது மூதாதையர் வழக்கறிஞர்கள். தாத்தா இந்திய முன்னாள் சட்டமா அதிபர்.

ஓர் ஒடுக்கப்பட்ட, பல துன்பங்களை சந்திக்கும், அனைத்து அரசுகளாலும் கைவிடப்பட்ட சமூகத்தின் பதிவு, அதன் அகச் சூழலை வெளிப்படுத்தியுள்ளதா? கவர்ச்சியான கரு. இக்கருவின் ஊடாக வெளிப்படுத்தப்பட வேண்டிய பல விடயங்கள் வெளிப்படுத்தப்படவில்லை. படத்தில் பல தவறுகள் உள்ளதாக பல இணையத்தளங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. கவி சுரதாஸ் எழுதியதாக விடை கூறப்பட்ட பாடல், உண்மையில் நர்சி பகட்டால் எழுதப்பட்டது. டொன் பட இசைக்கு, யுவா பட காட்சிகள் காட்டப்பட்டுள்ளன. மும்பை பாடத் திட்டத்தில் மூன்று நுளம்புகள் கதை பாடத் திட்டத்தில் இல்லை.

போட்டி நிகழ்ச்சி படத்தில் நேரடி ஒளிபரப்பாகவே காட்டப்படுகின்றது. வழமையில் இது முன்னரே ஒளிப்பதிவு செய்யப்பட்ட பின்னர் பிரதியே ஒளிபரப்பப்படும். இது திரைக்கதையாசிரிருக்கோ, இயக்குனருக்கோ உள்ள அக்கறையின்மையை வெளிப்படுத்துகின்றது. சினிமாத்தனம் என்பது இவர்களுக்கு நன்கு பொருந்தும். பல இடங்களில் காட்சி சட்டகங்களில் தொடர்ச்சி தவறானதாக காணப்படுகின்றது. ஜமாலின் காயமடைந்த கண் முதலில் இடதாகவும், பின்னர் வலதாகவும் வெளிப்படுகின்றது.

இந்திய வறுமையை மையமாகக் கொண்டு பல படங்கள் வெளிவந்துள்ளன. மீரா நாயரின் சலாம் பம்பாய், சத்யஜித்ரேயின் படங்கள் போன்ற பல படங்கள். இவையாவும் வெளி நாட்டுச் சந்தையை நோக்கியும், திரைப்பட விழாக்களையும் நோக்கியே நகர்கின்றன. மாதுர் மன்டகாரின் 'ரபிக் சிக்னல்' என்ற இந்திப் படம் ஒரு சந்தியைச் சுற்றியுள்ள சேரி மக்களை பதிவு செய்துள்ளது. இப் படம் பதிவு செய்த பல தீவிர கருத்துக்களை சிலம் டோக் பதிவு செய்யவில்லை. ரபிக் சிக்னல் இந்திய சந்தையிலேயே விற்கப்பட்டது. அண்மையில் இந்தியாவின் தெய்வீக கதாநாயகன் அமிதாப்பச்சன் 'சிலம் டோக்' இந்திய வறுமையை கேலி செய்வதாக குற்றஞ்சாடடியுள்ளார். (Amitabh Bachchan: Slumdog Millionaire Shows India as Third World's Dirty Underbelly) சேரி வாழ்மக்கள் பற்றிய பல படங்கள் உலகலாவிய ரீதியில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அண்மைக் காலங்களில் லத்தீன் அமெரிக்க நாடுகளில் உள்ள வீதிச் சிறுவர்களைப் பற்றிய பல பதிவுகள் வெளிவந்துள்ளன. குறிப்பாக City of God மற்றும் The Kite Runner போன்ற படங்கள் பரவலாக அறியப்பட்ட படங்கள். 1958ல் லண்டனில் வெளியான A Cry from the Streets என்ற படம் லண்டன் வாழ் சேரி சிறுவர்களை பதிவு செய்துள்ளது. இவை கூட பெரும் வரவேற்பு பெறவில்லை. இவற்றில் வெளிப்பட்ட யதார்த்தமும், இம் மக்கள் மீதான அக்கறையும் இப் படத்தில் வெளிப்படவில்லை. ஆனால் மேற்கூறிய படங்களுக்கு கிடைத்த கவன ஈர்ப்பை விட அதிகளவில் இப்படம் பெற்றுள்ளது. இது அமிதாப்பின் கூற்றில் உள்ள உண்மையை உணர்த்துகின்றது. அதற்காக அமிதாப்பிற்கு இவர்கள் மேல் அக்கறையோ, அனுதாபமோ எனக் கூறமுடியாது. இதுவும் ஒரு சுய வியாபாரமே. இவரது படங்களில் எதிலும் சேரி வாழ் மக்கள் நலன்கள் கருதி கருத்துக்கள் எதையும் தெரிவிக்கவில்லை.

உலகெங்கும் சேரிகளில் மக்கள் வாழ்கின்றனர். இதற்கு அபிவிருத்தியடைந்த நாடுகள் விதி விலக்கல்ல. அமெரிக்காவில் பெரும் நகரங்களிலேயே இதனை காணலாம். டிற்றொய்ட், அற்லான்ரா, மியாமி, சென் லூயிஸ், கூஸ்ரன், சிக்காகோ, நியு ஒலியன்ஸ், மில்வாக்கி போன்ற நகரங்களில் சேரிகளை காணலாம். இவற்றில் வாழ்பவர்களில் பெரும்பாலானோர் (49 வீதம்) கறுப்பின மக்களே. வெள்ளை இனத்தவர்கள் வெறும் 5 வீதத்திற்கும் குறைவானவர்கள். இது உலகின் பெரும் வளர்ச்சியடைந்த நாடுகளின் நகரங்களிலும் காணப்படுகின்றது. நவீன நகரமயமாக்கல் என்பதன் பெயரில் குடியிருப்போரை எழுப்பி வீடற்றவர்கள் ஆக்கும் முயற்சியும் வளர்ச்சியடைந்த நகரங்களிலேதான் நடைபெறுகின்றன. நியு யோர்க் நகரில் புறுக்களின் பாலத்தை சுற்றியுள்ள நகர மக்கள், ரொரண்ரோவின் றிஞன்ற் பூங்கா மக்கள் இவ்வாறு நவீன மயமாக்கலில் பாதிக்கப்பட்டோர். இவர்கள் மீதான வன்முறையையும், ஒடுக்குமுறையையும் மறைக்கும் முயற்சியே, இப்படம் மீதான அதீத விளம்பரத்திற்கான காரணம். இப்படம் சிறந்த மக்கள் தெரிவு விருதை ரொரண்ரோ சர்வதேச திரைப்படவிழாவில் பெற்றுக் கொண்டது. ரொரண்ரோ விழா கேந்திர முக்கியத்துவமுடையது. உலகின் இரண்டாவது பெரிய திரைப்பட விழா, அத்துடன் வட அமெரிக்க சந்தையையும் தீர்மானிக்கின்றது. பல வெகுசனத் தொடர்பாளர்கள் சங்கமிக்கும் விழா. இப்பொழுது தங்க உலகம் (Golden Globe), ஒஸ்கார் எனத் தொடர்கின்றது.

ஒன்றை மட்டும் கூறலாம் யதார்த்தத்தை மீறி வெளிப்பட்டுள்ள இப்படத்தை பார்க்க செல்ல முன்னர் மூளையை கழற்றி வைத்துவிட்டுச் செல்ல வேண்டும். பொதுப் புத்தி என்பது பார்வையாளனுக்கு இல்லை என்பதையே இப்படம் வெளிப்படுத்துகின்றது. இன்றைய மேற்கத்திய வெகுசனத் தொடர்பு சாதனங்கள் இப்படம் செய்ததைத்தான் செய்கின்றன.

இறுதியாக ஒரு கேள்வி? இப் படத்தின் தலைப்பு சேரி 'நாய்' என இடப்பட்டுள்ளது. வறுமையில் வாழ்பவர்களை 'நாய்' என்று கூறும் ஆங்கிலேய தயாரிப்பாளருக்கு எந்த இந்தியரும் ஏன் எதிர்ப்பை வெளிப்படுத்தவில்லை. அனைத்து ஊடகங்களும் மௌனமாக உள்ளன. 'விளம்பரம்' ஊடாக இந்த எதிர்ப்பை வெளிப்படுத்துவதுடன் இதன் தயாரிப்பாளருக்கும் தெரியப்படுத்துவோம்.


**CHENNAI COTTAGE**

சென்னையில் குடும்பத்துடன் தங்குவதற்கும் விரும்பினால் சமையல் செய்து கொள்வதற்குமான வசதிகளுடன் கூடிய Cottage. விமான நிலைய போக்குவரத்து வசதிகள், சுற்றுலா வாகன வசதிகள், திருமண மண்டப ஒழுங்குகள், வீடு, நிலம் அரச அங்கீகாரத்துடன் வாங்குவதற்கான வசதிகளும் செய்து தரப்படும்.



416.356.1477
647.836.3440



## சக பத்திரிகையாளரின் அகால மறைவிற்கு
## எமது இதயபூர்வமான இறுதி அஞ்சலி
## -'விளம்பரம்' தமிழ்ப்பத்திரிகை

# மரண அறிவித்தல்

பிறப்பு
31-01-1952



இறப்பு
24-02-2009





## திரு. கனகராஜா அரசரட்ணம்

(தமிழர் செந்தாமரை பிரதம, ஆசிரியர்)

கொழும்பை பிறப்பிடமாகவும் **Toronto** வை வதிவிடமாகவும் கொண்ட கனக அரசரட்ணம் (தமிழர் செந்தாமரை பிரதம, ஆசிரியர்) அவர்கள் 24-02-2009 அன்று Toronto வில் காலமானார்.

அன்னார் அமரர் கார்த்திகேசு கனகராஜா, ஜெயலட்சுமியின் அன்பு மகனும், தம்பிராஜா அமரர் பார்வதி அவர்களின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும், வினோ, அஜந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிந்துவின் மாமனாரும், மதுமிதாவின் அன்பு அப்பப்பாவும், விஜயராஜா - மீனா அவர்களின் சம்பந்தியும், புஸ்பம், அமரர்களான இராஜரட்ணம், செல்வரட்ணம், நவரட்ணம், மற்றும் மனேரஞ்சிதம்(கனடா), இராஜேஷ்வரி, குணரட்ணம் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், அமரர் சிவராம், மனோகரி, செந்தில், மனோ (கொழும்பு), அமரர் இராஜேஷ்வரன், ஆனந்தன், ஜெனி (கொழும்பு) பேபி, ரஞ்சன், பவா, ஜெயந்தி, சந்திரன், மோகன் (கனடா), ஆனந்தன், ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் **Feb 28 , 2009** சனிக்கிழமை பி. ப. 4 மணி முதல் இரவு 9:00 மணிவரையும், **March 01 , 2009** ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4 மணி முதல் இரவு 9:00 மணிவரையும், இல. **3280 Sheppard Avenue East, Scarborough (Warden & Sheppard)** இல் உள்ள **Highland Funeral Home** இல் பார்வைக்காக வைக்கப்பட்டு **March 02 , 2009** திங்கட்கிழமை காலை 9:00 மணி முதல் 11:00 மணி வரை அதே இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் 12:00 மணியிலிருந்து 1:00 மணிவரை **375 Mount Pleasant Road (Mount Pleasant & St. Clair) Toronto** இல் அமைந்துள்ள **Mount Pleasant Cemetry** இல் இறுதிக்க்கிரியைகள் நடைபெற்றுத் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

**தகவல்**
**மனைவி: ராஜி**
**மகன் - விநோத்**
**416-707-6262, 905-477-0076**
**416-824-8815**

# நான் கடவுள்

## - விமர்சனம்

- பிலிம்நியூஸ் கிருஸ்ணன் -

ஒரு வழியாக வெளிவந்துவிட்டது 'நான் கடவுள்' திரைப்படம். மூன்று வருடங்களாக எடுக்கப்பட்டு, இதோ வருகிறது, இதோ வருகிறது என தள்ளிக் கொண்டே போய், கடைசியில் வருமோ, வராதோ என எண்ணவைத்து, கடைசியில் இதுமாதிரியான ஒரு படத்தை உருவாக்க இவ்வளவு நாட்கள் உழைப்பு தேவைதான் என இந்த காலதாமதத்தை நியாயப்படுத்துவது போல் வந்திருக்கிறது 'நான் கடவுள்'. ஆழ்ந்த அர்த்தமுள்ள பல வார்த்தைகளைக் கொண்டு புனையப்பட்ட ஒரு ரொமாண்டிக் கவிதையைப் போல, பல அர்த்தமுள்ள காட்சிகளைக் கொண்டு செதுக்கப்பட்ட ஒரு நேர்த்தியான தமிழ் திரைப்படம்.



இந்திய தத்துவ மரபில் ஞானிகள் என்று அறியப்படுபவர்கள் மிக முக்கியமானவர்கள். இவர்கள் கடவுளைக் கண்டுகொண்டவர்கள் என கருதப்படுகிறார்கள். இவ்வுலக வாழ்வை வெறுத்து துறவறம் பூண்ட அவர்களை ஆன்மிகத்தின் உச்சமாக நம்புகிறார்கள். ஞானிகளின் பார்வையில் இந்த உலக வாழ்க்கை அர்த்தமற்றது, உலகம் மாயம், பிறவி சுமை என்ற சிந்தனையுள்ள ஞானிகள் நானே கடவுள் என்கிறார்கள். தமிழ் மரபில் சித்தர்களை இப்படிச் சொல்லலாம். வட இந்தியாவில் காசி போன்ற பகுதிகளிலும் தமிழகத்தில் திருவண்ணாமலை போன்றப் பகுதிகளிலும் இப்படிப்பட்டவர்களை இன்றும் காணலாம். இந்த சிந்தனை மரபுதான் இந்தப் படத்தின் அடிப்படை. அதைச் சுற்றி ஒரு கதை புனையப்பட்டு, இரண்டு மணிநேர படம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் சினிமா இதுவரை கண்டிராத கதைக்களம். பாலா படங்கள் பொதுவாகவே, விளிம்புநிலை மனிதர்களையும் சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட வாழ்வியலையும் சார்ந்து, அந்த சமூகத்தினை சுற்றி நிகழுபவையாக இருக்கும். அதற்குள் இருவேறு பரிமாணங்களில் இயங்கும் இரண்டு கதைகளை ஒன்றிணைத்து ஒரு திரைக்கதை யாக்கி இருப்பார். இந்த படத்திலும் இரண்டு கதைகள், ஒன்று, ஜோசியர்கள் சொல்லைக்கேட்டு தந்தையால் காசியில் ஆனாதையாக விடப்பட்ட சிறுவன் அகோரியைச் சுற்றிய உலகம். இன்னொன்று, பிள்ளைகளைப் பிடித்து பிச்சை எடுக்க வைத்து பிழைப்பு நடத்தும் ஒரு கும்பலும், அவர்களால் பிச்சை எடுக்க பயன்படுத்தப்படும் பிச்சைக்காரர்களும் அதில் ஒருத்தியான குருட்டு பிச்சைக்காரியையும் கொண்ட உலகம்.

சிறு வயதில் காசியில் விடப்பட்ட நாயகனைத் தேடி வரும் தந்தை, அவனை தன்னுடன் கூட்டிப்போக முயற்சிக்கிறார். ஆனால், இதற்கிடையில் காசியில் குருவிடம் வளர்ந்த காலங்களில் ஒரு அகோரியாக மாறியிருக்கிறான் அவன். (அகோரி என்பவர்கள் நரமாமிசம் உண்டு வாழ்பவர்கள் என்ற கருதப்படுகிறார்கள். இன்றளவும் வாரணாசி உட்பட சில வட நகரங்களில் அகோரிகள் சாதாரண மனிதர்கள் போலவே உலா வருகின்றனர் என்கிறார்கள். மனிதர்களின் மண்டையோட்டை, தாங்கள் உணவருந்தும் பாத்திரமாகப் பயன்படுத்தும் அகோரிகளை இன்றும் வட இந்தியாவில் பார்க்கலாம்.) அகோரியான நாயகனின் குரு, "நீ ஒரு சாதாரண மனிதனல்ல, உனக்கு சொந்த பந்தங்கள் இருக்கக்கூடாது. போய் அவற்றை எல்லாம் களைந்துவிட்டு வா" என்று அவனை தந்தையுடன் அனுப்பி வைக்கிறார்.

ஊருக்குத் திரும்பும் அவன் மேல், ஊரில் குருட்டு பிச்சைக்காரியாக இருக்கும் அம்சவல்லி 'சாமி, சாமி' என்று பற்று வைக்கிறாள். அவளைச் சுற்றி ஒரு பெரிய பிச்சைக்காரர்கள் கூட்டம் இருக்கிறது. இதன்பிறகு, அந்தப் பிச்சைக்காரர்களின் வாழ்க்கை, அவர்களுக்கிடையான சோகங்கள்



மகிழ்ச்சிகள் என நகருகிறது கதை. கடைசியில் அகோரியான நாயகன் அம்சவல்லியின் பற்றை, எவ்வாறு அறுத்தெறிகிறான் என்பதே முடிவு.

இயக்குநர் பாலா, இன்றைய தமிழ் திரையுலகில் தான் ஒரு முக்கியமான ஆளுமை என்பதை மீண்டும் இந்தப் படம் மூலம் மீண்டும் நிரூபித்திருக்கிறார். பிச்சைக்காரர்களாக நடித்திருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் மனநலக் குறைபாடும் உடல்நலக் குறைபாடும் உள்ளவர்கள். ஒரு தேர்ந்த நடிகனுக்குரிய நடிப்பை அவர்களிடம் இருந்து வரவழைக்க, நிச்சயம் மிகவும் மெனக்கெட்டு இருக்கவேண்டும்.

பிச்சைக்காரர்களின் வாழ்க்கை ரகசியமானது. நாம் வாழும் தெருவின் முனைகளில், நாம் தினம் செல்லும் கோயில் வாசல்களில், டிராபிக் சிக்னலுக்காக வாகனத்தில் காத்திருக்கும் பொழுதுகளில், என நமக்கு மிக நெருக்கமாகத்தான் அவர்கள் இருக்கிறார்கள். ஆனாலும், அவர்களைப் பற்றி நம் யாருக்குமே அதிகமாய் தெரிந்திருக்காது. நாம் தினமும் பார்க்கும் பிச்சைக்காரனுக்கு எந்த ஊர், அவனது இருப்பிடம் எது, அவனுக்கு பிச்சையாய் வரும் பணம் எங்கே போகிறது என்பது உட்பட எதுவும் யாருக்கும் தெரியாது. நம் பக்கத்தில் இருந்தும் நாம் கவனித்திராத இந்த கடைநிலைமனிதர்களின் வாழ்க்கையை, நம் முகத்தில் அறைவது போல் காண்பிக்கிறார் பாலா. ஆனால், அவர்கள் மீது பரிதாபம் ஏற்படுவது போல் காட்டாமல், அவர்கள் வாழ்க்கையில் சுவாரஸ்யங்களும் கேலிகளும் கிண்டல்களும் மகிழ்ச்சியான தருணங்களும் உண்டு எனக் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. அவர்களிடையே இருக்கும் தோழமை, 'வெளி உலகு' குறித்த ஏளனப் பார்வையைப் பார்த்து நாம் சிரிக்கிறோம், அழுகிறோம், கோபப்படுகிறோம், நெகிழ்கிறோம்.

படத்தின் மிகப்பெரிய பலம் இளையராஜா. 'ஓம் சிவோவோம்' என துவங்கும் ஆரம்ப பாடலும், ஏற்கெனவே பலரது மனதையும் கரைத்திருக்கும் 'பிச்சை பாத்திரம் ஏந்தி வந்தேன்' பாடலும் காட்சியாக விரிகையில் நம்மை மலைக்கச் செய்கிறது. பின்னணி இசையும் அருமை. தமிழில் திரைப்பட பின்னணி இசைக்கோர்வை தனியாக வருவதில்லை என்பதால், பின்னணி இசைக்காக மட்டுமே மீண்டும் ஒருமுறை இந்தப் படத்தைப்



பார்க்கலாம். இளையராஜா இசையமைத்த மிகச்சிறந்த படங்களில் இதுவும் ஒன்றாக இருக்கும். உடுக்கையின் ஒலியும் அதன் நாதமும் படம் முடிந்தும் காதிற்குள் ரீங்காரமிடுகிறது.

இசைக்கு அடுத்து பார்வையாளர்களின் அதிக கைதட்டலை படத்தின் வசனங்கள் பெறுகின்றன. எழுத்தாளர் ஜெயமோகன்தான் வசனம். ஒளிப்பதிவும் அத்தனை சிறப்பாய் இருக்கிறது. காசியில் பிணங்கள் எரிந்து கொண்டிருக்கிற காட்சியில், ஒளிப்பதிவு ஓவியம் வரைகிறது.

நடிகர்கள் அனைவருமே தங்கள் பங்கை மிகச்சிறப்பாக செய்திருக்கிறார்கள். நாயகன் ஆர்யாவின் இரண்டு வருட கடின உழைப்பு ஒவ்வொரு அசைவிலும் தெரிகிறது. படம் முழுக்க நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு நடக்கிறார், கட்டைக் குரலில் ஜெய் போலேநாத் என்று கத்துகிறார், கஞ்சா அடிக்கிறார், விரைப்பாகவே வலம் வருகிறார், நான் கடவுள் அகம் பிரம்மாஸ்மி என்று கூவுகிறார். ஆனால், நாயகன் என்றாலும் படத்தில் ஆர்யாவின் காட்சிகளுக்கு அத்தனை முக்கியத்துவம் இல்லை. குருட்டு பிச்சைகாரியாக வரும் பூஜாவின் நடிப்பிலும் மிக இயல்பான ஒரு நேர்த்தி. பிச்சைக்கார கம்பெனி நடத்தும் தாண்டவன் பாத்திரத்தில் நடித்திருக்கும் வில்லன் புதுமுகம். இத்தனை மோசமான ஒரு வில்லனை தமிழ்சினிமா இதுவரை பார்த்திருக்குமா தெரிய வில்லை. அவரது வசன உச்சரிப்பும் உடலசைவு மொழியும் இயல்பின் உச்சம்.

குறைகள் இல்லாமல் இல்லை. உலகின் சிறந்த படங்களுடன் ஒப்பிட்டு, தமிழ் திரையுலகை உலகத்தரத்துக்கு கொண்டு போகும் படம் என்றெல்லாம் குழப்பாமல், வழக்கமான தமிழ் வியாபார திரைப்படங்களுக்குள் ஒரு நேர்த்தியான படம் என்னும் அளவில் பார்த்தால், ரசிக்கலாம். இளகிய மனம் படைத்தவர்களும் பெண்களும் குழந்தைகளும் தவிர்க்கலாம்.


**ஒளிமயமான எதிர்காலம் என் உள்ளத்தில் தெரிகிறது**

என் மூலம் வீடு வாங்குவது / விற்பதன் மூலம் BMW ஒன்றை வெற்றிகொள்ளலாம்



**Recreation Camp Temple, Yoga Senior Home**

**Small Down Economic House Quick sale**

**Land 13 Acres 1½ Hours Drive Incomplete Property**

**Finch & Neilson 3+1 Bedroom Semi detached Finished basement**

*We look after* **seniors over 70 years** *peaceful life.*

**Condo. Senior home facility in Toronto $235,000.**

வீடும் வியாபாரமும் *Business Zoning*

**Future long term Investment**

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு

அழையுங்கள் - Sitham (Sam) Shanmugam (Sales Rep)

416.230.7820 / 905.696.7310

HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666

150 - 200 Acres land for sale in Peteboroug. Farm Land value.







**24 Hours Guaraanteed Results**

# Mother Siddhi

3 Reading $20

## Find the answer to your unsolved problems. Don't suffer in silence

உண்மையான ஆன்மீக பரிகாரி - 20 வருட அனுபவம் கொண்டவர் (Genuine spiritual healer)

## Psychic Clairvoyant Medium

**Genuine Spiritual Healer**
**Marabout of International Fame - 20 year's Experience**
**A Great Healer in Natural Medicine.**
**Born Gifted with Spiritual Power**

- No matter what your problems are, I can help you solve them by using holy spirit and the most powerful spell.
- Love/relationship problems, family problems. marriage (reunion or separation),
- Parents having difficulties with children, health problems, court cases or immigration.
- To have good success in exam, job or business, infertility or sterility and sexual problems.
- If you are suffering from unknown illness and pain inside your body, I can remove it within few days.
- Cure your alcoholism, drug addiction & energy weakness.
- I will protect you from all enemies and any bad obstacles that are blocking your success.
- If spouse walk out of your life, I can reunite and give love and fertility between you for ever and help find the right lover and success.

## தனிமையில் வாடாதீகள்.

பிரச்சினை எதுவானாலும் தீர்வுகாணலாம்.
(புனித ஆவி மற்றும் மந்திர வலிமையுடன்)

- புனித ஆவியின் துணையுடன் உங்கள் பிரச்சினை எதுவாயிருந்தாலும் தீர்வுகாண என்னால் உதவ முடியும்.
- காதலில் தோல்வியா? குடும்ப உறவில் விரிசலா? திருமண முறிவா? பாலியலில் பிரச்சினையா? அதில் நாட்டமின்மையா? தீர்த்துவைக்க முடியும்.
- சேய்களுடன் பெற்றோர்க்கு பிரச்சினையா?
- குடிவரவு அல்லது வழக்கில் பின்னடைவா?
- ஆரோக்கிய நலிவா?
- பரீட்சையில், வியாபாரத்தில், உத்தியோகத்தில் ஏற்றம் காணவேண்டுமா?
- குடி அல்லது போதை பழக்கத்திலிருந்து மீள வேண்டுமா?
- நிர்ணயம் செய்ய முடியாத நோயா?
- புரியாத உடல் வலியா உடல் வலிமையின்மையா?
- பகைவர்களிடமிருந்தும், வெற்றியை பாதையில் உள்ள தடைகளை நீக்கி பாதுகாப்பு அளிக்க என்னால் இயலும்.
- வாழ்க்கை துணை பிரிந்து போயிருந்தால் புதிய காதல் வாழ்வு ஆரம்பிக்கும் வகையில் மீளவும் சேர்த்து வைக்க முடியும்.
- இயற்கை வைத்தியத்தில் கைதேர்ந்தவர்.

- **ஆன்மீக சக்தியுடன் கூடவே பிறந்தவர்**
- **இயற்கை வைத்தியத்தில் கைதேர்ந்தவர்**



***Palm, Tarot Card, Crystal Ball Reading Advisor. Tells the past, present & future.***
***I can succeed where others have failed***

**Call : 416-283-1088**
**8871 Sheppard Ave.**
**East at morningside**
**You can see me by appointment only**




நிரு
பிராண்ட்
BRAND
Niru
JACK
MACKEREL
IN BRINE
தொடர்பிற்கு தொலைபேசி.
காட்சிக்கு தொலைக்காட்சி.
இணையத்திற்கு கணனி.
உணவிற்கு நிரு பிராண்ட்.
BRAND
Niru

# பேரினவாத சிறிலங்கா அரசின் கொடூர எறிகணைத் தாக்குதலில் படுகொலையுண்ட ஊடகவியலாளன் சத்தியமூர்த்தியை நினைவுகூர்ந்து அஞ்சலிக் கூட்டம்



ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளிலும் வாழ்ந்து வரும் தமிழ் பேசும் மக்கள் வரலாற்றில் என்றுமில்லாத வகையில் சோகத்தில் ஆழ்ந்துள்ளார்கள். பேரினவாத சிறிலங்கா அரசு தமிழர் பிரச்சினைக்கு இராணுவ அடக்குமுறையின் மூலமே தீர்வு காண விழைகின்றது. அப்பாவித் தமிழ்மக்களை யுத்த கொடூரத்திலிருந்து பாதுகாப்பதற்காகச் சிறிலங்கா அரசைப் போர்நிறுத்தம் செய்யுமாறு கோரி உலக அரசுகள், நடுநிலை அமைப்புக்கள், சமாதானத் தலைவர்கள், புத்திஜீவிகள் எனக் கோரிக்கை விடுப்போர் பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது. ஆயினும் பேரினவாத சிறிலங்கா அரசின் ஊழித்தாண்டவம் அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்து, இராணுவ வல்லாதிக்கத்தைத் தழிழர் பிரதேசங்களில் நிறுவுவதற்கான பேர் அவாவைத் தன்னகத்தே கொண்டதாகக் காட்சியளிக்கிறது. இதன் விளைவாகச் சிறிலங்கா அரசு புரியும் மனித உரிமைமீறல்கள் உலகத் தமிழ்மக்களின் தொடர்ச்சியான வேலைத்திட்டங்களினால் அனைத்துலகின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. அந்தவகையில் அவ்வாறான தளத்திலே கால்பதித்து அதற்குரிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்க உலகத் தமிழ்மக்களுக்கு அரசியல் தெளிவை ஊட்ட முயற்சித்தவனும், அதற்கும் அப்பால் சிறந்த தமிழ் ஊடகவியலாளனாக விளங்கியவனுமாகிய புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி சிறிலங்கா அரச இராணுவத்தின் கொடூர எறிகணைத் தாக்குதலில் அண்மையில் படுகொலையுண்ட சேதி மனிதத்தை நேசிக்கும் மக்கள் அனைவரையும் தாங்கொணா வேதனையில் ஆழ்த்தியுள்ளது. எனவே ஒடுக்கப்பட்ட தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தை நேசிக்கும் சக்திகள் அனைவரும் ஊடகவியலாளன் சத்தியமூர்த்தியை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்துவது ஓர் வரலாற்றுக் கட்டாயமாக அமையும். எனவே அதனை நிறைவேற்றும் பொருட்டு ஏற்பாடாகியுள்ள இவ்வஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் தாழ்மையுடன் அழைக்கின்றோம்.

இடம் -: 29 Rosebank Dr. ( Markham Rd / Milner Ave), Scarborough
காலம் -: 01.03.2009, ஞாயிறு பிற்பகல் 6.00
தொடர்புகட்கு:(647) 237-3619, (416) 754-1171, (416) 759-6264

# அனைத்துலக மனிதகலாச்சாரப் பேரவை நடாத்துகின்ற கவனயீர்ப்புப் போராட்டம்.

வன்னிப்பிரதேசத்தில் தொடர்ச்சியாக ஒவ்வோர் நாளும் மனிதப் பேரவலம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. விமானக் குண்டு வீச்சினாலும் ஆட்டிலறித் தாக்குதல்களினாலும் தினமும் பொதுமக்கள் கொல்லப்பட்டும் காயங்களுக்கு உட்பட்டும் வருகின்றார்கள். இந்தப் பேரவலமானது நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளது. இவ்விடயத்தினை உலகம் முழுவதிலும் வெளிக்கொணர வேண்டியது தமிழ் மக்களாகிய எங்களது பாரிய பொறுப்பாகும்.

கனேடியத் தமிழ் வைத்தியக்கலாநிதிகள், மருத்துவ உதவியாளர்கள், கனேடியத் தமிழ்ச் சட்டத்தரணிகள், சட்ட உதவியாளர்கள், வீடுவிற்பனைத் துறையினர், கனேடிய தமிழ் வர்த்தக சம்மேளத்தினர், தமிழ்ச் சமய ஆலங்களது குருமார்கள், ஊர்அமைப்புக்கள், முதியோர் அமைப்புக்கள, இனஉணர்வாளர்கள், துறைசார் வல்லுனர்கள், ஆகியோருடன் இணைந்து இக்கவனயீர்ப்புப் போராட்டமானது நடைபெறவுள்ளது.

இதன் பிரகாரம் வன்னிப் பிரதேச போர்முகத்தில் அகப்பட்டிருக்கின்ற மக்களது துன்ப துயரங்களை நீக்கும் வகையில்

1.உடனடிப் போர் நிறுத்தம் ஒன்றினை இருசாராரிடையேயும் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி கோரியும்
2.வன்னிப்பிரதேசத்தில் உணவின்றியும், மருத்துவ வசதிகளின்றியும், சுகாதார வசதிகளின்றியும் அவதியுறுகின்ற மக்களுக்கு அவ்வசதிகள் உடனடியாகக் கிடைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கும்படி கோரியும்
3.பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவையாற்றுகின்ற வெளிநாட்டு உள்நாட்டுத் தொண்டு நிறுவனங்களை வன்னிப்பிரதேசத்திற்குள் அனுமதிக்கும்படி கோரியும்
4.வன்னியில் இருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் இடம்பெயர்ந்து வருகின்ற மக்களது உயிர்ப் பாதுகாப்பிற்கும், அவர்களது இயல்பு வாழ்க்கைக்கும் ஏற்ற வகையிலான அனைத்து மனித விழுமிய நடவடிக்கைகளையும் எடுக்கக் கூடியதான ஐக்கியநாடுகளின் உதவி நிறுவனத்தின் நேரடிப் பாதுகாப்பில் அவர்கள் தங்கவைக்கப்பட வேண்டும் எனக் கோரியும்
5.இளவயதினரான ஆண் பெண் இருபாலாரையும் தரம்பிரித்து முகவரி தெரியாத முகாம்களுக்குள் முடக்குவதையும், விசாரணைகள் என்ற பெயரில் அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படுவதனைத் தடுத்து நிறுத்தக் கோரியும்
6.வன்னியில் மாத்திரமன்றிச் சிறப்பாக வடக்குக் கிழக்குப் பிரதேசங்களிலும் சிறிலங்காவின் ஏனைய பகுதிகளிலும் வாழ்கின்ற இளவயதினரது ஆட்கடத்தல்களையும், நீதியற்றவிதத்தில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுத் துன்புறுத்தப்படுவதனைத் தடுத்து நிறுத்தக் கோரியும்

இப்போராட்டமானது இடம் பெறுகின்றது. தமிழர் நாங்கள் பேரணியாய் ஓரணியில் திரள்வோம். தாயக உறவுகளின் பேரவலத்தை உலகிற்கு எடுத்துரைப்போம்.

ஒட்டாவா கனேடிய நாடாளுமன்றத்தின் முன்னால் March 05, 2009
வியாழக்கிழமை, முற்பகல் 11.00 தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை
தொடர்புகளுக்கு: ரொரன்ரோ: 416-623-9558 மொன்றியல்:514-880-0505 lhcu2009@gmail.com
அனைத்துலக மனிதகலாச்சாரப் பேரவை.




# சுய மன்னிப்பினை எதிர்க்கும் என்னை மன்னிக்கிறேன்!

நான் முன்பு செய்த, மன்னிக்கவே முடியாதவை என நாம் நம்பும் குற்றங்களுக்காக என்னை மன்னித்துவிட இப்போ நான் உடன்படுகின்றேன்.

நீ செய்த குற்றங்கள் மன்னிக்கப்பட முடியாது என எண்ணி எண்ணி மனம் புழுங்குகின்றாயா? உனது பலவீனமான நேரங்களில் நீ செய்த தவறுகள், பயத்தினால் செய்த பிழைகள், சில சமயங்களில் அடக்கமுடியாத கோபத்தின் வெறியினால் பிறருக்கும் உனக்கும் நீ விளைவித்த தீங்குகள், மிகப் பயங்கரமானவை. இவ்வாறு உன்னை நம்ப வைத்த, அல்லது நீ நினைத்த செயல்களுக்காக, உனக்கு மன்னிப்பு. கிடைக்கக்கூடாது. மன்னிப்பு என்பதே உனக்கு இனி இல்லை. இப்படி நீ நினைத்து இவ்வளவு நாளும் நீ சொன்ன பொய்களுக்கு நீ என்ன செய்யலாம் என்று நெஞ்சம் வேக மனம் வருந்துகின்றாயா? பிரச்சினைத் தீர்வினிற்கு வேறொரு வழியும் புலப்படாததால், தெரிந்து கொண்டு நீ செய்த பிழைகளுக்குப் பணயக்கைதியாகி துன்பத்தில் உழல்கின்றாயா? அன்பானவரே! இவற்றில் ஏதோ ஒன்றோ அல்லது சகலதுமோ உனக்குப் பொருந்தினால், நீ மட்டும் தனியாக இந்த நிலையில் இல்லை என்பதைப் புரிந்து கொள்.

பிறருக்குத் தீங்கு செய்யும் பெருங்குற்றங்கள் ஒருபோதும் மன்னிக்க முடியாதவை என நாம் நினைக்கின்றோம். பிரச்சினைத் தீர்வினிற்கு என்ன செய்வதென்று தெரியாது, எனக்குத் தெரியாது என்பதை ஒப்பும் கொள்ளாது, பயந்து தத்தளிக்கும் எமது செயல்பாடுகள், முன்பின் யோசிக்காமல் செயற்படுவதால் விளையும் ஆபத்துக்கள், பழிக்குப் பழியாக வஞ்சம் தீர்ப்பதற்கு நாம் புரிபவை. பணத்திற்காகச் செய்பவை, எம்மையும் பிறரையும் அவமரியாதை செய்து அழுத்தத்தைக் குறைப்பதற்காக நாம் பண்ணுபவை, மன்னிக்கவே கூடாதவை என நாம் நம்பும் இத்தகைய குற்றங்களைச் செய்தமைக்கு நிச்சயம் நாம் எம்மை மன்னித்திட வேண்டும்.

இவ்வாறு, மன்னிக்க முடியாதவை என எமக்கெதிராக நாம் தூக்கிப் பிடித்திருப்பவை, எமது சுயமதிப்பையும் இதயத்தையும் சுக்குநூறாக்கி விடும். சற்று ஆற அமர்ந்து சிந்தித்துப் பார்! உனது குற்றங்குறைகளிற்கு மன்னிப்பில்லாமல் இருப்பதற்கு, உண்மையில் உனது மனநோக்குத் தான் முக்கிய காரணம் என்பதை உணர்வாய்.

உனது கறைபட்ட சுயயோக்கியதை பற்றிய எண்ணங்களுடனும் உணர்வுகளுடனும் இன்றுவரை நீ போராடிக் கொண்டிருந்திருக்கலாம். நீ செய்த சில தவறுகளுக்கு உனக்கு ஒருபோதும் மன்னிப்பு கிடையாது என நீ முற்றுமுழுதாய் நம்பியிருக்கலாம். இன்று உனக்கே உனக்காக, உனது இதயத்தை திறந்து உனது மனநோக்கை மாற்று. சிந்தனை, சொல், செயலால் நீ செய்த தவறிற்காக நீ ஏற்படுத்திய சுயதண்டனைச் சிறையிலிருந்து, சுய மன்னிப்பினால் விடுதலை பெறு. மன்னிக்க முடியாதது வாழ்வில் ஒன்றுமே இல்லை. தன்னைச் சிலுவையில் கொன்றவரையும் யேசுபிரான் மன்னித்ததால் தான் அவர் இன்றும் வாழ்கின்றார், இல்லையா? சுய மன்னிப்பை எதிர்நோக்கும் என்னை மன்னித்திட இன்று நான் உடன்படுகின்றேன்.

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 143

*மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214*



லலிதா புரூடி

# “ரீமிக்ஸ் பாடல்களுக்கு...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

முடியும். இசை மட்டுமல்லாமல், எல்லா விடயங்களிலும் ஒவ்வொரு காலகட்டத்திலும் மக்கள் ரசனையில் மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டே இருக்கிறது. அதற்கேற்ப இசையும் விதவிதமான மாறுதல்களை சந்திக்கிறது. இந்த கால ஓட்டத்தில் கூடவே ஓடினால்தான் நாம் நிற்கமுடியும். இது விஞ்ஞானம் முன்னேறிய காலம், பாடல் வரிகள் அளவுக்கு இசைக் கருவிகள் உருவாக்கும் ஒவ்வொரு ஓசையும் முக்கியமானதாகிவிட்ட காலம். இதில், இளையராஜாவும் ஏ.ஆர்.ரகுமானும் நிறைய செய்துவிட்டார்கள். ராஜா சிம்பொனி இசையமைத்தும், ஏ.ஆர்.ரகுமான் ஆஸ்கார் அவோட் வாங்கியும் தமிழர்கள் இசையை உலகுக்கு கொண்டுசென்றுவிட்டார்கள். நமக்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். என்னைப் போன்று வளரும் இசையமைப்பாளர்கள் முன்னால், இவர்கள் உருவாக்கியுள்ள தமிழ் இசைப் பெருமையை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்லவேண்டிய கடமை காத்திருக் கிறது. அதற்கு, கால நதியில் முன்னோக்கித் தான் செல்லவேண்டும். பிற்காலத்துக்கு சென்று அங்கிருந்து தொடங்கக்கூடாது.

தமிழ் திரையுலகில் இளையராஜா ஒரு சகாப்தம். அவர் கிராமத்து வாழ்க்கையிலிருந்து வந்தவர். தமிழ் வாழ்க்கை அவருக்கு தெரியும். இப்பொழுது எந்த இசையமைப்பாளருக்கும் வாழ்க்கை தெரியாது. வாத்தியம் தான் தெரியும். டவுன்லோடு பண்ணிய ஒலிகளைத்தான் பயன் படுத்துகிறார்கள். எப்பொழுதும் இசைக் கருவிகளைக் கொண்டு இசையமைக்கும் பாடல் களுக்கும், படங்களுக்கும் தான் மக்கள் மத்தியில் வரவேற்பு இருக்கும். “பூ” அப்படி இசைக் கருவிகளை கொண்டு இசையமைத்த படம்தான்.

கேள்வி: ரிமிக்ஸ் பாடல்கள் இப்பொழுது அதிகமாக வருகிறதே?

எஸ்.எஸ்.குமரன்: கண்டிப்பாக நான் ஒரு போதும் ரிமிக்ஸ் பாடல்களுக்கு இசையமைக்கமாட்டேன். அதில் நான் மிகத் தெளிவாக இருக்கிறேன். பெரிய நடிகர்கள் படத்திற்கு நான் இசையமைக்கும் போது, அந்த நடிகர்களே ரீமிக்ஸ் பாடல் கேட்டால், அவர்கள் விரும்பும் விதமாக அதைவிட சிறந்த பாடல்களை என்ன கொடுக்க முடியும் என்பதை சொல்லுவேன். ரீமிக்ஸ் பாடல்களுக்கு இசையமைப்பாளர்கள் தேவையில்லை. அதை ஒரு இன்சினியரோ, கீபோர்டு பிளேயரோ செய்துவிடுவார்கள்.



கேள்வி: அடுத்து இசையமைக்கும் படம்?

எஸ்.எஸ்.குமரன்: நிறைய ஒப்பந்தம் ஆகியிருக்கிறேன். எது முதலில் வரும் என்று தெரிய வில்லை. “பூ” வெற்றியால் கிராமத்துக் கதைகளுக்கு இசையமைக்கச் சொல்லி கேட்டுதான் நிறைய பேர் வருகிறார்கள். ஆனால், அடுத்தும் நான் ஒரு கிராமத்து கதையை இசையமைத்தால் என்னை கிராமத்து இசையமைப்பாளன் என்று முத்திரை குத்தி விடுவார்கள் என்ற தயக்கம் எனக்கு இருக்கிறது. எனவே, ஒரு சிட்டி சப்ஜெக்ட் பண்ணப் போறேன். கூடிய விரைவில் அறிவிப்பு வரும்.




வீடு, வியாபார நிலையங்கள் வாங்க - விற்க

எந்தவித அடமானக் கடன்களும் பெற

Direct - 416.575.5055

Anton Jeeva, P.Eng.
Real Estate Broker
Principal Mortgage

RE/MAX

CONDO.FOR SALE
$199,900
McCowan & HWY 401
• Mccowan/Hwy 401 • 2 Bedrooms • 2 Washrooms • Elfs, Fridge, Stove, Newer Dishwasher, Built-In Microwave, Washer, Dryer, Window Coverings (Exclude Mbr Drapes), Broadloom W/ Laid .

Condo. for sale
$228,000
• 88 Corporate Dr . #914
• 401 / Mccowan
• 2 + 1 Bedrooms
• 2 Washrooms
• Fridge, Stove, B/I D/W, Washer, Dryer, Microwave, California Shutters

Condo. for sale
$175,000
• 2466 Eglinton Ave 1210
• Midland & Eglinton
• 2 + 1 Bedrooms
• 2 Full Washrooms
• Existing Elf's, Stove, New Fridge, New Dishwasher, Washer & Dryer.

HOUSE FOR SALE
$319,900
• 23 Stather Cres
• Mccowan & Denison
• 2 - Storey Brick house
• 3 +1 Bedrooms
• 3 Washrooms
• 2 kitchen
• 3 Parking
• Centreal Vacuum
• Basement - Sep. entrance

HOUSE For Sale
$334,888
151 Clarion Cres.
• McCowan & Highglen
• Bedrooms: 3
• Washroom: 3
• Fridge, Stove, Washer, Dryer, All Elf, All window coverings • Centreal vacuum

Condo. for sale
$249,900
•83 Mondeo Dr. #112
• Birchmount & Ellesmere
• 2+1 Bedrooms • 2 Washroom
• Fridge ,Stove ,Washer,dryer

HOUSE For Sale
$339,900
• 29 Sawdon Dr. Burns/Thickson,
• Whitby • Bedrooms: 4 + 2
• Washrooms: 4 • 2 parking
• Finished BSMT • Fridge, Stove, Washer, Dryer, All Window Coverings

Condo. FOR SALE
$229,000
• Ellesmere & Birchmount
•2 Bedrooms •2 Washrooms
Storage Unit! Appliances Incl - Billiards Room, Indoor Swimming Pool, Party Room, Basketball Court, Movie Room, Party Lounge, Bbq Terrace, Gym, Sauna, Guest Suites, Security Guard, & More

HOUSE For Sale
$339,000
• 154 Fitzgibbon Ave.
• Midland / Lawrence
• Bedrooms: 3 + 3
• Washrooms: 3 • 3 Stoves
3 Fridges , Washer , Dryer..

CDN Financial & Mortgages Inc.
Authorize Brokerage by FSCO

REMAX VISION REALTY INC.

Speciallized in Power of Sale Homes



NuTek COMPUTERS
www.nuTechComputer.com
☑ Virus Removal
☑ Internet Sharing
☑ Computer Tune Up
☑ Computer Repair
அனைத்து கணணி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES



NORTH AMERICAN INSTITUTE OF PHARMACEUTICAL TECHNOLOGY
Intensive and aggressive coaching for MCAT, DAT & PCAT
• MCAT (Medical College Admission Test Preparation
• PCAT (Pharmacy College Admission Test Preparation)
• DAT (Dental Admission Test Preparation)
• Advance Coaching in Chemistry, Biology & Physics Courses
416-457-1979 / 416-412-7374



ELECTRICAL WORKS
FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும்.
நியாயமான கட்டணம். தரமான சேவை.
வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.
தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880